
Osoul Center
www.osoulcenter.com
Rabwah



01

# நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்)

தமிழ்

அப்துர் ரஹ்மான் ஷீஹா

مركز أصول
Osoul Center
www.osoulcenter.com

Rabwah

# محمد رسول الله (صلى الله عليه وسلم)

التأليف
**عبد الرحمن الشيحة**

الترجمة
**أشرف زين العابدين**

Tamil
தமிழ்
تاميلي

ⓒ **المكتب التعاوني للدعوة والإرشاد و توعية الجاليات بالربوة، ١٤٤٢هـ**

**فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر**

الشيحة، عبدالرحمن بن عبدالكريم

محمد رسول الله صلى الله عليه وسلم – اللغة التاميلية. / عبدالرحمن بن عبدالكريم الشيحة؛ اشرف زين العابدين. - الرياض، ١٤٤٢هـ

١٢٨ ص، ١٤ سم x ٢١ سم

ردمك : ٩٧٨-٦٠٣-٨٢٩٧-٩٦-٤

١- السييرة النبرية　　أ. زين العابدين، اشرف (مترجم)　　ب. العنوان

**ديوي ٢٣٩　　١٤٤٢/٩٩٩**

**رقم الايداع: ١٤٤٢/٩٩٩**

**ردمك : ٩٧٨-٦٠٣-٨٢٩٧-٩٦-٤**

مركز أصول
Osoul Center
www.osoulcenter.com

உஸூல் நிறுவனம்

இந்நூலின் மூலப்பிரதி உஸூல் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டதாகும். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்துப் படங்களினதும் உரிமை இந்நிறுவனத்தையே சாரும். இதில் எவ்வித மாற்றங்களும் செய்யாமலும், வெளியீட்டளரின் பெயரைக் (உஸூல் நிறுவனம்) குறிப்படும் நிபந்தனையுடனும் இதனை அச்சிட்டு வெளியிட எமது நிறுவனம் அனைத்து முஸ்லிம்களுக்கும் அனுமதியளிக்கின்றது. அச்சிடும் போது இந்நிறுவனத்தின் அச்சுத் தரங்களைக் கடைபிடிக்குமாறும் நிறுவனம் வேண்டிக் கொள்கின்றது.

+966 11 445 4900

+966 11 497 0126

P.O.BOX 29465 Riyadh 11457

osoul@rabwah.sa

www.osoulcenter.com

بسم الله الرحمن الرحيم

*அளவற்ற அருளாளனும்*
*நிகரற்ற அன்புடையோனுமாகிய*
*அல்லாஹ்வின் பெயரால்...*

مركز أصول
Osoul Center
www.osoulcenter.com

உஸூல் நிறுவனம்

இந்நூலின் மூலப்பிரதி உஸூல் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டதாகும். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்துப் படங்களினதும் உரிமை இந்நிறுவனத்தையே சாரும். இதில் எவ்வித மாற்றங்களும் செய்யாமலும், வெளியீட்டாளரின் பெயரைக் (உஸூல் நிறுவனம்) குறிப்படும் நிபந்தனையுடனும் இதனை அச்சிட்டு வெளியிட எமது நிறுவனம் அனைத்து முஸ்லிம்களுக்கும் அனுமதியளிக்கின்றது. அச்சிடும் போது இந்நிறுவனத்தின் அச்சுத் தரங்களைக் கடைபிடிக்குமாறும் நிறுவனம் வேண்டிக் கொள்கின்றது.

+966 504 442 532

+966 11 445 4900

+966 11 497 0126

P.O.BOX 29465 Riyadh 11457

osoul@rabwah.com

www.osoulcenter.com

# முன்னுரை

புகழனைத்தும் வானங்கள், பூமி அதிலுள்ளவற்றின் படைப்பாளன், அகிலத்தாரின் இரட்சகன் அல்லாஹ்வுக்கே. சாந்தியும் சமாதானமும் அகிலத்தாருக்கு அருட்கொடையாக இறுதியாக அனுப்பப்பட்ட, அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவரைப் போன்றே மனிதர்களுக்கு நேர்வழி காட்டவும், இருள்களிலிருந்து ஒளியின்பால் அவர்களை மீட்டெடுக்கவும் இறைவனால் அனுப்பப்பட்ட அனைத்து நபிமார்கள், ரஸூல்மார்கள் மீதும் உண்டாவதாக.

இதோ நாம் 'உஸூல் சர்வதேச அழைப்பாளர் மையம்'ல் இருக்கின்றோம். எமது புதிய வெளியீட்டின் மூலம் வாசகர்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். எமது இவ்வெளியீடுகள் அனைத்தினதும் குறிக்கோள் ஒன்றுதான். அது : இஸ்லாத்தின் யதார்த்தத்தையும், அதன் சிறப்பம்சங்களையும் தெளிவு படுத்துவதன் மூலம் சகல மக்களுக்கும் இஸ்லாத்தை முன்வைப்பதாகும். மேலும் மனிதர்களது அனைத்து வித பிரச்சினைகளுக்கும் யதார்த்தமான, பயனுள்ள தீர்வுகளை முன்வைக்கும் ஒரே மார்க்கம் இந்த இஸ்லாம்தான். நாம் எவ்வாறு உருவானோம்? ஏன் உருவாக்கப்பட்டோம்? எங்கே செல்லப் போகிறோம்? போன்ற மனித சமூகம் விடைகாணத் துடிக்கும் பல சிக்கலான வினாக்களுக்கு தெளிவான, உறுதியான பதில்களை வழங்கும் ஒரே மார்க்கம் இந்த இஸ்லாம்தான். அத்துடன் நபி மூஸா (அலை) , நபி ஈஸா (அலை) உட்பட அனைத்து நபிமார்களையும் பாரபட்சமின்றி நேசிக்குமாறு தன்னைப் பின்பற்றுவோரைத் தூண்டும் ஒரே மார்க்கம் இந்த இஸ்லாம் மாத்திரம்தான்.

மேலும் இஸ்லாத்திற்கெதிரான குற்றச்சாட்டுகளை மறுத்து, அதனைச் சுற்றி எழுப்பப்பட்டுள்ள சந்தேகங்களை நிவர்த்தி செய்வதிலும் எமது இந்த வெளியீடுகள் அக்கறை கொண்டுள்ளன. நாம் இங்கு முன்வைக்கும் அனைத்தையும் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளக்கூடிய, உள்ளம் சாந்தமடையக்கூடிய தெளிவான ஆதாரங்கள் மூலம் பலப்படுத்துவதில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளோம். அல்ஹம்து லில்லாஹ். இதெல்லாம், நவீன காலத்தில் மிக வேகமாகப் பரவிவரும் இந்த மகத்தான இஸ்லாமிய மார்க்கத்தின் பால் மக்களுக்கு வழிகாட்டவே. இஸ்லாத்தின் இவ்வேகத்தை மதங்களின் வளர்ச்சி பற்றி 2015ம் ஆண்டு (ஙநற சுநளநயசஉா ஊநவெநச) எனும் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையும் உறுதிப்படுத்துகின்றது.

தற்போது வாசகர்களின் கையில் தவழ்வது 'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்' எனும் அழகிய நூல். இறுதித்தூதர் (ஸல்) அவர்கள் பிறந்தது முதல், அல்லாஹ் அகிலத்தாருக்கு அருட்கொடையாகவும் நேர்வழியாகவும் இறக்கிய இந்த இஸ்லாமியத் தூதை மக்களுக்கு எத்திவைத்து, உபதேசித்து, அமானிதத்தை நிறவேற்றியதன் பின் அல்லாஹ்விடம் போய்ச் சேரும் வரையிலான அன்னாரது முழு வரலாற்றையும் அலசுகின்றது.

நபித்துவத்தின் சூழலை வர்ணிக்கும் இந்நூலின் பக்கங்களில் : நபி (ஸல்) அவர்களின் உயர்ந்த குணங்களையும், பணிவான அவர்களுடைய வாழ்கை முறைகளையும் அறிவதற்காக இந்நூலுடனேயே நாமும் ஒன்றியிருப்போம். மேலும், தனது சிறு குடும்பம், மனைவிமார், தோழர்கள், தம்மைச் சுற்றியுள்ள பலதரப்பட்ட மக்கள் அனைவருடனும் எவ்வாறு பழகினார்கள்?, அல்லாஹ்வுடைய மார்க்கத்தை நிலைநாட்ட எவ்வாறு உண்மையாகப் போராடினார்கள்?, அச்சந்தர்ப்பங்களின் எதிரிகளுடனான அவர்களின் நிலைப்பாடு எவ்வாறிருந்தது?, அதில் யாரும் வெறுக்காத உயர்ந்த சாணாக்கியம் மிக்க நடவடிக்கைகள் எவ்வாறிருந்தன?, அறிவுடனும், அழகிய உபதேசத்துடனும் அவர்கள் அழைப்புப் பணியில் கடைபிடித்த தனித்துவமான முறை போன்ற இன்னோரன்ன விடயங்களை இந்நூலில் அறிந்து கொள்ளலாம். மனிதர்களுக்கு மத்தியில் நீதம், உபகாரம், பாதுகாப்பு உருவாக்குவதில் எந்தளவு கரிசனை எடுத்தார்கள் என்பதையும் இதில் அவதானிக்கலாம். உண்மையாகவே 'அகிலத்தாருக்கு அருட்கொடையாகவே அன்றி உம்மை நாம் அனுப்பவில்லை' (21:107) என்று இறைவன் கூறுவதைப் போன்றே நபிகளாரும் திகழ்ந்தார்கள்.

முஸ்லிம் வாசகர், நபியவர்களைப் பற்றி மென்மேலும் அறிந்து, அவர்களை நேசிக்கவும், பின்பற்றவும் போதியளவு தகவல்களை இந்நூலில் பெற்றுக் கொள்ளலாம் என நாம் எதிர்பார்க்கும் அதேவேளை, முஸ்லிமல்லாதோர் இந்நூலை வாசிக்கும் போது இன்பமடைவர் என்றும், இஸ்லாத்தைப் பற்றியும் நபியைப் பற்றியும் மென்மேலும் அறிய இந்நூல் உதவுமென்றும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

பொறுயியலாளர் ∴ பாஸில் இப்னு அப்துல்லாஹ் அல்பௌஸான்

நிர்வாக இயக்குனர்- உஸூல் சர்வதே அழைப்பாளர் மையம்



# உள்ளடக்கம்


முகவுரை 11

யார் அந்த இறைத்தூதர் முஹம்மத் (ஸல்)? 19

அவர்களது பிறப்பும், வளர்ப்புப் பருவமும் 25

நபி (ஸல்) அவர்களின் தோற்றம் 39

நபி (ஸல்) அவர்களின் குணாதிசயங்கள், பண்புகள் 41

நபி (ஸல்) அவர்களின் சில ஒழுக்கங்கள்: 67

நடுநிலைவாதிகளின் சான்றுகள் 73

நபி (ஸல்) அவர்களின் மனைவியர்கள் 77

இறைவேதங்களில் முஹம்மத் நபி (ஸல்) பற்றி 85

பகுத்தறிவு ரீதியான சில ஆதாரங்கள் 89

நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்று சாட்சியம் பகர்வதின் கருத்து 109

முடிவுரை 119



# முகவுரை

நிச்சயமாக நாம் மனித சமுதாயம் முழுவதற்கும் இறைதூதுவரான முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி பேசுகின்ற போது, சமகாலத்திலும் சரி அதற்கு முன் சென்றுபோன காலங்களிலும் சரி வரலாறறிந்த ஒரு மகத்தான முக்கியஸ்த்தரைப் பற்றி பேசுகின்றோம்.

அவர் பற்றிய இக்கருத்து வெறுமனே எதிர்பாராதவிதமாக தோன்றியதல்ல, ஏனெனில் யாரொருவர் அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் படித்து அவரது நற்குணங்களை சீரான வாழ்க்கையை அறிந்து மேலும் மதவெறி, தன்னிச்சைப்போக்கு ஆகியவற்றை தன்னிடமிருந்து களைந்து அவரது வாழ்க்கை வரலாற்றை நோக்குகிறாரோ அவர் நாம் மேற்ச்சொன்ன அவர் பற்றிய கருத்தை சரியென ஆமோதித்தவராவார் மேலும் முஸ்லிமல்லாத அனேக நடுநிலைவாதிகள் இக்கருத்தை ஆமோதித்துள்ளனர்.

நூருல் இஸ்லாம் என்ற சஞ்சிகையில் ஹஸன் அலி என்ற ஆசிரியர் கூறும்போது: பிராமண ஹிந்து நண்பர் ஒருவர் தன்னிடம் முஹம்மத் (ஸல்) அவர்கனைப்பற்றி குறிப்பிடும் போது நான் இஸ்லாத்தின் தூதரை உலகிலேயே மகத்தானதொரு மனிதராகவும் ஒரு சம்பூரணமிக்கவராகவும் காண்கிறேன் என்றார். அவரிடம் நீர் இவ்வாறு கூறக்காரணமென்ன என்று கேட்டதற்க்கு அந்தப் பிராமணர் கூறிய பதில்: ஏனெனில் நான் இஸ்லாத்தின் தூதரிடத்தில் பலதரப்பட்ட பண்புகளையும் நற்குணங்களையும் சிறந்த நன்னடத்தைகளையும் காண்கிறேன். உலக வரலாற்றிலேயே ஒரே சமயத்தில் இத்தகைய பண்புகள் ஒரு மனிதரிடத்தில் ஒன்று சேர்ந்திருப்பதை நான் கண்டதில்லை. உலகமே தன் காலடியில் மண்டியிட்டுக் கிடக்கும் ஒரு அரசராக இருக்கிறார், தான் விரும்பிய

விதத்தில் விடயங்களை செயல்படுத்த முடியும். அவர் இந்நிலையிலும் கூட மிகப்பணிவானவராக அவர் எந்த ஒன்றிலும் ஆற்றல் பெறாதவர் போலும், எல்லா விதமான ஆற்றல்களும் அவருடைய படைப்பாளன் அல்லாஹ் ஒருவனிடமே உண்டு என்பதாகக் காண்கிறார். மேலும் அவரை ஒரு மாபெரும் செல்வந்தராக நோக்குவோமானால், எந்த அளவுக்கெனில் அவருடைய தலைநகரை நோக்கி ஒட்டகங்கள் சுமக்க முடியாத சுமைகளோடு கஜானாக்களை சுமந்து வந்து சேர்ந்த வண்ணமிருந்தன. ஆனால், அவரோ தேவையுள்ளவராகவே இருந்தார். அவருடைய வீட்டில் பலநாட்கள் உணவு சமைப்பதற்கு ஏதுமில்லாததால் அடுப்பு மூட்டப்படாமலே கிடந்தது. பலநாட்கள் பட்டினியோடு இருந்து விடுவார்கள். மேலும் நாம் அவரை மிகப்பெரும் போர்த்தலைவராக நோக்குமிடத்து, பலங்குன்றிய ஆயுதங்களுடனும், குறைந்த எண்ணிக்கையிலான படையினருடனும் தலைமைத்தாங்கிச் சென்று ஆயிரக்கணக்கான போர்வீரர்களையும், ஆயுதபலம்பொருந்திய எதிரிப்படையினரை மிக மோசமான படுதோல்வியடையச் செய்துவிடக் கூடியவராகவும், தம்மோடு எதற்கும் துணிந்த, வீரமிக்க ஆயிரக்கணக்கான தம் தோழர்கள் இருக்கக்கூடிய சூழ்நிலையிலும் கூட மன அமைதியோடும், எவ்வித மனக்குழப்பமும் இல்லாமல் தூய எண்ணத்தோடு சமாதான ஒப்பந்தங்களில் கைசாத்திடக்கூடியவராக இருந்துள்ளார்கள்.

மேலும் அவரை எதற்கும் அஞ்சா வீரராக நாம் காணலாம். எதிரிகளின் எண்ணிக்கையைப்பற்றி எந்த வித அச்சமும் கொள்ளாது எதிரிகள் ஆயிரமாயிரம் இருந்த போதும் தனித்து நின்று தாக்குப்பிடிக்க வல்லவர். இருந்துமவர் இளகிய மனம் கொண்டவர், இரக்க சிந்தையாளர், மன்னிக்கும் மனப்பான்மை கொண்டவர். ஒரு துளி இரத்தம் சிந்துவதை விட்டும் பத்தியமானவர், மேலும் அவர் அரபு தீபகற்பத்தை பற்றியே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் சிந்திக்கக்கூடியவராக காணலாம். இருப்பினும் தம் வீட்டு வேலைகள், மனைவி, மக்களுக்கு செய்யவேண்டிய கடமைகளில் எக்குறையும் வைக்காதவராக இருந்துள்ளார்கள். அதே போன்று ஏழை எளியவர்களின் விடயத்திலும் கவனம் செலுத்தியும் வந்துள்ளார்கள்.

மேலும் யாரெல்லாம் தம்மை படைத்தவனை மறந்து அவனைவிட்டும் தடுத்துக் கொண்டுமிருந்தார்களோ அவர்களை கவனத்தில் கொண்டு அவர்களை சீர் திருத்துவதில் ஆர்வம் (ஆசை) கொண்டவராகவும் இருந்துள்ளார்கள்.

ஆக மொத்தத்தில், அவர் உலக விடயங்கள் அனைத்திலும் முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய ஒரு மனிதராக விளங்கியிருந்தார்கள். இருந்த போதிலும் உலகைத்துறந்து, இறைவனை நாடக்கூடியவராக இருந்துள்ளார்கள். அவர்கள் உலகிலே வாழ்ந்த போதும் அதில் மோகமற்றவராக இருந்துள்ளார்கள். ஏனெனில் அவர்களுடைய உள்ளம் அல்லாஹ்வுடன் தொடர்புடையதாகவும், அவன் பொருந்திக் கொள்ளக்கூடிய விடயங்களில் தொடர்புடையதாகவுமே இருந்துள்ளது. அவர்கள் தமது சொந்த விடயங்களுக்காக வேண்டி யாரையும் பழி தீர்த்தது கிடையாது. அவர்கள் தனது எதிரிகளுக்குக் கூட நன்மையையே விரும்பியுள்ளார்கள். ஆனால் அல்லாஹ்வின் எதிரிகளை ஒரு போதும் மன்னித்து விட்டுவிட மாட்டார்கள். மேலும் அவர்கள், அல்லாஹ்வின் பாதையை விட்டும் தடுக்கக்கூடியவர்களை, எச்சரித்த வண்ணமும், மேலும் நரக வேதனையை கொண்டும் பிரஸ்தாபித்த வண்ணமுமே இருந்துள்ளார்கள்.

மேலும் அவர்களை உலகப்பற்றற்றவராகவும், இறைவணக்கத்தில் ஈடுபாடுடையவராகவுமே காணலாம். அல்லாஹ்வை நினைவுகூர்வதற்கும், அவனிடத்தில் தன் விடயங்களை ஒப்புவிப்பதற்கும் இரவில் நின்று வணங்குவார்கள்.

மேலும் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை நீங்கள் மனக்கண்முன்னே தோற்றுவித்துப் பார்த்தால், அவர்களை ஒரு வாளெடுத்துப் போரிட்ட ஒரு போர் வீரராகவும், மேலும் ஒரு இணையற்ற இறைத்தூதராகவும், பாதுகாக்கப்பட்ட நபியாகவும், எந்த அளவுக்கெனில், பலம் பொருந்திய பல சமூகங்களையும், பல நாடுகளையும் வெற்றி கொண்ட நிலையில் அவர்களை ஒரு அரபிகளின் தலைவர் என்றோ, அரபு நாட்டின் அதிபதி என்றோ அழைக்க எம் உள்ளத்தில் தோன்றும், அதே சமயம் அவர்கள் ஒரு சாதாரண அறையில் ஈச்ச மர ஓலைகளினால் நெய்யப்பட்ட பாய்மீது படுத்து,

தனது தலையணையாக சருகுகள் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு பொதியை வைத்து உறங்கக் கூடியவர்களாகவே இருந்துள்ளார்கள்.

மேலும் அரபு தேசத்தின் நாலா புறங்களிலிருந்தும் செல்வங்களும், பொருட்களும் அவர்களை நோக்கி வந்த வண்ணமும் அவைகள் அவர்களது பள்ளி வாயிலின் முற்றத்தில் மலைப் போல் குவிந்தும் கிடக்கின்ற நிலையிலும் கூட, அவர்களது மனைவி, மக்கள், குடும்பத்தினர் அனைவரும் வறுமையிலும், ஏழ்மையிலும், கஷ்டத்திலும் உழன்று கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள், நபி முஹம்மத் (ஸல்) அவர்கள், போரில் பிடிபட்ட கைதிகளை முஸ்லிம்களுக்கு மத்தியில் பங்கு போட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கும் வேளை, தனது அருமை புதல்வியார் ஃபாத்திமா (ரலி) நாயகியவர்கள், தமது தந்தையார் நபிகளாரிடம், தமது வேலைப்பளுவை எல்லாம் எடுத்துக்கூறி தமக்கும் ஒரு அடிமைப் பெண்ணை வீட்டுப்பணிக்காக கோரிய போது, தனது மகளுக்கு அருமை நபி (ஸல்) அவர்கள் பணிப் பெண்ணுக்குப் பதிலாக சில திக்ருகளைச் சொல்லிக்கொடுத்து, அவைகளை இரவு படுக்கைக்குச் செல்லுமுன் ஓதி விட்டுப் படுக்கும் படியும் அவைகள் பணிப் பெண்ணைவிடவும் சிறந்ததென்று சொல்லியும், தனது மகளை வெறும் கையோடு திருப்பி அனுப்பிவைத்தார்கள்.

ஒரு நாள், முஹம்மது (ஸல்) அவர்களின் அருமைத்தோழர், உமர் (ரலி) அவர்கள் அண்ணலார் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். அவர்கள் குடியிருக்கும் எளிமையான அந்த அறையினுள் தனது பார்வையை செலுத்தினார்கள், அவ்வறையினுள் ரஸூல் (ஸல்) அவர்கள் படுத்துறங்கும் ஈச்ச ஓலையால் பின்னப்பட்ட ஒரு பாயும், ஒரு பானையினுள் சிறிது கோதுமையும், அதற்கு அருகாமையில் ஒரு தூணில் தண்ணீர் பையொன்றும் மாத்திரமே தொங்கிக்கொண்டிருந்தது. அரபு தேசத்தின் அரைவாசிக்கு மேல் அவர்களுக்கு அடிபணிந்திருந்த வேளை அவர்களுக்கென்று சொந்தமாயிருந்தவைகள் அவைகள் மாத்திரமே. இத்தகைய நிலையில் உலகிற்கு அருளாக அனுப்பப்பட்டுள்ள இறைவனின் இறுதித்தூதர் இருப்பதைக் கண்ட உமர் (ரலி) அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியாமல் அழுதுவிட்டார்கள்.

இதனை கண்ணுற்ற நபி (ஸல்) அவர்கள், உமரே ஏன் அழுகிறீர்கள்? என்றார்கள். நான் அழாமல் என்ன செய்ய முடியும்? ரோம், பாரசீக மன்னர்களெல்லாம் உலக சுகங்களை அனுபவிக்கின்றார்கள், அதன் இன்பங்களில் மூழ்கிக் கிடக்கிறார்கள். ஆனால், அல்லாஹ்வின் தூதரோ ஏதுமற்றவர்களாக இருக்கிறீர்களே என்றார்கள். உமரை நோக்கி நபி (ஸல்) அவர்கள் உமரே ரோம், பாரசீக மன்னர்களுக்கு உலக வாழ்க்கையின் இன்பமும், எங்களுக்கு முழுமையாக மறுஉலக வாழ்க்கையில் சுவர்க்க இன்பமும் கிடைக்கவிருப்பதை நீர் பொருந்திக்கொள்ளவில்லையா? என்று ஆறுதல் கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கொள்வதற்காக தமது படையை திரட்டிக்கொண்டு வந்து கொண்டிருந்த போது, அபூசுப்யான் அப்பாஸ் (ரலி) அவர்களின் ஒட்டகத்தின் பின்னால் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் இருவரும் இக்காட்சியை பார்த்தவண்ணமிருந்தார்கள். அபூசுப்யானோ தனது பழைய மார்க்கத்திலேயே இந்த நிமிடம் வரை இருந்து கொண்டிருக்கிறார், மக்காவை நோக்கி இவர்கள் செல்வதை எவராலும் தடுக்க முடியாத அளவுக்கு பெரும் கூட்டமாக படைப்பலத்தோடு வந்து கொண்டிருப்பதை கண்ட போது, தனது நண்பர் அப்பாஸ் (ரலி) யை நோக்கி அபூ சுப்யான் கூறுகிறார். உனது சகோதரனின் மகன் மாபெரும் ஆட்சியாளராக ஆகிவிட்டாரே என்று. அதற்கு அப்பாஸ் (ரலி) அபூசுப்யானே! ஆட்சியோ, அதிகாரமோ இது எதுவுமே இல்லை, அது தூதுத்துவமும் நபித்துவமுமாகும் என்றார்.

அதீ அத்தாயீ: இவர் கொடைக்கும், விருந்தோம்பலுக்கும் பெயர் போன உதாரணப் புருஷரான ஹாதம் அத்தாயீ அவர்களின் புதல்வராவார். இவர் தாயீ குலத்தவரின் தலைவராக இருந்தார். இவர் கிருஸ்துவ மார்க்கத்தவராவார். ஒரு சமயம் அவர் நபி (ஸல்) அவர்களின் சபைக்கு சமூகமளித்தார். அப்போது அவரின் தோழர்கள் நபி (ஸல்) அவர்களை ஆயுதம் தாங்கியவர்களாகவும், மெய்ப்பாதுகாவலர்களாகவுமிருந்து கண்ணியப்படுத்துவதையும், மரியாதை செய்வதையும் கண்டு, இவர் இறைத்தூதரா அல்லது ஒரு குடியரசின் தலைவரா? என்ற குழப்பம் அவருக்கு ஏற்பட்டது. அவர் இக்குழப்பத்திலிருந்து விடுபடுவதற்கு முன் மதீனா நகரின் ஒதுக்குப்புறமாக இருந்து ஒரு அடிமைப்

பெண் நபிகளாரின் திருச்சமூகம் வந்து இறைவனின் தூதரவர்களே! உங்களை ஒரு தேவைக்காக அனுப்ப விரும்புகிறேன் என்றார்கள். நபி (ஸல்) அப்பெண்மணியிடம், ஆம் மதீனாவில் எந்தப் பகுதியானாலும் சரி நான் உங்களோடு வந்து உங்கள் தேவையை நிறைவேற்றித் தருகிறேன் என்று சொல்லி, அவ்வடிமைப் பெண்மணியோடு சென்று அவரின் தேவையை செய்து கொடுத்துவிட்டு திரும்பி வந்தார்கள் மாநபி (ஸல்) அவர்கள். நபி (ஸல்) அவர்களின் இப்பணிவான நிலையைக் கண்டு அதீ அத்தாயீ அவர்களுக்கு சத்தியம் தெளிவானது, உண்மை உதித்தது. நிச்சயமாக இவர் கொண்டுவந்துள்ள மார்க்கம் இறைவனிடமிருந்து வந்துள்ளதாகுமென்று உறுதியாக நம்பி, பின்பு தான் அணிந்திருந்த சிலுவையை கழற்றி எறிந்து விட்டு இஸ்லாத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி, முஸ்லிமல்லாத ஆய்வாளர்களின் சில கருத்துக்களை இந்நூலின் பிற்பகுதியில் நாம் குறிப்பிடவுள்ளோம். நாம் முஸ்லிம்கள் நபி(ஸல்) அவர்களின் தூதுத்துவத்தை, நபித்துவத்தை பூரணமாக நம்பி ஈமான் கொண்டுள்ளோம். நபி (ஸல்) அவர்களை பற்றிய மாற்றார்களின் கருத்துகளின் பக்கம் தேவையற்றவர்களாக நாம் இருந்த போதும், அவர்களுடைய கருத்துகளை குறிப்பிடுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன:-

### முதற்காரணம்:

முஸ்லிமல்லாத இஸ்லாம் பற்றிய ஆய்வாளர்களின் சில கருத்துகளை நாம் குறிப்பிடுவதின் மூலம் பெயரளவில் மாத்திரமே இஸ்லாத்தை தெரிந்து வைத்துள்ள சில முஸ்லிம்கள், அவைகளை வாசிப்பதற்காகவும், தமது நபியைப் பற்றி, நேர்வழிகாட்டியைபற்றி முஸ்லிமல்லாதவர்கள் என்ன கூறியுள்ளார்கள் என்பதை நம்மவர்கள் அறிந்து நபி (ஸல்) அவர்களை பின்பற்றாமல், தமது வாழ்க்கையில் முன்மாதிரியாக எடுத்து நடக்காமல் இருந்து விட்டதை உணர்ந்து, தமது மார்க்கத்தின் பக்கம் உண்மையாக திரும்பிவிடுவதற்கு ஒரு ஆரம்பமாக இருப்பதற்காக.

## இரண்டாம் காரணம்:

முஸ்லிமல்லாத இஸ்லாம் பற்றிய ஆய்வாளர்களின் கருத்துக்களை நாம் குறிப்பிடுவதின் நோக்கம் என்னவெனில், முஸ்லிமல்லாதவர்கள் அவர்களின் சமூகத்தைச் சேர்ந்த, அதே பாஷையை பேசக்கூடியவர்கள் நமது நபியைப் பற்றி என்ன கூறியிருக்கிறார்கள் என்பதனை வாசிப்பதன் மூலம் இந்த நபி (ஸல்) அவர்கள் பற்றிய உண்மை நிலையை அறிந்து விளங்கிக்கொள்வதற்கும், இதன் மூலம் அவர்கள் இஸ்லாத்தின் பக்கம் திரும்புவதற்கும், இந்த மகத்தான இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஒரு ஆரம்பமாக இருப்பதற்காக.

அவர்களிடம் என்னுடைய பணிவான வேண்டுகோள் யாதெனில்: தமது சுயபுத்தியை அடகு வைத்துவிட்டு, பிறர் புத்தியைக்கொண்டு சிந்திக்காமலும், மதவாதத்தை விட்டு நடுநிலையாக சிந்திப்பதன் மூலமும் தவறான பாதையிலிருந்து, நேரான பாதையையும், பொய் எது? உண்மை எது? என்பதையும் ஆராய்ந்து விளங்கிக் கொள்ள முயல வேண்டும் என்பதே.

இது போன்றவர்களுக்கு என்னுடைய பிரார்த்தனை என்னவெனில், உண்மையின் பக்கம் அல்லாஹ் அவர்களை வழிகாட்டி, அவர்களின் உள்ளத்தையும் திறந்து, நேரான வழியின் பக்கம் செலுத்துவானாக!



# யார் அந்த இறைத்தூதர் முஹம்மத் (ஸல்)?

## குலம்:

அவர் அபுல்காஸீம் (காஸீமின் தந்தை) என்று அழைக்கப்படக்கூடிய அப்துல்லாவின் மகன் முஹம்மத் (ஸல்) ஆவார்கள், அவர்களின் பாட்டனார் பெயர் அப்துல் முத்தலிப். அவர்களின் குலத் தொடர் நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் மகன் நபி இஸ்மாயீல் (அலை), அவரின் மகன் அத்னானைச் சென்றடைகின்றது. அவர்களின் தாயார் வஹ்பின் மகளார் ஆமினாவாகும். அவர்களின் குலத்தொடரும் நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் மகன் நபி இஸ்மாயீல் (அலை) அவரின் மகனான அத்நானைச் சென்றடைகின்றது.

இதுபற்றி நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் இஸ்மாயீல் (அலை) அவர்களின் மகனிலிருந்து கினானா வம்சத்தை தேர்ந்தெடுத்தான், பின் கினானா வம்சத்திலிருந்து குரைஷி வம்சத்தைத் தேர்ந்தெடுத்தான், பின் குரைஷி வம்சத்திலிருந்து பனூ ஹாஷிம் வம்சத்தைத் தேர்ந்தெடுத்தான், பின் என்னை பனூ ஹாஷிம் வம்சத்திலிருந்து தேர்ந்தெடுத்தான் என்றார்கள்.

இதன் மூலம் நபி (ஸல்) அவர்கள் பூமியில் தோற்றுவிக்கப்பட்ட வம்சங்களிளேயே சிறந்த வம்சத்தையுடையவராவார்கள். இது பற்றி அவர்களின் எதிரிகளே சாட்சி வழங்கியுள்ளார்கள். அபூ சுப்யான், இவர்தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர், நபி (ஸல்) அவர்களின் மிகப்பெரும் எதிரியாக இருந்தவர். இவர் இது பற்றி ரோமாபுரியின் மாமன்னரிடத்தில் பின்வருமாறு சாட்சியம் வழங்குகிறார்:

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கிறார்கள். நபி

(ஸல்) அவர்கள் ரோமாபுரியின் மன்னர் ஹர்கலுக்கு இஸ்லாத்தின் பக்கம் வர அழைப்பு விடுத்து, ஒரு கடிதத்தையும் எழுதி, அதனை திஹ்யதல் கல்பீ என்ற நபித்தோழர் கையில் கொடுத்து, இதனை பஸ்ராவின் ஆட்சியாளர் மூலமாக ரோமாபுரி மன்னரிடம் சமர்ப்பிக்குமாறு கொடுத்தனுப்பி வைக்கிறார்கள். அதுசமயம் ரோமாபுரி மன்னர் பாரசீகப் படையினரிடமிருந்து தமது நாட்டை காப்பாற்றியதற்காக பாலஸ்தீனத்திலுள்ள பைத்துல் முகத்தஸ் பள்ளிவாசலை தரிசிப்பதற்காக சென்றிருந்தார். இத்தருணத்தில் நபி (ஸல்) அவர்களின் கடிதம் ஹர்கலை வந்தடைந்தபோது அதனைப் படித்த பின்னர், இங்கு அவரது கூட்டம், குடும்பத்தை சேர்ந்த யாராவது இருக்கிறார்களா? என்று தேடிப்பார்த்து என்னிடம் அழைத்து வாருங்கள். அவ்விறைத்தூதரைப்பற்றி நான் விசாரிக்க வேண்டும் என்று ஒருவரை அனுப்பிவைத்தார்.

இதுபற்றி இப்னு அப்பாஸ் (ரலி) கூறியதாவது: அபூ சுப்யான் என்னிடத்தில் பின்வருமாறு அறிவித்தார்: குரைஷிகளில் சிலர் ஒட்டகங்களில் வியாபாரிகளாக சிரியா நாட்டிற்கு போயிருந்தார்கள். அக்குரைஷி வணிகக்கூட்டத்தில் ஒருவராக சென்றிருந்த அபூ சுப்யானை, ஹெர்குளிஸ் (ரோமாபுரி மன்னர்) பைத்துல் முகத்தஸ் ஆலயத்தில் முகாமிட்டிருந்த தம்மிடம் அழைத்து வரும்படி தூதரை அனுப்பினார். அத்தூதர்கள் அபூ சுப்யானிடம் வந்து சேர்ந்தார்கள். ரோமாபுரியின் அரசப் பிரதிநிதிகள் சூழ அமர்திருக்கும் தமது அவைக்கு அவர்களை அழைத்திருந்தார், மன்னர் தமது மொழி பெயர்ப்பாளரையும் அழைத்து வரச் சொன்னார்.

அபூ சுப்யான் இது குறித்துக் கூறும் போது: (எங்களிடம்) மன்னர் தம்மை இறைவனின் திருத்தூதர் என்று கருதிக் கொண்டிருக்கும் அம்மனிதருக்கு, எங்களில் மிக நெருங்கிய உறவினர் யார்? எனக் கேட்டார். நானே அவருக்கு மிக நெருங்கிய உறவினர் எனக்கூறினேன். உடனே மன்னர் (தம் அதிகாரியிடம்) அவரை என் அருகே அழைத்து வாருங்கள் அவருடன் வந்திருப்பவர்களையும் என் பக்கத்தில் கொண்டு வந்து அவருக்குப் பின்னால் நிறுத்துங்கள்? என்று ஆணையிட்டார். பின்னர் தமது மொழி பெயர்ப்பாளரிடம் நான்

அந்த மனிதரைப் பற்றி (அபூ சுப்யானாகிய) இவரிடம் கேட்பேன், இவர் என்னிடம் பொய்யுரைத்தால் அதை என்னிடம் கூறி விடவேண்டும் என்று அவருடன் வந்திருப்பவர்களிடம் மொழிபெயர்த்துச் சொல் என ஆணையிட்டார். நான் பொய் கூறியதாக இவர்கள் சொல்லி விடுவார்களோ என்ற அச்சம் மாத்திரம் அப்போது எனக்கு இல்லை என்றால், இறைவன் மீது ஆணையாக நபி (ஸல்) அவர்களைப் பற்றிப் பொய்யுரைத்திருப்பேன்.

பிறகு, மன்னர் என்னிடம் கேட்ட முதல் கேள்வி, உங்களில் அவரது குலம் எத்தகையது? அதற்கு நான், அவர் எங்களில் சிறந்த குலத்தைச் சார்ந்தவர் என்றேன், இவருக்கு முன்னர் உங்களில் யாரேனும், எப்போதாவது இந்த வாதத்தை செய்ததுண்டா? என்று கேட்டார். இல்லை என்றேன், இவரது முன்னோர்களில் யாராவது மன்னர்களாக இருந்திருக்கின்றார்களா? என்றார், இல்லை என்றேன். அவரைப் பின்பற்றுவோர், மக்களில் சிறப்பு வாய்ந்தவர்களா? அல்லது சாமானியர்களா? என்றார், மக்களில் சாமானியர்கள் தான் என்றேன், அவரைப் பின்பற்றுவோர் அதிகரிக்கின்றனரா? அல்லது குறைகின்றனரா? என்று வினவினார். அதிகரிக்கின்றனர் என்றேன் நான்.

பின், யாரேனும் மதம் மாறியிருக்கின்றனரா? என்று கேட்டார், நான் இல்லை என்றேன், அவர் இவ்வாறு வாதிப்பதற்கு முன், அவர் பொய் சொல்லக் கூடியவர் என்று எப்போதாவது நீங்கள் சந்தேகித்ததுண்டா? என்றார், நான் இல்லை என்றேன். இவர் வாக்கு மீறி நடந்ததுண்டா? என்றார் நான் இல்லையென்று சொல்லிவிட்டு நாங்கள் இப்போது அவருடன் ஓர் உடன்படிக்கை செய்துள்ளோம், அதில் அவர் எப்படி நடந்து கொள்ளப் போகிறார் என்று எங்களுக்குத் தெரியாது என்றேன், அப்போதைக்கு நபி (ஸல்) மீது குறை கற்பிக்க அந்த வார்த்தையை விட்டால் வேறு எந்த வார்த்தையையும் எனது பதிலில் நுழைத்திட எனக்கு வாய்ப்பில்லை. அவருடன் நீங்கள் போர் புரிந்திருக்கிறீர்களா? என்று கேட்டார் ஆம் என்றேன், அவருடன் நீங்கள் நடத்திய போரின் முடிவுகள் எவ்வாறிருந்தன? என்றார், எங்களுக்கும் அவருக்குமிடையே வெற்றியும், தோல்வியும் மாறி மாறி வந்திருக்கின்றன. சில சமயம் அவர் எங்களை வென்றிருக்கிறார், சில சமயம் நாங்கள் அவரை

வென்றிருக்கிறோம் என்றேன். அவர் உங்களுக்கு என்னதான் போதிக்கிறார்? என்று கேட்டார், அல்லாஹ் ஒருவனை வணங்குங்கள், அவனுக்கு எதனையும் இணையாக்காதீர்கள், உங்கள் முன்னோர்கள் கூறி வந்தவற்றையெல்லாம் விட்டுவிடுங்கள் என்கிறார். தொழுகை, உண்மை, கற்பு நெறி, உறவினர்களுடன் இணங்கி இருத்தல் போன்ற பண்புகளை எங்களுக்கு ஏவுகிறார் என்றேன்.

மன்னர் தனது மொழி பெயர்ப்பாளரிடம் மொழி பெயர்க்கச் சொன்னதாவது: அவரது குலத்தைப்பற்றி உம்மிடம் விசாரித்தேன், அதற்கு நீர் உங்களில் அவர் உயர் குலத்தைச் சேர்ந்தவர்தாம் என்று குறிப்பிட்டீர், எல்லா இறைத்தூதர்களும் அப்படித்தான் அவர்களின் சமூகத்திலுள்ள உயர் குலத்தில் இருந்துதான் அனுப்பப்பட்டுள்ளார்கள். உங்களில் யாரேனும் இந்த வாதத்தை இதற்கு முன் செய்ததுண்டா? என்று கேட்டேன், அதற்கு நீர் இல்லையென்று குறிப்பிட்டீர், அவருக்கு முன்னர் யாரேனும் இவ்வாதத்தைச் செய்திருந்தால் முன்னர் செய்யப்பட்டு வந்த ஒரு வாதத்தை பின்பற்றித்தான் இவரும் செய்கிறார் என்று நான் கூறியிருப்பேன். இவரது முன்னோர்களில் யாரேனும் மன்னராக இருந்திருக்கிறார்களா என்று உம்மிடம் நான் கேட்ட போது இல்லையென்று சொன்னீர், இவரது முன்னோர்களின் ஆட்சியை அடைய விரும்பும் ஒரு மனிதர் இவர் என்று சொல்லி இருப்பேன், இவ்வாதத்தைச் செய்வதற்கு முன் அவர் பொய் சொல்வதாக நீங்கள் அவரைச் சந்தேகித்ததுண்டா? என்று உம்மிடம் கேட்டேன், அதற்கு நீர் இல்லை என்று குறிப்பிட்டீர், மக்கள் மீது பொய் சொல்லத் துணியாத ஒருவர், இறைவன் மீது பொய்யுரைக்கத் துணிய மாட்டார் என்றே நான் உறுதியாக நம்புகிறேன்.

மக்களில் சிறப்பு வாய்ந்தவர்கள் அவரைப் பின்பற்றுகின்றனரா? அல்லது சாமானியர்களா? என்று கேட்டேன் சமானிய மக்கள்தாம் அவரைப் பின்பற்றுகின்றனர் என்று குறிப்பிட்டீர் அப்படிப்பட்டவர்கள் தாம் துவக்கத்தில் இறைத்தூதர்களை பின்பற்றக்கூடியவர்களாக இருந்திருக்கின்றார்கள், அவரை பின்பற்றுகின்றவர்கள் அதிகரிக்கின்றனரா? அல்லது குறைகின்றனரா? என்றும் உம்மிடம் கேட்டேன், அவர்கள் அதிகரிக்கச் செய்கின்றனர் என்று குறிப்பிட்டீர்,

இறை நம்பிக்கை நிறைவு பெறும் வரை அப்படித்தான் (வளர்ந்து கொண்டே) இருக்கும், அவரது மார்க்கத்தில் நுழைந்த பின்னர் யாரேனும் அம்மார்க்த்தின் மீது அதிருப்தியடைந்து மதம் மாறி இருக்கின்றனரா? என்று உம்மிடம் கேட்டேன், இல்லை என்று குறிப்பிட்டீர். அப்படித்தான் இதயத்தில் நுழைந்து விட்ட இறை நம்பிக்கையின் எழில் (உறுதியானது). அவர் (எப்போதேனும்) வாக்கு மீறியதுண்டா? என உம்மிடம் நான் கேட்டபோது, இல்லை என்றீர். இறைவனின் இறைத்தூதர்கள் அப்படித்தான் வாக்கு மீற மாட்டார்கள், அவர் எதை உங்களுக்கு கட்டளையிடுகிறார்? என்று உம்மிடம் கேட்டேன், அல்லாஹ்வையே வணங்க வேண்டும் என்றும், அவனுக்கு எதனையும் இணையாக்கக் கூடாதென்றும், உங்களுக்கு அவர் ஏவுவதாகவும், சிலை வணக்கங்களிலிருந்து அவர் உங்களைத் தடுப்பதாகவும், தொழுகை, உண்மை, கற்புநெறி ஆகியவற்றை உங்களுக்கு அவர் ஏவுவதாகவும் நீர் கூறினீர். நீர் சொல்லியது அனைத்தும் உண்மையானால், ஒரு காலத்தில் எனது இரு பாதங்களுக்குக் கீழுள்ள இந்த இடத்தையும் அவர் ஆளுவார். இப்படிப்பட்ட ஒரு இறைத்தூதர் (வெகு விரைவில்) தோன்றுவார் என்று நான் முன்பே அறிந்திருந்தேன், ஆனால் அவர் (அரபிகளாகிய) உங்களிலிருந்துதான் தோன்றுவார் என்று நான் கருதியிருக்கவில்லை. இவரைச் சென்றடையும் வழியை நான் அறிந்திருந்தால் மிகுந்த சிரமப்பட்டாவது அவரைச் சந்தித்திருப்பேன். (இப்போது) நான் அவரருகே இருந்தால் அவரது பாதங்களை கழுவி விடுவேன்.

பஸ்ராவின் ஆளுநர் மூலம் ஹெர்குலிஸ் மன்னரிடம் கொடுப்பதற்காக திஹ்யா வசம் நபி (ஸல்) அவர்கள் கொடுத்தனுப்பிய கடிதத்தை தம்மிடம் கொடுக்குமாறு மன்னர் ஆணையிட்டார், ஆளுநர் அதனை மன்னரிடம் ஒப்படைத்தார், மன்னர் அதனைப் படித்துப்பார்த்தார். அக்கடிதத்தில் அளவற்ற அருளாளனும் கருணையன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால், அல்லாஹ்வின் அடியாரும், அவனது தூதருமான முஹம்மத் என்பார், ரோமாபுரிச் சக்கரவர்த்தி ஹெர்குலிஸூ க்கு எழுதிக்கொள்வது, நேர் வழியைப் பின்பற்றுவோர் மீது சாந்தி நிலவட்டுமாக, நிற்க. இஸ்லாத்தைத் தழுவுமாறு

உமக்கு நான் அழைப்பு விடுக்கிறேன்! நீர் இஸ்லாத்தை ஏற்பீராக!! நீர் ஈடேற்றம் பெற்றிடுவீர்!!! அல்லாஹ் உமக்கு இரு மடங்கு சன்மானம் வழங்குவானாக. இவ்வழைப்பை நீர் புறக்கணித்தால், (உமது) குடிமக்களின் பாவமும் உம்மைச்சாரும், வேதத்தை உடையவர்களே, நாம் அல்லாஹ்வைத்தவிர (வேறு எவரையும்) வணங்கக்கூடாது, அவனுக்கு எதனையும் இணையாக்கக் கூடாது, அல்லாஹ்வை விட்டுவிட்டு நம்மில் சிலர், சிலரை நமது இரட்சகனாக ஆக்கிக்கொள்ளக்கூடாது என்ற எங்களுக்கும், உங்களுக்கும் பொதுவான ஒரு கொள்கையை நோக்கி வந்து விடுங்கள். (இக்கொள்கையை) நீங்கள் (ஏற்க மறுத்து) புறக்கணித்தால், நாங்கள் நிச்சயமாக (அந்த ஒரே இறைவனுக்குக் கீழ்படிந்த) முஸ்லிம்கள் என்பதற்கு நீங்களே சாட்சியாக ஆகிவிடுங்கள் என்று கூறப்பட்டிருந்தது.

மன்னர் தாம் சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லி, நபி (ஸல்) அவர்களின் கடிதத்தைப் படித்து முடித்ததும் அங்கே ஒரே கூச்சலும், குழப்பமும் மிகுந்து குரல்கள் உயர்ந்து கொண்டே போயின. நாங்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டோம், அப்போது என்னுடன் வந்தவர்களிடம் ரோமர்களின் மன்னர் அவரைக்கண்டு அஞ்சும் அளவுக்கு முஹம்மதின் காரியம் இப்போது மேலோங்கிவிட்டது என்று நான் கூறினேன், (அப்போதிலிருந்தே) அவர்கள்தாம் வெற்றியடைவார்கள் என்ற நம்பிக்கையில் திளைத்தவனாகவே நான் இருந்து வந்தேன், முடிவில் எனக்குள்ளேயும் அல்லாஹ் இஸ்லாத்தை நுழைத்துவிட்டான். (புஹாரி)

# அவர்களது பிறப்பும், வளர்ப்புப் பருவமும்

முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது தாயாரின் வயிற்றில் இருக்கும் போதே, தந்தை அப்துல்லாஹ் மரணித்து விட்டார்கள். அவர்கள் பிறந்து சில வருடங்களிலேயே தாயார் ஆமினாவும் இறந்து விட்டார்கள், இப்போது அநாதையாகிவிட்ட நிலையில் அவர்கள் பாட்டனார் அப்துல் முத்தலிப் அண்ணலாரைப் பொறுப்பேற்று நல்ல முறையில் பராமரித்து வந்தார்கள். பின் சில வருடங்களில் பாட்டனாரும் இறந்து விடவே, அவர்கள் சிறிய தந்தை அபூதாலிப் பொறுப்பேற்று நல்ல முறையில் பராமரித்து வந்தார்கள்.

அன்றைய மக்காவில் நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் கோத்திரத்தினரும், ஏனைய அனைத்து கோத்திரத்தினரும் இறைவனை வணங்குவதற்குப் பகரமாக சிலைகளை வைத்து வணங்கி வந்தனர். அச்சிலைகளில் சில கற்களைக் கொண்டு செதுக்கியும், இன்னும் சில மரங்களைக்கொண்டு தயாரித்தும், இன்னும் சில தங்கங்களாலும் உருவாக்கப்பட்டு கஃபாவை சுற்றிலும் வைக்கப்பட்டிருந்தன. மேலும் அச்சிலைகளின் கைகளிலேயே நல்லது, கெட்டது யாவும் இருப்பதாகவும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

சிறு வயது முதல் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை உண்மை, நாணயம் நிறைந்தவையாகவே இருந்து வந்துள்ளது. பொய், பித்தலாட்டம், மோசடி, நம்பிக்கைத் துரோகம் போன்ற கெட்ட குணங்கள் அவர்களிடத்தில் காணப்பட்டதே இல்லை. அவர்கள் வாழ்ந்த சமூகத்தினர் மத்தியில் நம்பிக்கையாளர் என்று அறியப்பட்டு வந்தார்கள். மேலும் தமது அமானிதங்களை அவர்களிடம் வைத்திருக்குமாறு ஒப்படைக்கக்கூடியவர்களாக இருந்தார்கள்.

அவர்கள் வெளியூருக்கு பிரயாணம் செல்வதற்கு தயாரானால் தமது செல்வங்களை, மதிப்புள்ள பொருட்களை இவர்களிடமே பாதுகாக்கும்படி வைத்துச்செல்வார்கள். அவர்கள் சொல்லிலும், செயலிலும், உண்மையை, நேர்மையை கண்டபோது அன்று அவர்கள் இவர்களுக்கு கொடுத்த பட்டம் உண்மையாளர் என்பதாகும்.

மேலும் அவர்கள் நற்குணமுடையவராகவும், நல்லதையே பேசக்கூடியவராகவும், வாய்மையாளராகவும், மனித சமூகம் முழுவதற்கும் நன்மையை விரும்பக் கூடியவராகவும், அவரது சமூகத்தவர்களால் விரும்பப்படக்கூடியவராகவும், நெருங்கிய உறவினர்களும், தூரமானவர்களும் கூட அவரை மதித்து கண்ணியப்படுத்திப் போற்றிப் புகழக்கூடியவர்களாகவும், மேலும் தோற்றத்தால் மிகவும் அழகானவர்களாகவும் இருந்தார்கள். அவர்களைப் பார்த்தால் கண்கள் சலிக்கமாட்டா.

எனவே, அவர்கள் உடலாலும், நற்குணங்களாலும் மிக அழகியவர்களாவார்கள். இதை ஒட்டியே அல்லாஹ் அவனது திருமறை அல்குர்ஆனில் அவர்களைப்பற்றி கூறும் போது: நிச்சயமாக நீர் (அழகிய) நற்குணமுடையவராக இருக்கிறீர்கள் என்பதாக. (அல் கலம்:4)

அவரைப்பற்றி (**thomas carlyle**) என்ற அன்னிய அறிஞர் தனது கதாநாயகர்கள் என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது இளமைப் பருவம் முதலே சிந்திக்கக்கூடிய வாலிபராக இருந்து வந்துள்ளார்கள், மேலும் அவரது சினேகிதர்களால் அவர் சொல்லில், செயலில் உண்மையாளராகவே கவனிக்கப்பட்டு வந்துள்ளார்கள். மேலும் அவர்களது நாவிலிருந்து வெளிவருகின்ற எந்த ஒரு சொல்லாக இருப்பினும் அதிலே நிறைந்த ஞானம் இருப்பதையும் கண்டுகொண்டனர்.

மேலும் கூறுகிறார்: அவர்கள் சம்மந்தமாக நான் அறிந்தது, அவர்கள் ஒரு அதிகம் பேசாது அமைதிகாக்கக்கூடியவர்கள், தேவையின்றி எதுவும், எதற்கும் பேசமாட்டார்கள். அவர்கள் வாய் திறந்து பேசினால் நீர் நாடிய ஞானம் அதிலே நிறைந்திருப்பதைக் காணலாம்.

மேலும் நாம் அவர்களை தமது வாழ்நாள் முழுவதும் நிலையான அடிப்படை, உறுதியான எண்ணம், தூரநோக்கு, சங்கை, நலன், கருணை, இறையச்சம், கண்ணியம், சுதந்திரம் போன்ற பண்புகள் தன்னகத்தே குடிகொண்ட ஒரு மனிதராகக் காணலாம். மேலும் அவர்கள் மனத்தூய்மை மிக்க கடுமையான முயற்சியாளர். மேலும் அவர்கள் மென்மையான இயல்பு, எளிய தன்மை, நிறைந்த முகமலர்ச்சி, போற்றத்தக்க மக்கள் கலப்பு, இனிமையான ஐக்கியம், இன்னும் சொல்லப்போனால் (விரசம் இல்லாமல்) நகைச்சுவை செய்து சிரிப்பூட்டுபவராகவும் இருந்துள்ளார்கள்.

ஆக மொத்தத்தில் அவர்களுடைய முகம் உண்மையான உள்ளத்திலிருந்து வெளியாகும் பிரகாசமான சிரிப்பால் இலங்கக்கூடியதாக இருந்தது. மேலும் புத்திக்கூர்மையும், விவேகமும் நிறைந்து காணப்பட்டார்கள். அவர்கள் இயல்பிலேயே மகத்தானவராகக் காணப்பட்டார், எந்தவொரு பள்ளிக்கூடமும் அவர்களை அறிவாளியாக்கவுமில்லை, எந்தவொரு ஆசிரியரும் அவர்களுக்கு கல்வி புகட்டவுமில்லை, அவைகளை விட்டும் அவர்கள் தேவையற்றவரே. அவர்கள் தனி ஆளாக நின்று அந்த அரேபியப்பாலைவனத்தில் தனது வாழ்நாளிலேயே தனது பணியை செவ்வனே செய்து முடித்தார்கள்.

அவ்வப்போது நபி (ஸல்) அவர்கள் நபியாக அனுப்பப்படுவதற்கு சில காலங்களுக்கு முன்பாக, தனிமையில் அமர்ந்து அல்லாஹ்வை வணங்குவதிலும், குறிப்பாக மக்கா நகரில் ஹிரா எனப்படும் குகையில். பெரும்பாலான நேரங்களில் சென்று தங்கி, சிந்திப்பதிலும், இறைவழிபாடுகளிலும் ஈடுபட்டுவந்தார்கள். மேலும் அவர்கள் அன்று தமது சமுதாய மக்களிடத்தில் பரவிக்கிடந்த அனைத்து விதமான கெட்ட பழக்க வழக்கங்களிலிருந்தும், மிகவும் தூரமாக ஒதுங்கியே இருந்து வந்தார்கள். அவர்கள் என்றுமே மதுபானத்தை தொட்டது கூடக் கிடையாது. மேலும் எந்த ஒரு சிலைக்கோ, விக்ரகத்திற்கோ வணக்கம் செலுத்தி சாஸ்டாங்கம் செய்ததும் கிடையவே கிடையாது, அல்லது அவைகளைக் கொண்டு எந்த ஒரு விடயத்திற்காகவும் சத்தியம் செய்ததோ, அல்லது எந்த ஒரு பொருளையாவது அவைகளுக்கு காணிக்கை செலுத்தியோ வந்தது கிடையாது.

மேலும் தமது வயிற்றுப்பிழைப்பிற்காக தமது சமூகத்தார்களின் ஆடுகளை மேய்ச்சல் செய்துள்ளார்கள், இதுபற்றி அவர்கள் சொல்லும் போது: நபிமார்கள் அனைவரும் ஆடுமேய்க்கும் தொழிலில் ஈடுபட்டே வந்துள்ளனர் என்று கூறினார்கள். தாங்களுமா? என்று அவர்களின் தோழர்கள் வினவியபோது ஆம், என்று கூறிவிட்டு மக்கா வாசிகளின் ஆடுகளை சில கிரயங்களுக்காக நான் மேய்க்கக்கூடியவனாக இருந்தேன் என்றார்கள். (ஆதாரம் புஹாரி).

அவர்களுக்கு நாற்பதாவது வயது பூர்த்தியாகிய சமயத்தில், மக்காவிலுள்ள ஹிரா குகையில் இறைவனை வணங்குவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, வானத்திலிருந்து வஹீ (இறைச்செய்தி) அவர்கள் மீது இறங்க ஆரம்பித்தது.

இதுபற்றி அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் குறிப்பிடும் போது: நபி (ஸல்) அவர்களுக்குத் துவக்கத்தில் (இறைச்செய்தி) தூ க்கத்தில் தோன்றும் நல்ல கனவுகளிலேயே வந்தது. அப்போது அவர்கள் எந்தக் கனவு கண்டாலும் அது அதிகாலைப் பொழுதின் விடியலைப் போலத் தெள்ளத்தெளிவாக இருக்கும். பின்னர் தனிமையில் இருப்பது அவர்களின் விருப்பமாயிற்று. ஹிரா குகையில் அவர்கள் தனித்திருந்தார்கள், தனது குடும்பத்தாரிடம் திரும்பி வருவதற்கு முன், பல இரவுகள் (அங்கே தங்கியிருந்து) வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார்கள். அந்த நாட்களுக்கான உணவை தம்மோடு கொண்டு செல்வார்கள். (அந்த உணவு முடிந்ததும்) மீண்டும் தமது (துணைவியார்) அன்னை கதீஜா (ரலி) அவர்களிடம் திரும்பி வருவார்கள், அதே போன்று பல நாட்களுக்கான உணவைக் கொண்டு செல்வார்கள். இந்த நிலை ஹிரா குகையில் அவர்களுக்கு சத்தியம் வரும் வரை நீடித்தது. (ஒருநாள்) ஒரு வானவர் அவர்களிடம் வந்து ஓதுவீராக என்றார்கள், அதற்கவர்கள் நான் ஓதத்தெரிந்தவனில்லையே என்றார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இந்நிலையைப் பின் வருமாறு விளக்கினார்கள்:

அவர் என்னைப்பிடித்து நான் சிரமப்படும் அளவிற்கு இறுகக்

கட்டி அணைத்தார், பிறகு என்னை விட்டுவிட்டு மீண்டும் ஓதுவீராக என்றார்கள், (அப்போதும்) நான் ஓதத்தெரிந்தவனில்லையே என்றேன். இரண்டாவது முறையும் அவர் என்னைப் பிடித்து நான் சிரமப்படும் அளவிற்கு இறுகக் கட்டியணைத்து என்னை விட்டுவிட்டு மீண்டும் ஓதுவீராக என்றார், (அப்போதும்) நான் ஓதத்தெரிந்தவனில்லையே என்றேன். அவர் என்னைப் பிடித்து மூன்றாவது முறையும் கட்டி அணைத்து என்னை விட்டுவிட்டு படைத்தவனாகிய உம்முடைய இரட்சகனின் திருப்பெயரால் ஓதுவீராக, அவன் தான் மனிதனை அலக்கில் (கருவளர்ச்சியின் ஆரம்பநிலையில்) இருந்து படைத்தான், ஓதுவீராக உமது இரட்சகன் கண்ணியம் மிக்கவன் என்றார்கள்.

மேலும் அன்னை ஆயிஷா (ரலி) கூறியதாவது: பிறகு இதயம் படபடத்தவர்களாக அந்த வசனங்களுடன் (தனது துணைவியார்) குவைலிதின் மகள் அன்னை கதீஜா (ரலி) இடம் வந்து, என்னை போர்த்துங்கள், என்னை போர்த்துங்கள் என்றார்கள், கதீஜா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களைப் போர்த்தினார்கள். (நடுக்கம் தீர்ந்ததும்) அன்னை கதீஜா (ரலி) இடம் நடந்த செய்தியைத் தெரிவித்துவிட்டுத் தமக்கு ஏதும் நேர்ந்துவிடுமோ? எனத்தாம் உறுதியாக அஞ்சுவதாகவும் கூறினார்கள். அப்போது அன்னை கதீஜா (ரலி) அவ்வாறு கூறாதீர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக, அல்லாஹ் உங்களை ஒருபோதும் இழிவு படுத்தமாட்டான். ஏனெனில் தாங்கள் உறவினர்களுடன் இணங்கி வாழ்கிறீர்கள், (சிரமப்படுவோரின்) சுமைகளைத் தாங்கள் சுமந்து கொள்கிறீர்கள், வறியவர்களுக்காக உழைக்கிறீர்கள், விருந்தினர்களை உபசரிக்கிறீர்கள், உண்மையான சோதனைகளில் (ஆற்பட்டோருக்கு) உதவி புரிகிறீர்கள் என்றார்கள். பின்னர் நபி (ஸல்) அவர்களை தமது தந்தையின் உடன் பிறந்தவரான நவ்ஃபல் என்பவரின் மகன் வரகா என்பவரிடம் அழைத்துச் சென்றார்கள், நவ்ஃபல் அசது என்பவரின் மகனும் அப்துல் உஸ்ஸா என்பவரின் பேரருமாவார்.

வரகா அறியாமைக் காலத்திலேயே கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியவராக இருந்தார். மேலும் அவர் ஹிப்ரு மொழியில் எழுதத் தெரிந்தவராகவும், இஞ்ஜீல் வேதத்தை ஹிப்ரு மொழியில் அவர் எழுத

வேண்டும் என்று அல்லாஹ் நாடிய அளவுக்கு எழுதுகிறவராகவும், கண்பார்வையற்ற பெரும் வயோதிகராகவும் இருந்தார். அவரிடம் அன்னை கதீஜா (ரலி) என் தந்தையின் சகோதரன் மகனே, உம் சகோதரன் மகன் கூறுவதைக் கேளுங்கள் என்றார்கள். அப்பேது வரகா நபி (ஸல்) அவர்களிடம் என் சகோதரன் மகனே நீர் எதைக் கண்டீர்? எனக் கேட்டார். நபி (ஸல்) அவர்கள் தாம் பார்த்த, நடந்த செய்திகளை அவரிடம் விபரித்துச் சொன்னார்கள். (அதைக் கேட்டதும்) வரகா, நபி (ஸல்) அவர்களிடம், அவர்தாம் மூஸா (அலை) இடம் இறைவன் அனுப்பிய நாமூஸ் (ஜிப்ரீல்) ஆவார், என்று கூறிவிட்டு உமது சமூகத்தார் உம்மை, உமது நாட்டிலிருந்து வெளியேற்றும் சமயத்தில் நான் உயிருடன் திடகாத்திரமான இளைஞனாக இருந்திருக்க வேண்டுமே! என்றும் அங்கலாய்த்துக்கொண்டார்.

அப்போது நபி (ஸல்) அவர்கள், மக்கள் என்னை வெளியேற்றவும் செய்வார்களா? என்று கேட்டார்கள், அதற்கவர் ஆம் நீர் கொண்டு வந்திருப்பது போன்ற சத்தியத்தைக் கொண்டு வந்த எந்த மனிதரும் (மக்களால்) பகைத்துக் கொள்ளப்படாமல் இருந்ததில்லை. (நீர் வெளியேற்றப்படும்) அந்த நாளை நான் அடைந்தால் உமக்குப் பலமான உதவி செய்வேன் என்று கூறினார், அதன் பின் வரகா நீண்டநாள் வாழாமல் இறந்து விட்டார்த முதற் செய்தியுடன் வஹீ சிறிது காலம் நின்று போயிற்று. (புஹாரி)

எனவே முதன்முதலாக இறக்கப்பட்ட அவ்வசனங்கள் நபித்துவத்தின் ஆரம்பமாகும். அதனைத்தொடர்ந்து சில மாதங்களுக்குப்பின் அவர்கள் மீது பின்வரும் இறைச்செய்தி இறக்கப்பட்டது: (போர்வை போர்த்தியவரே எழும் (மக்களை வழிகேட்டின் விளைவைக்குறித்து) அச்சுறுத்தி எச்சரியும், உம் அதிபதியின் மேன்மையையும் பெருமையையும் எடுத்துறையும், உம் ஆடையை தூய்மைப் படுத்திக்கொள்ளும், சிலைகளை விட்டு விலகியிரும், அதிகமாக பெற்றுக் கொள்ளும் எண்ணத்தில் எவருக்கும் உபகாரம் செய்யாதீர், உம் அதிபதியின் பணியில் (துன்ப துயரங்கள் நேரும் போது) பொறுமையைக் கடைப்பிடியும். (சூரா: அல் முத்தஸிர் 1-7)

எனவே, இவ்வசனங்களே அண்ணலார் (ஸல்) அவர்களை

நபித்துவப் பணியை அதிகாரப்பூர்வமாக செய்திட தொடக்கமாக இருந்தது. இப்போது முறைப்படி ஆணை கிட்டிவிட்டது, நபி (ஸல்) அவர்கள் மக்கா வாழ் தமது சமுதாயத்தினருக்கு மத்தியில் தனது அழைப்புப் பணியை ஆரம்பித்த போது சொல்லெனா துன்பங்களையும், கடுமையான எதிர்புகளையும் சந்தித்தார்கள். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் அச்சமூகத்தினருக்கு பரீட்சயமில்லாத, முற்றிலும் வித்தியாசமான ஒரு அழைப்பை அவர்கள் முன் எடுத்துரைத்தார்கள். அவ்வழைப்பு அவர்களின் வாழ்வின் மார்க்க, அரசியல், பொருளாதார மற்றும் அனைத்துத்துறைகளையும் உள்ளடக்கிய ஒரு அழைப்பாக இருந்தது. அது வெறுமனே ஓர் இறைக் கொள்கையின் பக்கம் அழைத்து, அவனையல்லாது வணங்கப்படும் ஏனையவைகளை விட்டுவிடும்படி கூறுவதோடு மாத்திரம் நின்று விடாமல், இவைகளோடு சேர்த்து மது, விபச்சாரம், வட்டி, சூது போன்ற அவர்கள் அடிப்படையாக கருதிவந்த அனைத்துத் தீமைகளையும், அவர்கள் மீது விலக்கி தவிர்ந்து கொள்ளும்படியும், மேலும் மனிதர்களுக்கு மத்தியில் எவ்வித ஏற்றத்தாழ்வுமின்றி நீதி செலுத்தும்படியும், இறையச்சத்தைக் கொண்டே அல்லாமல் மனிதர்களுக்கு மத்தியில் எந்த வித ஏற்றத்தாழ்வும் கிடையாது என்றும் அவ்வழைப்பு அமைந்திருந்தது.

குரைஷிகள் தமக்கும் அடிமைகளுக்கும் மத்தியில் சமத்துவத்தை ஏற்படுத்துவதை எப்படிப் பொறுத்துக் கொள்வார்கள்? அரபுகளின் தலைவர்கள், ஆட்சியாளர்கள், குரைஷி குலத்தினர் இவ்வழைப்பை எதிர்ப்பதோடு மாத்திரம் நின்று விடவில்லை மாறாக, இவ்வழைப்பாளாரான நபி (ஸல்) அவர்களை மிக மோசமான வார்த்தைகளின் மூலம் ஏசியும், வசைபாடியும், பொய்யர், பைத்தியக்காரர், சூனியக்காரர் போன்ற குற்றச்சாட்டுகளை அவர் மீது சுமத்தியும் அவரை துன்புறுத்தி வந்தனர். இதன் பால் மக்களை அழைப்பதற்கு முன்னர் இது போன்ற எந்த ஒரு குற்றச்சாட்டையும் இவர்கள் மீது அவர்கள் சுமத்த முடியவில்லை. நபி (ஸல்) அவர்களை நோவினை செய்வதற்காக அங்கிருந்த சிலர், அயோக்கியர்களை தூ ண்டியும் விட்டனர். இது பற்றி அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) கூறினார்கள்: ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் கஃபாவுக்கு முன்னால்

நின்று தொழுது கொண்டிருந்த வேளையில், குரைஷிகள் தாம் அமரும் இடத்தில் ஒன்று கூடினர். அப்போது அவர்களில் ஒருவன் நபி (ஸல்) அவர்களை காட்டி இந்தக் காட்சியை நீங்கள் பார்க்கவில்லையா? உங்களில் யார் இன்று ஒட்டகம் கன்று ஈன்ற ஒருவரின் வீட்டுக்குச் சென்று அதனுடைய கழிவுகளை கொண்டுவந்து முஹம்மத் சுஜூத் செய்யும்வரை எதிர்பார்த்திருந்து அவர் சுஜூத் செய்து கொண்டிருக்கும் வேளையில், அவர் மீண்டும் எழும்ப முடியாதபடி அவருடைய பிடரியில் இரத்தம், சாணம் நிறைந்த அக்கழிவுப்பையை போடுவது என்றான், அதனைக் கேட்டமாத்திரத்திலேயே ஒரு அயோக்கியன் எழுந்து சென்று குட்டியீன்ற ஒரு ஒட்டகத்தின் கழிவுப்பையை சுமக்க முடியாமல் சுமந்து வந்து நபி ஸல் அவர்கள் சுஜூத் செய்து கொண்டிருக்கும் பொழுது அவர்களின் பிடரியில் போட்டுவிட்டான். நபி (ஸல்) சுஜூதிலிருந்து தலையை உயர்த்த முடியாமல் அப்படியே இருப்பதைக் கண்டு அந்த குரைஷி அயோக்கியர்கள் விழுந்து விழுந்து கை கொட்டிச் சிரித்தனர்.

விஷயம் அறிந்த சிறுமி பாத்திமா (ரலி) அவர்கள், ஓடோடி வந்து தமது தந்தையின் பிடரியில் இருந்து அக்கழிவுகளை அகற்றிவிட்டு, அந்த அயோக்கியர்களை நோக்கி ஆத்திரம் தீரும் வரை கடும் வார்த்தைகளால் ஏசினார்கள். (ஆதாரம், புஹாரி)

மேலும் முனீபுல் அஸ்தீ என்பவர் கூறுகிறார்: நான் நபி (ஸல்) அவர்களை ஜாஹிலிய்யா காலத்தில் கண்டேன், அவர்கள் மக்களே! வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று கூறுங்கள், நீங்கள் வெற்றியடைவீர்கள் என்று கூறிவந்தார்கள். இதற்காக வேண்டி அவர்களில் சிலர் நபியவர்களின் முகத்தில் காரித்துப்பக் கூடியவர்களாகவும், இன்னும் சிலர் அவர்கள்மீது மண்ணை வாரி போடக்கூடியவர்களாகவும், இன்னும் சிலர் அவர்களை ஏசக்கூடியவர்களாகவும் இருந்தார்கள். சூரியன் உச்சியை அடைந்து கொண்டிருந்த வேளை, ஒரு பெரிய பாத்திரம் நிறைய தண்ணீரை சுமந்தவண்ணம் அவர்களை நோக்கி தமது புதல்வியர் ஒருத்தி வந்து அண்ணாரது முகத்தையும் கைகளையும் கழுவிக்கொண்டிருந்தார்கள், அப்போது நபியவர்கள் என்னருமை மகளே! உமது தந்தையின் மீது இழிவைக் கொண்டோ மானபங்கத்தைக் கொண்டோ அஞ்சவேண்டாம் என்று கூறினார்கள். (தபராணி)

மேலும் உர்வா பின் சுபைர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களிடம், இணை வைப்பாளர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு செய்த மிகக் கடுமையான செயலொன்றை கூறும்படிக் கேட்டேன். அப்போது அவர்கள் கூறினார்கள், ஒரு நாள் நபி (ஸல்) கஃபாவில் தொழுது கொண்டிருக்கும் போது உக்பா பின் அபீ முயீத் என்பவன் தனது மேலாடையை களைந்து எடுத்து, அதனை முறுக்கி நபி (ஸல்) அவர்களின் கழுத்தில் போட்டு கடுமையாக இறுக்கிக்கொண்டிருந்தான், அது சமயம் அபூபக்ர் (ரலி) அவர்கள் இதனை கண்டவுடன், அவனை நோக்கி வந்து அவனது பிடரியை பிடித்து ரஸூ ல் (ஸல்) அவர்களை விட்டும் தள்ளி விட்டார்கள். மேலும் அவனை நோக்கி: எனதிறைவன் அல்லாஹ் ஒருவன் தான் என்று கூறியதற்காக ஒரு மனிதரை நீங்கள் கொல்லப் பார்க்கிறீர்களா? மேலும், உங்கள் ரப்பிடமிருந்து மிகத்தெளிவான அத்தாட்சிகளை உங்களுக்கு அவர்கள் கொண்டுவந்துமிருக்கிறார்கள் என்றும் கூறினார்கள். (ஆதாரம். புஹாரி)

இத்தகைய நிகழ்ச்சிகளெல்லாம் நபி (ஸல்) அவர்கள் தமது அழைப்புப் பணியை தொடர்ந்து செய்து கொண்டே இருப்பதற்கு எவ்வித முட்டுக்கட்டைகளாகவும் இருக்கவில்லை. எனவே அவர்கள் மக்காவை நோக்கி ஹஜ்ஜு டைய காலத்தில் வருகை தரக்கூடிய குழுக்களுக்கு முன் சென்று அழைப்புப்பணி செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். இப்படி வந்த குழுக்களுக்கிடையே எஸ்ரிப் இப்போது மதீனா என்று அழைக்கப்படக்கூடிய ஊரைச் சேர்ந்த சிலர் அவர்களது அழைப்பை ஏற்று அவர்களை (ஈமான்) நம்பிக்கை கொண்டனர், மேலும் நபி (ஸல்) அவர்கள் தங்களிடம் வந்து சேர்ந்தால் தாம் உதவி செய்வதாகவும், எதிரிகளை விட்டும் காப்பாற்றுவதாகவும் உறுதியளித்தார்கள். மேலும் அவர்களுக்கு இஸ்லாத்தின் சட்டதிட்டங்களை கற்றுக் கொடுப்பதற்காக முஸ்அப் பின் உமைர் என்ற ஸஹாபியையும் மதீனாவுக்கு அவர்களோடு அனுப்பியும் வைத்தார்கள். இதன் பிறகு தமது சமூகத்தார்கள் தமக்கும், தம்மை ஏற்ற தமது தோழர்களுக்கும், துன்பங்களும், நெருக்கடிகளும் கொடுத்துக்கொண்டிருந்த போது அவர்களது

இறைவன் அவர்களுக்கு மக்காவை துறந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் மேற்கொள்ளும்படி கட்டளை பிறப்பித்தான்.

இவர் மதீனாவுக்கு வருகை தந்தபோது மதீனா வாசிகள் நல்ல முறையில் அவர்களை வரவேற்று உபசரித்தார்கள். இதன் பின் மதீனாநகர்தான் அவர்களின் அழைப்புப்பணியின் கேந்திரஸ்தலமாகவும், இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் தலைமைப்பீடமாகவும் ஆகியது. எனவே மதீனாவை அவர்கள் தனது இருப்பிடமாக ஆக்கி, அம்மக்களுக்கு குர்ஆனை ஓதியும், மார்க்க சட்டத்திட்டங்களை கற்றுக் கொடுத்துக் கொண்டுமிருந்தார்கள்.

மேலும் அம்மக்கள் நபி (ஸல்) அவர்களின் அழகிய நற்குணங்கள், உயர்ந்த பண்புகள் மூலம் தாக்கம் பெற்றுமிருந்தனர். எனவே தம் உடல்களை, தம் உயிர்களை விடவும் அதிகமாக நபி (ஸல்) அவர்களை விரும்பினார்கள். இதன் காரணமாக அவர்களுக்கு பணிவிடை செய்வதில் ஒருவரை முந்தி ஒருவரென போட்டி போட்டுக்கொண்டனர். அவர்களுடைய பாதையிலே விலைமதிக்க முடியாதவைகளையும் பெருமதிமிக்கவைகளையும் செலவிட்டனர். சந்தோஷம் நிறைந்த ஈமானிய உயிரோட்டமுள்ள ஒரு சமூகத்தில் அவர்கள் வாழ ஆரம்பித்தனர். அச்சமூகத்தினருக்கு மத்தியில் அன்பு, பாசம், சகோதரத்துவம் போன்றவற்றின் அடையாளங்கள் வெளிப்பட்டது, இந்த மகத்தான மார்க்கத்தின் கீழ் ஏழையும், பணக்காரனும், உயர்ந்தவனும், தாழ்ந்தவனும், வெள்ளையனும், கருப்பனும், அரபியும், அரபியல்லாதவனும் எவ்வித ஏற்றத்தாழ்வுமின்றி ஒரே சமமானவர்களாக ஆகிவிட்டனர். அவர்களுக்கு மத்தியில் (தக்வா) இறையச்சம் ஒன்று மாத்திரமே ஏற்றத்தாழ்வுக்கு அளவுகோளாக கருதப்பட்டுவந்தது. நபி (ஸல்) அவர்கள் வந்து தங்கி ஒரு வருடத்திற்குப் பின், நபி (ஸல்) அவர்களுக்கும், அவர்களுக்கு அழைப்புப்பணி வந்தபோது எவர்கள் மோசமாக நடந்து கொண்டார்களோ (மக்கத்துக்காபிர்கள்) அவர்களுக்கும் மத்தியில் தாக்குதல்கள் ஆரம்பமாயின. ஆட்பலத்திலும் சரி, ஆயுதபலத்திலும் சரி, மலைக்கும், மடுவுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வுக்கு மத்தியில், இஸ்லாத்திற்கும் இறைமறுப்பாளர்களுக்கும் மத்தியில் முதல் யுத்தம் மூண்டது, அவ்யுத்தம்தான் பத்ர் யுத்தமாகும்.

இதில் முஸ்லிம்களின் தரப்பில் போர் வீரர்களின் எண்ணிக்கை 314 பேர்கள் மாத்திரமே, இணைவைப்பாளர்களின் எண்ணிக்கை 1000 பேர்களாகும். இப்போரில் அல்லாஹ் அவனது தூதருக்கும், அவர்களது தோழர்களுக்கும் மிகப்பெரும் வெற்றியைக் கொடுத்து உறுதிப்படுத்தினான். இதனை தொடர்ந்து முஸ்லிம்களுக்கும், இணைவைப்பாளர்களுக்கும் மத்தியில் பல போர்கள் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்றுவந்தது. மதீனா சென்று 8 வருடங்களுக்குள்ளாக நபி (ஸல்) அவர்கள் 10,000 பேர்கள் கொண்ட ஒரு பிரமாண்டமான படையை உருவாக்க முடிந்தது. அப்படையினரோடு மக்கா நகருக்குள் வெற்றியாளராக நுழைந்து, அவர்களுக்கும், அவரை ஏற்றுக்கொண்ட அவர்களது தோழர்களுக்கும் சொல்லெனா துன்பங்களையும், கஷ்டங்களையும், வேதனைகளையும் கொடுத்து இறுதியில் தனது பொருள், இருப்பிடம், சொந்தம், பந்தம் அனைத்தையும் விட்டு நாடு துறந்து செல்லுமளவுக்கு உள்ளாக்கியவர்களை தோல்வியுறச் செய்து மாபெரும் வெற்றியை நிலைநாட்டினார்கள். இவ்வாண்டுக்கு வெற்றியின் ஆண்டு என்று பெயர் சூட்டப்பட்டது. இதுபற்றி அல்குர்ஆனில் கூறிப்பிடும்போது: அல்லாஹ்வின் உதவியும், வெற்றியும் வந்தபோது நீர் (முஹம்மத்) அல்லாஹ்வின் மார்க்கத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக நுழைவதைக் காண்பீர், அப்போது நீர் உமதிறைவனின் புகழைக் கொண்டு, துதித்து அவனிடம் பாவமன்னிப்பும் கோருவீராக, நிச்சயமாக அவன் பாவங்களை மன்னிக்கக்கூடியவனாக இருக்கிறான். (அந்நஸ்ர்)

பின்பு நபி (ஸல்) அவர்கள் மக்காவாசிகள் அனைவரையும் ஒன்று கூட்டி, நான் உங்களுக்கு என்ன செய்யப் போகிறேன் என்று கருதுகிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அங்கு குழுமியிருந்தவர்கள் கூறினார்கள்: நல்லதே செய்வீர்கள் ஏனெனில், நீங்களோ சங்கைக்குரிய ஒரு சகோதரர், மேலும் சங்கைக்குரிய ஒரு சகோதரரின் மகன் என்பதாக, பின்பு அவர்களை நோக்கி நீங்கள் விடுதலை பெற்றவர்களாக இங்கிருந்து செல்லுங்கள் என்று கூறினார்கள். (பைஹகி)

இவ்வுத்தரவு அவர்களில் அதிகமானவர்கள் இஸ்லாத்தில்

நுழைவதற்கு காரணமாக அமைந்தது, பின்பு நபி (ஸல்) அவர்கள் மதீனாவை நோக்கி திரும்பினார்கள், சில வருடங்களுக்குப்பின் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக வந்தபோது, அவரோடு 1, 14, 000 தோழர்களும் இணைந்து கொண்டார்கள். இவ் ஹஜ் (ஹஜ்ஜதுல் விதா - பிரியாவிடை ஹஜ்) என்று அறியப்பட்டுவந்தது, ஏனெனில் நபி (ஸல்) அவர்களுக்கு மரணம் நெருங்கிவிட்டதால் இந்த ஹஜ் முஸ்லிம்களுக்கு பிரியாவிடை போன்று இருந்தது.

நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டு ரபீஉஸ்ஸானி மாதம் 4 ம்நாள் திங்கட்கிழமை மதீனாவில் காலம் சென்றார்கள். பின் அங்கேயே அடக்கமும் செய்யப்பட்டார்கள். நபி (ஸல்) அவர்களின் மரணம் சிலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. குறிப்பாக, உமர் (ரலி) அவர்கள் இச்செய்தியை நம்பாதவர்களாக, யார் நிச்சயமாக முஹம்மத் (ஸல்) மரணித்து விட்டார்கள் என்று சொல்வதைக் கேட்டேனோ, அவரது கழுத்தை துண்டித்துவிடுவேன் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இச்சந்தர்ப்பத்தில் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்களுக்கு முன் எழுந்து பின்வரும் திருமறை வசனத்தை ஓதினார்கள்: முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு தூதரேயன்றி வேறல்லர், அவர்களுக்கு முன்னரும் (இவ்வாறே) தூதர்கள் பலர் சென்றிருக்கிறார்கள், அவர்கள் இறந்துவிட்டால், அல்லது வெட்டப்பட்டுவிட்டால் நீங்கள் புறங்காட்டிச் சென்றுவிடுவீர்களா?(அல்குர்ஆன் 3:144)

இத்திருமறை வசனத்தை கேட்ட போது உமர் (ரலி) வாயடைத்து நின்றார்கள், உமர் (ரலி) அவர்கள் திருக்குர்ஆனின் கட்டளைக்கு கட்டுப்பட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும்போது அன்னாருக்கு வயது 63 ஆகும். மக்காவில் நபியாக அனுப்பப்படுவதற்கு முன் 40 வருடங்களும் நபித்துவத்திற்குப்பின் 13 வருடங்களும் மக்காவில் அழைப்புப்பணி செய்தார்கள். பின் மதீனாவுக்கு (ஹிஜ்ரத் மேற்கொண்டு) சென்று 10 வருடங்கள் தங்கினார்கள். தொடர்ந்து 23 வருடங்கள் அல்குர்ஆன் தேவைக்கேற்ப இறக்கப்பட்டு இஸ்லாத்தின் சட்டதிட்டங்கள் சம்பூரணப்படுத்தப்பட்டது.

டாக்டர் ஜீ. லிபொன் என்பவர் (அரேபிய நாகரிகம் என்ற) தமது நூலில்: மனிதர்களின் பெருமதி, அவர்கள் ஆற்றிய பணிகளின்

ூலம் அளவிடப்படுமெனில், உலக வரலாற்றிலேயே முஹம்மத் (ஸல்) அவர்கள்தான் மிக மகத்தானவராக கருதப்படுவார் எனக்குறிப்பிட்டுள்ளார்.

மேற்கத்திய அறிஞர்கள் முஹம்மத் (ஸல்) அவர்கள் பற்றி கூறுகையில் அநேக வரலாற்றாசிரியர்கள் நடுநிலமையை கடைபிடித்தபோதும் அன்னாரது சிறப்புகளை ஒப்புக்கொள்வதை விட்டும் மதவாதமென்ற மாயை அவர்களில் பலரது கண்ணை மறைத்துவிட்டது. என்னே! பரிதாபம்.



# நபி (ஸல்) அவர்களின் தோற்றம்

நபி (ஸல்) அவர்கள் விரிந்த தோள் புஜங்கள் கொண்டவர்கள், அவர்களது தலைமுடி காதுக் சோனைகளில்படும் அளவுக்கு தொங்கிக்கொண்டிருக்கும், அவர்கள் மனிதர்களிலேயே அழகிய முகம் கொண்டவர்கள், உடலால் அழகானவர்கள். அளவுக்கு மீறிய உயர(நெட்டையு)ம் கிடையாது அதேசமயம் அதிக கட்டை (குட்டை) யும் கிடையாது. வெளுவெளுத்த வெள்ளையோ கடுகடுத்த கருமை நிறமோ கிடையாது. அவர்களது தலைமுடி அதிகம் சுருண்டதோ அல்லது வெறுமனே நீண்டதோ (கோரை) கிடையாது. அவர்களது முகமோ வெள்ளியினால் வார்த்ததைப்போன்று இலங்கிக்கொண்டிருக்கும், அவர்களின் நிறமோ சுடர்வீசும் செம்மை (மாநிறம்) போன்றது, அவர்களது வியர்வை முத்துக்கள் போன்று ஜொலிக்கும், அவர்கள் தாடி முடியோ மிகவும் அடர்த்தியானது.

ஜாபிர் இப்னு சமுரா (ரலி) அவர்களிடம் நபி (ஸல்) அவர்களுடைய முகம் வாளைப்போல் பளபளப்பானதா?என்று கேட்கப்பட்டபோது, அதற்கு அவர் இல்லை அவர்களது முகம் சூரியனை சந்திரனை போல் (பிரகாசமாக) வட்டமாக இருந்தது, மேலும் அவர்கள் மகத்தான நாவும், விரிந்த கண்களும், பின்பாதங்கள் குறைந்த சதையும் கொண்டவர்கள். மேலும் அவர்கள் இலங்கும் வெள்ளையும், அதிகமான கொழுப்போ(தடிப்போ), மெலிவோ, உயரமோ, கட்டையோஅற்ற சாதாரண பருமனும் (உடல்வாகும்) கொண்டவர்கள், மேலும் அவர்கள் பிரமாண்டமான இரு கைகளையும், இருபாதங்களையும் கொண்டவர்கள், அவர்களின் உள்ளங்கையோ மிக மென்மையானது..

இது பற்றி அனஸ் (ரலி) கூறும் போது: நபி (ஸல்) அவர்களின் உள்ளங்கையை விட மிருதுவான பட்டையோ, வேறு எந்த ஒரு

ஜரிகைப் பட்டையோ நான் தொட்டதில்லை, நபி (ஸல்) அவர்களின் நறுமணத்தை விட சிறந்த மிஸ்கையோ, அம்பரையோ நான் நுகர்ந்ததில்லை என்றார்கள். (புஹாரி, முஸ்லிம்)

# நபி (ஸல்) அவர்களின் குணாதிசயங்கள், பண்புகள்

## அறிவு முதிர்ச்சி:

உலகில் எந்த ஒரு மனிதரும் அடைந்திடாத அளவு ஞானத்தை நபி (ஸல்) அவர்கள் அடைந்திருந்தார்கள். அதனுடைய வெளிப்பாட்டையும் ரகங்களையும் யார் அவருடைய வாழ்க்கையோட்டத்தை, மேலும் அவர்களது நிலைகள், இரத்தின சுருக்கமான பேச்சு, அழகிய பண்புகள், ஞானம் நிறைந்த பேச்சு, இஞ்ஜீல், தவ்ராத் மற்றும் இவைகளுக்கு முன் இறக்கியருளப்பட்ட வேதங்களில் உள்ள கல்விஞானங்கள், ஞானிகளின் ஞானம், சென்று போன சமுதாயங்களின் வாழ்க்கை வரலாறுகள், மேலும் உதாரணங்கள் கூறி ஒரு விடயத்தை உணர்த்துதல், அரசியல் சாணக்கியம், சட்டதிட்டங்கள் வகுத்தல், பலதரப்பட்ட கலைகளுக்கு அக்கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் இவர்களது வாய் வார்த்தைகளில் இருந்து பெற்றுக் கொண்ட இலவ்கீகரீதியான ஒழுங்குகள், போற்றப்படக்கூடிய பண்புகளுக்கு முன்மாதிரியாக அமைதல், அவர்களது விரலசைவுகள் ஆதாரமாகுதல். (உதாரணம்) வணக்கம், மருத்துவம், கணக்கியல், சொத்துரிமை, குலம் இவை போன்ற ஏனையவைகள்.

இவ்வளவுக்கும் இவர்கள் கல்வி கற்றதோ, படித்ததோ, முன்னோர்களின் புத்தகங்களை வாசித்ததோ கிடையாது. மேலும் அறிஞர்கள் முன் அமர்ந்ததுமில்லை. இதற்கும் மேல் அவர்கள் எழுதவோ படிக்கவோ தெரியாத ஒரு (உம்மி) நபி, அல்லாஹ் அவர்களது உள்ளத்தை இஸ்லாத்தைக் கொண்டு விரிவாக்கும்வரை மேலும் அவன் அவர்களுக்கு மொத்த அறிவையும் கற்றுக் கொடுக்கும்

வரை, அவர்களுக்கு ஓதிக்காட்டும் வரை எந்த ஒன்றையும் அறியாதவராகவே இருந்தார்கள்.

அவர்களது புத்தியின் (அறிவின்) அளவுக்கு நிகழ்ந்த, நிகழவிருக்கும் அல்லாஹ்வுடைய மகத்தான ஆட்சிகள், ஆச்சரியத்திற்குரிய அவனது ஆற்றல்கள் பற்றிய அறிவும் ஏனைய அறிவுகளோடு சேர்ந்து ஒருங்கிணைந்திருந்தது என்பதை அவதானிக்கும் ஒருவர் அறிவார்.

## சகிப்புத்தன்மை:

நபி (ஸல்) அவர்கள் சகிப்பாளர்களின் தலைவராக இருந்துள்ளார்கள். தனது அழைப்பை பரப்பும் பணியில் சொல்லெனா துன்பங்களை சந்தித்தார்கள், அல்லாஹ்விடத்தில் கூலியை எதிர்ப்பார்த்தவர்களாக பொறுமையோடு இவைகளையெல்லாம் சகித்துக் கொண்டார்கள்.

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் தமது முகத்திலிருந்து இரத்தத்தை துடைத்தவர்களாக, அல்லாஹ்வுடைய தூதர்களில் ஒரு தூதருக்கு அவருடைய சமூகத்தினர் அடித்துக் காயப்படுத்திய சம்பவத்தை கூறியவர்களாக, யா அல்லாஹ்! எனது சமூகத்தினரை மன்னித்து விடு, ஏனெனில் அவர்கள் அறியாதவர்களாக இருக்கிறார்கள் என்று ரஸூல் (ஸல்) அவர்கள் கூறியதை நான் இப்போதும் காண்பதைப் போல் இருக்கிறது என்றார்கள். (புஹாரி, முஸ்லிம்)

மேலும் ஜுனைது பின் சுப்யான் (ரலி) கூறுகிறார்கள்: ஒரு யுத்தத்தின் போது நபி (ஸல்) அவர்களின் ஒரு விரல் இரத்தக் காயத்திற்கு உள்ளாகியது, அப்போது அவர்கள் தமது விரலை நோக்கி நீ ஒரு விரல்தான் இரத்தக்காயத்திற்கு உள்ளாக்கப்பட்டாயே தவிர, இறைவனின் பாதையில் எந்த ஒன்றையும் (அதிகமாக) சந்திக்கவில்லை என்று கூறக்கூடியவர்களாக இருந்தார்கள். (புஹாரி, முஸ்லிம்)

## மனத்தூய்மை:

அல்லாஹ் ஏவியதற்கிணங்க நபி (ஸல்) அவர்கள் அனைத்து

செயல்கள், விடயங்களிலும் மனத்தூய்மையோடு செயல்படக் கூடியவர்களாக இருந்தார்கள். இது பற்றி இறைவன் கூறும்போது: என்னுடைய தொழுகை, வணக்க வழிபாடுகள், வாழ்வு, மரணம் அனைத்துமே உலகத்தாரின் பரிபாலகன் அல்லாஹ்வுக்கே என்று நபியே நீர் கூறுவீராக. (அல் அன்ஆம் 162-163)

நற்குணமும் அன்றாட வாழ்க்கையும்: நபி (ஸல்) அவர்களது குணத்தைப்பற்றி அன்னாரது மனைவி அன்னை ஆயிஷா (ரலி) அவர்களிடம் வினவப்பட்டபோது: அவர்களது குணம் அல்குர்ஆனை பிரதிபலிப்பதாக இருந்தது. என்றார்கள் (அஹ்மத்). இதன் அர்த்தம் யாதெனில் நபி (ஸல்) அவர்கள் அல்குர்ஆனுடைய ஏவல்களை அப்படியே ஏற்று நடக்கக் கூடியவர்களாகவும், விலக்கல்களை அப்படியே தவிர்த்து நடக்கக் கூடியவர்களாகவும், சிறப்பான விடயங்களை கடைப்பிடிக்கக் கூடியவர்களாகவும், மானக்கேடானவற்றை கைவிடக்கூடிவர்களாகவும் இருந்தார்கள். இவைகள் வெளிப்படையான, அந்தரங்கமான விடயங்களாக இருப்பினும் சரியே. இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை ஏனெனில், அவர்கள் நிச்சயமாக அல்லாஹ் என்னை சங்கைமிகு பண்புகளை பூர்த்தியாக்குவதற்கும், அழகிய செயல்களை பூர்த்திச் செய்வதற்குமே என்னை நபியாக அனுப்பியுள்ளான் என்று கூறினார்கள் அல்லவா?. (புஹாரி, அதபுல் முப்ரத்)

பத்து வருடங்களாக நபி (ஸல்) அவர்களுக்கு இரவும், பகலும், பிரயாணத்திலும், ஊரில் தங்கியிருக்கும் போதும் பணியாளராக இருந்த அனஸ் (ரலி) அவர்கள் கூறும் போது: நபி (ஸல்) அவர்கள் மனிதர்களிலேயே நற்குணத்தில் சிறந்தவர்களாக இருந்தார்கள் என்றார்கள். (புஹாரி, முஸ்லிம்)

மேலும் கூறினார்கள்: நாயகம் (ஸல்) அவர்கள் யாரையும் திட்டக்கூடியவர்களாகவோ, மானபங்கப்படுத்தக் கூடியவர்களாகவோ, ஏசக்கூடியவர்களாக (தூற்றல், சபித்தல்) இருந்ததில்லை, அப்படி யாரையாவது குறை கூறுவதாயின் அவருக்கு என்ன நேர்ந்தது? அவரது கண் புருவம் நாசமாகிவிட்டனவா? என்பார்கள் என அனஸ் (ரலி) கூறினார்கள்.

## பண்பு:

ஸஹ்ல் பின் ஸஃது (ரலி) அவர்கள் கூறினார்கள்: நபி (ஸல்) அவர்களுக்கு பால் கொண்டுவந்து கொடுக்கப்பட்டது, அதிலிருந்து அவர்கள் குடித்து விட்டு ஏனையவர்களுக்கு கொடுக்க நாடியபோது, தனது வலப்பக்கத்தில் ஒரு சிறுவனும், தனது இடது புறத்தில் பெரியவர்களும் அமர்ந்திருப்பதைக் கண்டார்கள், எனவே முதலில் பெரியவர்களுக்கு கொடுப்பதற்காக வலது பக்கத்தில் அமர்ந்திருந்த சிறுவனிடம் அனுமதி கேட்டார்கள், அதற்கு அச்சிறுவர் யாரஸூலுல்லாஹ் அல்லாஹ்வின் மீது ஆணையாக உங்களிடமிருந்து எனது பங்கை யாருக்கும் நான் விட்டுக்கொடுக்கமாட்டேன் என்று கூறியதும் நபி (ஸல்) அச்சிறுவனது கையிலேயே அப்பாத்திரத்தை கொடுத்தார்கள். (புஹாரி, முஸ்லிம்)

## சீர்திருத்தவாதி:

ஸஹ்ல் பின் ஸஃது (ரலி) அவர்கள் கூறினார்கள்: குபா வாசிகள் தமக்கு மத்தியில் பிரச்சினை ஏற்படுத்திக்கொண்டு ஒருவருக்கொருவர் கற்களை எறிந்து சண்டையிட்டுக் கொண்டார்கள், இவ்விடயம் நபி (ஸல்) அவர்களுக்கு எத்திவைக்கப்பட்டபோது, 'எங்களை அழைத்துக் செல்லுங்கள், அவர்களுக்கு மத்தியில் சமாதானம் செய்துவைப்போம்' என்பதாகக் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

## நன்மையை ஏவுதல் தீமையை தடுத்தல்:

அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்: தங்க மோதிரம் அணிந்திருந்த ஒருவரை நபி (ஸல்) அவர்கள் கண்டபோது அதை அவரிடமிருந்து களைந்து எறிந்துவிட்டார்கள், மேலும் கூறினார்கள்: உங்களில் ஒருவர் நெருப்புத்தனலை எடுத்து தனது கையிலே வைத்துக்கொள்கிறார், பின் நபி (ஸல்) அவர்கள் அவ்விடத்தைவிட்டும் அகன்று சென்ற போது, (அம்மோதிரத்தை) அணிந்திருந்த மனிதருக்குக் கூறப்பட்டது, (எறியப்பட்ட) உமது மோதிரத்தை எடுத்து வேறு வழிகளில் பிரயோஜனம் அடைந்து கொள்ளலாமே என்று, அதற்கு அம்மனிதர் கூறியதாவது: இல்லை நபி (ஸல்) அவர்கள் களைந்தெறிந்த அம்மோதிரத்தை அல்லாஹ்வின்

மீது ஆணையாக நான் எடுக்கவே மாட்டேன் என்றார். (புஹாரி, முஸ்லிம்)

## சுத்தத்தை விரும்புதல்:

அல் முஹாஜிர் பின் குன்பத் (ரலி) கூறினார்கள்: நான் நபி (ஸல்) அவர்களிடம் வந்தேன், அப்போது அவர்கள் சிறுநீர் கழித்துக்கொண்டிருந்தார்கள், நான் அவருக்கு ஸலாம் சொன்னேன்: நபி (ஸல்) அவர்கள் வுளூ செய்யும் வரை பதில் சொல்லவில்லை, பின்பு என்னிடம் வருந்திவிட்டு, சுத்தமில்லாத நிலையில் அல்லாஹ்வை நினைவூட்டுவதை நான் வெறுத்தேன் என்பதாகச் சொன்னார்கள். (அபூதாவுத்)

## நாவைப்பேணல்:

அப்துல்லாஹ் பின் அபீ அவ்ஃபா (ரலி) அறிவிக்கிறார்கள்: நாயகம் (ஸல்) அவர்கள் அதிகம் திக்ர் செய்யக்கூடியவர்களாகவும், வீண் பேச்சில் குறைவானவர்களாகவும், தொழுகையை நீட்டக்கூடியவர்களாகவும், பிரசங்கத்தை சுருக்கக்கூடியவராகவும் இருந்தார்கள். மேலும் விதவைகளிடம், எளியவர்களிடம் சென்று அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொடுக்கத் தயங்கமாட்டார்கள். (அன்நசயீ)

## அதிக வணக்கம்:

அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் தமது பாதங்கள் வீங்கிவிடும் அளவுக்கு இரவில் நின்று இறைவனை வணங்கக்கூடியவர்களாக இருந்தார்கள், அதனை அவதானித்த அன்னை ஆயிஷா (ரலி) அல்லாஹ்வின் தூதரே, ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்? உங்களின் முன் பின் பாவங்களைத்தான் அல்லாஹ் மன்னித்துவிட்டானே என்று கூறினார்கள், அதற்கு நபி (ஸல்) அன்னை ஆயிஷாவைப் பார்த்து, அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள ஒரு அடிமையாக இருப்பதை நான் விரும்பக்கூடாதா? என்று கூறினார்கள்.

## மிருதுவான தன்மையும், இரக்க சிந்தையும்:

அபூ ஹுரைரா (ரலி) கூறுகிறார்கள்: தூசீ குலத்தைச் சேர்ந்த அத்துபைல் இப்னு அம்ருவும், அவரது சில தோழர்களும் நபி (ஸல்) அவர்களிடம் வந்து இறைவனின் தூதரே, நிச்சயமாக தூசீ குலத்தவர் உங்கள் அழைப்பை ஏற்க மறுத்தும், மேலும் தவறுகளும் புரிந்து வருகின்றனர், எனவே அவர்களை தூற்றுங்கள் (சபியுங்கள்) என்றதும் அங்கிருந்த சிலர் தூசீ குலத்தாருக்கு அழிவுதான் என்றனர். அப்போது நபி (ஸல்) அவர்கள், யா அல்லாஹ் தூசீ குலத்தவருக்கு நேர்வழிகாட்டு, மேலும் அவர்களை இம்மார்க்கத்தின் பக்கம் கொண்டுவா என்று பிரார்த்தித்தார்கள். (புஹாரி, முஸ்லிம்)

## அழகிய தோற்றம்:

பராஃ இப்னு ஆசிப் (ரலி) கூறினார்கள்: நபி (ஸல்) அவர்கள் அளவான உயரமும், விரிந்த தோள் புஜமும், காதுச்சோனையை தொடுமளவுக்கு முடி கொண்டவராக இருந்தார்கள். மேலும் நான் அவர்களை செந்நிற வேஷ்டியிலும், சட்டையிலும் கண்டேன், அவர்களை விட அழகான ஒருவரை நான் கண்டதேயில்லை என்பதாக.

## உலகப்பற்றற்ற தன்மை:

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) கூறினார்கள்: நபி (ஸல்) அவர்கள் ஒரு ஈச்சம் பாயின் மீது படுத்திருந்து எழுந்தார்கள், அப்போது அவர்களது மேனியில் அதன் சுவடு பதிந்திருப்பதைக் கண்ட நாங்கள் அல்லாஹ்வின் தூதரே! உங்களுக்காக ஒரு பஞ்சு விரிப்பை தயார் செய்து தரட்டுமா? எனக் கூறினோம், இதனைக் கேட்ட அவர்கள் எனக்கும் துன்யாவுக்கும் (உலகத்திற்கும்) என்ன இருக்கிறது? துன்யாவில் எனது நிலமை ஒரு பிரயாணியை ஒத்ததாகும், பிரயாணம் செய்பவன் இளைப்பாறுவதற்காக வேண்டி ஒரு மரத்தினடியில் சிறிது நேரம் ஓய்வு எடுத்து(தங்கி) விட்டு, (பிரயாணத்தை தொடர்வதற்காக) பின்பு அம்மரத்தை விட்டு சென்று விடுவான் என்றார்கள். (திர்மிதி)

அம்ரு இப்னு ஹாரிஸ் (ரலி) கூறினார்கள்: நபி (ஸல்) அவர்கள் மரணித்த போது பணம், காசு (திர்ஹம், தீனாரையோ) தங்கம்,

வெள்ளி நாணயங்களையோ, அடிமைப் பெண்ணையோ, ஆணையோ விட்டுச்செல்லவில்லை. தவிர அவர்களது வெண்ணிற கழுதையையும், யுத்த ஆயுதங்களையுமே விட்டுச்சென்றார்கள். (கைபரில்) ஒரு தோட்டம் இருந்தது, அதையும் கூட பைதுல்மாலுக்கு தர்மம் செய்து விட்டிருந்தார்கள். (புஹாரி)

## தன் தேவையை விட்டுக்கொடுத்தல்:

ஸஹ்ல் இப்னு ஸஃஅத் (ரலி) கூறினார்கள்: ஒரு பெண்மணி புர்தா ஒன்றைக் கொண்டு வந்தார்கள், புர்தா என்றால் என்னவென்று அங்கிருந்தவர்கள் கேட்டார்கள், ஆம்! கைகளால் நெய்யப்பட்ட ஒரு ஆடை என்று கூறப்பட்டது. இறைவனின் தூதரே, இவ்வாடையை நானே எனது கைகளால் நெய்தேன் என்று கூறி இதை நீங்கள் அணிந்து கொள்ள வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள். எனவே நபி (ஸல்) அவர்கள் (ஆர்வத்தோடு), தேவையோடு எடுத்து அதை வேஷ்டியாக அணிந்தவர்களாக எங்களிடம் வந்தார்கள். அப்போது அங்கிருந்த ஒருவர் இறைவனின் தூதரே அதை எனக்கு அணிவிப்பீர்களா? என்று கேட்டார், ஆம் என்று கூறியவர்களாக நபி (ஸல்) அவர்கள் தமது அமர்விடத்திலிருந்து எழுந்து சென்று அவ்வேஷ்டியை களைந்து, அதனை கேட்டவருக்கு கொடுத்தனுப்பினார்கள். இதனை அவதானித்த அக்கூட்டத்திலுள்ள சிலர் நீர் கேட்டது கொஞ்சம் கூட சரியல்ல, உனக்குத் தெரியும் நபி (ஸல்) அவர்கள் கேட்கப்பட்ட ஒன்றை மறுக்கமாட்டார்களென்று என்பதாக, அப்போது அம்மனிதர் கூறினார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் மரணித்தால் இது எனது கஃபன் துணியாக இருக்க வேண்டுமென்பதற்காவே கேட்டேன் என்பதாக. அம்மனிதர் மரணித்தபோது அப்புர்தாவே (அப்போர்வையே) அவருக்குக் கஃபனாக இருந்தது என்பதாக ஸஹ்ல் (ரலி) கூறினார்கள். (புஹாரி)

## உறுதியான இறைநம்பிக்கையும் (தவக்குல்), அல்லாஹ்வையே சார்ந்திருத்தலும்:

அபூபக்ர் (ரலி) கூறினார்கள்: நானும் நபி (ஸல்) அவர்களும்

சவ்ர் குகையில் மறைந்திருந்த சமயம், எங்களை தேடி வந்த எதிரிகளின் பாதங்களை மிக அருகாமையில் கண்டேன், அச்சமயத்தில் நான் இறைவனின் தூதரே! அவர்களில் ஒருவன் குனிந்து அவன் பாதத்தினை நோக்கினால் நம்மை கண்டுவிடுவான் என்றேன், அதற்கு நபி (ஸல்) அவர்கள் அபூபக்கரே! நம்மிருவரோடு மூன்றாமவனாக அல்லாஹ் இருப்பதைப்பற்றி உமது அபிப்பிராயமென்ன? என்று கேட்டார்கள். (புஹாரி, முஸ்லிம்)

## அன்பும் பாசமும்:

அபூ கதாதா (ரலி) கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு தொழுகை நடாத்துவதற்காக வந்தார்கள், அவர்களின் தோளின் மீது அபுல் ஆஸின் மகள் உமாமா (உமைமா) என்ற குழந்தையை சுமந்திருந்தார்கள். எனவே அவர்கள் தொழுகையில் ருகூ செய்கின்ற போது கீழே வைப்பார்கள், அவர்கள் ருகூவில் இருந்து நிலைக்கு வந்தால் மீண்டும் தூக்கி தோளில் வைத்துக் கொள்வார்கள். (புஹாரி, முஸ்லிம்)

## எளிமை படுத்தல்:

அனஸ் ரலி அறிவிக்கிறார்கள்: நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள், நான் தொழுகையை நீட்ட வேண்டுமென்ற எண்ணத்தில் தொழுகைக்குள் நுழைவேன். அப்போது (தொழுகைக்கு சமூகம் தந்திருக்கும் தாய்மார்களின் குழந்தைகள் அழும் சத்தத்தை நான் கேட்டால், நான் தொழுகையை சுருக்கி விடுவேன், ஏனெனில் குழந்தைகளின் அழுகுரலைக் கேட்டால் ஒரு தாயின் உள்ளம் என்ன பாடுபடும் என்பதை நான் அறிவேன் என்றார்கள்.

## பேணுதல்:

அபு ஹுரைரா (ரலி) கூறுகிறார்கள்: நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக, நிச்சயமாக நான் எனது மனைவியரிடத்தில் செல்வேன், அப்போது எனது விரிப்பின் மீது ஈச்சம் பழங்கள் விழுந்து கிடக்கும், அதனை சாப்பிடுவதற்காக எனது வாய்க்கு உயர்த்துவேன் பின்

அது ஸதகாவை(தர்மத்தை)ச் சேர்ந்த ஈச்சம் பழமாக இருக்குமோ என்ற அச்சம் வரும் அதனை அப்படியே சாப்பிடாமல் போட்டுவிடுவேன் என்பதாக அறிவிக்கிறார்கள். (புஹாரி, முஸ்லிம்)

## அல்லாஹ்வின் பாதையில் செலவிடல்:

அனஸ் (ரலி) கூறுகிறார்கள்: இஸ்லாத்தை தழுவ வேண்டுமென்பதற்காக எதனைக் கேட்டாலும் ரஸூல் (ஸல்) அவர்கள் கொடுத்துவிடுவார்கள், ஹுனைன் யுத்தத்திற்கு பின் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்தார் அவருக்கு இரண்டு மலைக்கு இடைப்பட்ட அளவு ஆடுகளை கொடுத்தார்கள், அவர் தமது சமூகத்தினரிடம் சென்று எனது சமூகத்தினரே! இஸ்லாத்தை தழுவுங்கள் நிச்சயமாக முஹம்மத் வறுமையை அஞ்சாமல் இருக்குமளவிற்கு தர்மம் வழங்குகிறார் என்பதாகக் கூறினார். (முஸ்லிம்)

## பிறருக்கு உதவுதலை விரும்புதல்:

அன்னை ஆயிஷா (ரலி) அவர்களிடம் நபி (ஸல்) வீட்டில் இருக்கும் போது என்ன செய்து கொண்டிருப்பார்கள்? என்று வினவப்பட்ட போது, வீட்டு வேலைகளில் தமது மனைவியருக்கு உதவி செய்பவர்களாக இருப்பார்கள். ஆனால் தொழுகை நேரம் வந்துவிட்டால் அதற்காகச் சென்றுவிடுவார்கள் என்பதாக அறிவிக்கிறார்கள். (புஹாரி)

மேலும் பராஃ பின் ஆஸிப் (ரலி) கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் அகழ் போருக்காக வேண்டி, அகழி தோண்டிக் கொண்டிருந்த நாளன்று நான் கண்டேன், அவர்கள் மண்ணைச் சுமந்து சென்று கொட்டக்கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் அடர்ந்த முடியுள்ளவர்களாக இருந்த காரணத்தால் அவர்களது மார்புப் பகுதியிலுள்ள ரோமங்களை மண் மூடி இருந்தது. மேலும் அவர்கள் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் சொல்லிக் கொண்டிருந்த கவிதை அடிகளை பின் தொடர்ந்து சொல்லிய வண்ணமிருந்தார்கள்:

எங்கள் இறைவனே! நீ இல்லையென்றால் நாங்கள் நேர்வழி பெற்றிருக்க மாட்டோம், மேலும் நாங்கள் தொழக்கூடியவர்களாகவோ,

தர்மம் கொடுக்கக்கூடியவர்களாகவோ இருந்திருக்கமாட்டோம், எனவே எங்கள் மீது மன அமைதியை இறக்கி வைப்பாயாக!

எதிரிகளை சந்திக்கும் வேளையில் எங்கள் பாதங்களை உறுதியாக்கி வைப்பாயாக!

நிச்சயமாக எதிரிகள் எங்கள் மீது வரம்பு கடந்து விட்டார்கள்.

அவர்கள் குழப்பம் விளைவிக்க நாடினால் எங்களை விட்டும் அதைத் தடுப்பாயாக. (புஹாரி, முஸ்லிம்)

## உண்மை:

பொய் பேசுவதை விட மிகக்கோபத்தை ஏற்படுத்தும் ஒரு செயல் நபி (ஸல்) அவர்களிடம் இருந்ததில்லை. ஒருவர் நபி (ஸல்) அவர்களுக்கு மத்தியில் பொய்யுரைத்து விட்டால், அவர் அதற்காக (தவ்ஃபா) பாவமன்னிப்பு கேட்காதவரை அவரைப்பற்றிய நினைவு அவர்களுக்கு இருந்து கொண்டே இருக்குமென்பதாக அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் தெரிவிக்கிறார்கள். (திர்மிதி)

அவர்களின் பகைவர்கள் கூட அவர்களை உண்மையாளர் என்று சான்று பகன்றுள்ளனர், நபி (ஸல்) அவர்களுக்கு மிகக்கடும் எதிரியாக இருந்த அந்த அபூ ஜஹல் கூட, ஒருநாள் நபி (ஸல்) அவர்களை நோக்கிக் கூறினான்: முஹம்மதே! நீர் பொய்யர் என்று நான் கூறமாட்டேன், இருந்தும் நீர் (இறைவாக்கு) என்று ஒன்றை கூறுகின்றீரே, அதனையும் நீர் அதன் பக்கம் அழைப்பதையுமே பொய்யென்று நான் மறுக்கின்றேன் என்பதாகக் கூறியுள்ளான்.

இக்கூற்றை கண்டித்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: நபியே! இவர்கள் புனைந்து கூறுபவை திண்ணமாக உம்மைக் கவலையில் ஆழ்த்துகின்றன என்பதை நாம் அறிவோம், ஆனால் உண்மையில் அவர்கள் (இவ்வக்கிரமக்காரர்கள்) அல்லாஹ்வின் வசனங்களையே மறுக்கின்றனர். (அல் அன்ஆம் 33)

## அல்லாஹ்வின் வரையறைகளை மகத்துவப்படுத்தல்:

அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பாவமில்லை

என்ற இரு விடயங்களில் ஒன்றை தேர்வு செய்யும்படி நபி (ஸல்) அவர்களுக்கு உரிமை வழங்கப்பட்டால், மிகவும் இலேசானதை தேர்வு செய்வார்கள், பாவமாக இருப்பின் அவ்விரு விடயங்களிலிருந்தும் மிகத்தூரமாகிவிடுவார்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக அவர்கள் தனக்காக எந்த ஒன்றுக்கும் பழி தீர்த்தது கிடையாது, ஆனால் அல்லாஹ்வின் விடயமொன்றை யாராவது பங்கப்படுத்தினால் அல்லாஹ்வுக்காக வேண்டி பழி தீர்த்தே ஆவார்கள். (புஹாரி, முஸ்லிம்)

## முகமலர்ச்சி:

அப்துல்லாஹ் பின் ஹாரிஸ் (ரலி) கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்களை விடவும் அதிக புன்முறுவல் பூத்த ஒருவரை நான் கண்டதில்லை. (திர்மிதி)

## நம்பிக்கையும் (நாணயம்) வாக்கை நிறைவேற்றலும்:

நபி (ஸல்) அவர்களின் நம்பிக்கை நாணயத்தின் ரகமே தனி என்றுதான் கூறவேண்டும். நபி (ஸல்) அவர்களுக்கும் அன்னாரை தூ தராக ஏற்ற அவரது தோழர்களுக்கும் இடைவிடாது தொல்லைகளும், துன்பங்களும் கொடுத்துக்கொண்டிருந்த அந்த மக்கத்துக் காஃ பிர்கள்கூட தமது பொருட்களையும், அடமானங்களையும் நபி (ஸல்) அவர்களிடமே பாதுகாப்புக்கருதி அமானிதம் வைத்திருந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் இவர்களது துன்பம் கொடுமைகளுக்கு ஈடு கொடுக்கமுடியாமல் மக்காவைவிட்டும் மதினாவுக்கு ஹிஜ்ரத் செல்லும் நாள் வரைக்கும் அவ்வமானிதப் பொருட்கள் நீண்ட காலமாக பாதுகாப்பாக நபி (ஸல்) அவர்களிடமே தான் இருந்து வந்தது, எனவே நபி (ஸல்) ஹிஜ்ரத் மேற்கொண்ட வேளையில் தமது சிறிய தந்தையின் மகன் அலி (ரலி) அவர்களை அழைத்து மக்காவில் மூன்று நாட்கள் தங்கியிருந்து அனைத்து அமானிதப் பொருட்களையும் அடமானங்களையும் அதற்குரியவர்களிடம் ஒப்படைத்துவிடுமாறு கூறிச்சென்றார்கள்.

நபி (ஸல்) அவர்கள் குரைஷிகள் தரப்பிலிருந்து சமாதான உடன்

படிக்கைக்காக வந்திருந்த சுஹைல் பின் அம்ர் என்பவனிடம் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு மத்தியில் மக்கா நகரில் எஞ்சியிருக்கும் முஸ்லிம்களில் ஒருவரையும் முஸ்லிம்கள் தம்முடன் அழைத்துச் செல்லக்கூடாது முஸ்லிம் ஒருவர் மக்கா நகருக்கு திரும்பி வர விரும்பினால் அவரைத் தடுக்கக்கூடாது மேலும் இறை மறுப்பாளர்கள் அல்லது முஸ்லிம்களில் எவரேனும் மதீனா நகருக்கு வந்து விட்டால் அவரை மக்கா நகருக்கு திருப்பி அனுப்பிவிட வேண்டும் ஆனால் முஸ்லிம்கள் எவராவது மக்கா நகருக்கு சென்றால் அவர் திருப்பி அனுப்பப்படமாட்டார் என்ற இந்த நிபந்தனையுமாகும். இந்நிபந்தனை முஸ்லிம்களுக்கு மத்தியில் பெரும் ஆத்திரத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியது, இருந்த போதும் நபி (ஸல்) இதற்கு சம்மதித்தார்கள்.

இப்போதுதான் சமாதான உடன்படிக்கைப் பத்திரத்தை எழுதிக்கொண்டிருக்கிறார்கள் தற்செயலாக குரைஷிப் பிரதிநிதி சுஹைலின் மகனார் அபூஜந்தல் (ரலி) அவர்கள் மக்கா நகரிலிருந்து எப்படியோ தப்பியோடி இந்த இடத்திற்கு வந்து சேர்ந்து விட்டார்கள், விலங்குகளை அணிந்து கொண்டு முஸ்லிம்களின் முன்னால் வந்து விழுந்து விட்டார்கள், அனைவருக்கும் தம் பரிதாப நிலையை எடுத்துரைத்தார்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட குற்றத்திற்காக தண்டனையாக அவர்களுக்கு எப்படிப்பட்ட கொடுமைகள் இழைக்கபட்டு வந்தன என்று எடுத்துக் கூறினார்கள், அபூஜந்தல் அண்ணலாரிடம் நாயகமே! என்னை இறைமறுப்பாளர்களிடமிருந்து விடுவித்து தங்களுடன் அழைத்துச்செல்லுங்கள் என்று கெஞ்சினார்கள் இதனைக் கண்ட சுஹைல் சமாதான ஒப்பந்தத்தை நிறைவேற்றிட இதுவே சிறந்த சந்தர்ப்பமாகும் ஒப்பந்தத்தின்படி தாங்கள் அபூஜந்தலை தங்களுடன் அழைத்து செல்லமுடியாது என்று கூறினார். இது மிகச் சிக்கலான ஒரு நேரமாக இருந்தது, ஒரு புறம் உடன்படிக்கையை மதித்து நடக்க வேண்டியிருந்தது மற்றொருபுறம் நிரபராதியான ஒரு முஸ்லிமின் மீது அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஒரே காரணத்திற்காக கொடுமை இழைக்கப்படும் பிரச்சனை முன் நின்றது, மேலும் அபூஜந்தல் என் முஸ்லிம் சகோதரர்களே! நீங்கள் என்னை இறைமறுப்பாளர்களின் கையில் ஒப்படைக்க விரும்புகிறீர்களா? என்று

கெஞ்சிக்கொண்டிருந்தார் இருந்த போதிலும் நபி (ஸல்) அவர்கள் உடன் படிக்கைக்கு இணங்க அபூஜந்தலை சுஹைலுடன் திருப்பி மக்காவுக்கு அனுப்பிவைத்தார்கள்.

உங்களைப்போல் கொடுமைக்குள்ளானவர்களுக்கு அல்லாஹ் ஒரு விடிவைக் காட்டுவான் இப்போது சமாதான உடன்படிக்கை ஏற்பட்டுவிட்டது இனி நாம் அவர்களிடம் ஒப்பந்தத்தை முறிக்கவோ அதற்கு எதிராக செயல்படவோ முடியாது என்றும் கூறினார்கள். (அஹ்மத்)

பின்னர் நபி ஸல் அவர்கள் மதீனாவுக்கு திரும்பி வந்த பிறகு அபூ பஷீர் என்பவர் (இவர் மக்காவாசி இஸ்லாத்தைத் தழுவியிருந்தார்) தன்னையும் தனது ஈமானையும் பாதுகாத்துக்கொள்ள மதீனாவில் தஞ்சம் புகுந்தார்கள் இவரை அழைத்துவரும்படி குரைஷிகள் இருவரை மதீனாவுக்கு அனுப்பிவைக்கின்றனர். இவர்கள் நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்து நமக்கு மத்தியில் செய்து கொண்ட உடன்படிக்கையின் படி அபூ பஷீரை தம்மோடு திருப்பி அனுப்பும்படி கூறினார்கள். நபி (ஸல்) அவர்களும் இவரை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டார்கள்.

## வீரமும் தடுமாற்றமின்மையும்:

அலி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பத்ருப்போர் தினத்தன்று நபி (ஸல்) அவர்கள் மிக வீரமிக்க நிலையில் எதிரிகளுக்கு மிக அண்மையாக இருந்தார்கள், அன்று நாங்களெல்லாம் நபி (ஸல்) அவர்களைக் கொண்டு பாதுகாப்புப் பெற்றுக் கொண்டிருந்ததை நீர் காண்பீர் என்பதாக. போர்களம் அல்லாத இடங்களில் அவர்களது வீரம் எத்தகையது என்பதைப்பற்றி அனஸ் (ரலி) பின் வருமாறு விவரிக்கிறார்கள்: நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் அழகு படைத்தவர்களாகவும், மிகப்பெரும் வீரராகவும் திகழ்ந்தனர். ஒரு நாள் மதீனாவாசிகள் திடுக்கிட்டனர் உடனே வீட்டை விட்டு வெளியேறி (திடுக்கத்தை ஏற்படுத்திய) சப்தம் வந்த திசையை நோக்கி புறப்பட்டனர். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கழுத்தில் வாளைத் தொங்கவிட்டு, அபூ தல்ஹா (ரலி) அவர்களின் சேனம் பூட்டப்படாத குதிரையின் எதிரில் வந்தனர். அஞ்சாதீர்கள்!

அஞ்சாதீர்கள்! என்று கூறிக்கொண்டே வந்தனர் (வேகத்தில்) இக் குதிரை கடலாக இருக்கிறது எனவும் குறிப்பிட்டனர். (புஹாரி)

எனவே நபி (ஸல்) அவர்கள் அக்காரிருளில் கூட நிலமையை அறிந்து வர தம்மோடு யாரும் கூட வரவேண்டுமென எதிர்பார்த்திராமல் தன்னந்தனி மனிதராக சென்று வந்தார்கள்.

இது போல் உஹத் யுத்தத்தின் போது நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களிடம் மஷூ ரா (ஆலோசனை) செய்தார்கள், தோழர்கள் யுத்தம் செய்ய வேண்டுமென்று ஆலோசனை வழங்கினார்கள் ஆனால் நபி (ஸல்) அவர்களின் முடிவு இதற்கு மாற்றமாக இருந்தும் ஆலோசனைக்குக் கட்டுப்பட்டார்கள், பின்னர் தோழர்கள் நபி (ஸல்) அவர்களின் முடிவு தமது முடிவுக்கு மாற்றமானதாக இருந்ததை அறிந்த போது கை சேதப்பட்டார்கள், எனவே அன்சாரிகளான மதினாவாசிகள் நாம் நபி (ஸல்) அவர்களின் முடிவை மறுத்து விட்டோமே! என்று கூறியவர்களாக நபி (ஸல்) அவர்களிடம் வந்து இறைவனின் தூ தரே! அப்படியாயின் உங்கள் விடயம் என்றபோது, நிச்சயமாக எந்த ஒரு நபிக்கும் அவர் யுத்தம் செய்வதற்கான அணிகலன்களை அணிந்துவிட்டால் யுத்தம் முடியும் வரை அதைக் களைவதற்கு உரிமையில்லை என்றார்கள். (அஹ்மத்)

## கொடையும் தர்மமும்:

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் மனிதர்களில் மிகப்பெரும் கொடைவள்ளலாக இருந்தார்கள், குறிப்பாக ரமளான் மாதம் ஜிப்ரீல் (அலை) அவர்கள் சந்திக்கின்ற வேளைகளில் மிகவும் கொடை கொடுக்கின்ற வள்ளலாய் திகழ்ந்தார்கள்: ஜிப்ரீல் (அலை) அவர்கள் ரமளான் மாதத்தின் ஒவ்வொரு இரவிலும் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து (அது வரை அருளப்பட்டிருந்த) அல்குர்ஆனை தொடர்ந்து ஓதும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள். தொடர்ந்து வீசும் காற்றை விட வேகமாக நபி (ஸல்) அவர்கள் நல்ல காரியங்களில் மிக அதிகமாக வாரி வழங்கும் கொடை வள்ளலாகவே திகழ்ந்தார்கள். (புஹாரி, முஸ்லிம்)

அபூதர் (ரலி) கூறுகிறார்கள்: நான் நபி (ஸல்) அவர்களுடன் பாறைகள் நிறைந்த மதீனாவின் ஹர்ராப் பகுதியில் இஷா (இரவு) நேரத்தில்நடந்து சென்று கொண்டிருந்த போது உஹத் மலை எங்களை எதிர்கொண்டது அப்போது நபி (ஸல்) அவர்கள் அபூதர்ரே! இந்த உஹத் மலை எனக்காக தங்கமாக மாறி அதிலிருந்து ஒரேயொரு தீனார் (பொற்காசு) என்னிடம் இருந்தாலும் அதை அல்லாஹ்வின் அடியார்களிடையே இப்படி இப்படியெல்லாம் செலவிடாமல் ஓர்இரவு அல்லது மூன்று இரவுகள் கழிந்து செல்வதைக்கூட நான் விரும்பமாட்டேன். கடனை அடைப்பதற்காக நான் எடுத்து வைக்கின்ற தீனாரைத் தவிர என்று சொன்னார்கள் (இந்த இடத்தில் அபூதர்) தமது கைகளால் (வலது இடது முன் ஆகிய பக்கங்களில் சைகை செய்து காட்டினார்கள். (புஹாரி)

ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்களிடத்தில் எந்த ஒரு பொருளையும் கேட்டு அவர்கள் இல்லை என்று என்றுமே சொன்னதில்லை. (புஹாரி)

## வெட்கம்:

அபூ ஸயீத் அல் குத்ரி (ரலி) அவர்கள் கூறியதாவது: நபி (ஸல்) அவர்கள் திரைக்குள் இருக்கும் கன்னிப்பெண்ணை விடவும் அதிக வெட்கமுடையவர்களாக இருந்தார்கள். மேலும் நபி (ஸல்) அவர்கள் எதையாவது வெறுத்தால் அது அவர்களுடைய முகத்தில் தெரிந்து விடும் என்று அதிகப்படியாக அறிவித்துள்ளார்கள். (புஹாரி, முஸ்லிம்)

## பணிவு:

நபி (ஸல்) அவர்கள் மனிதர்களிலேயே அதிகம் பணிவுத்தன்மையுடையவர்களாக இருந்தார்கள் எந்த அளவுக்கெனில் பள்ளிவாயிலுக்குள் இவர்களும் இவர்களது தோழர்களும் ஒன்றாக அமர்ந்திருப்பார்கள், புதிதாக இவரைத்தேடி வருபவர் இவரின் அதிக பணிவின் காரணமாக தோழர்களுக்கு மத்தியில் யார் முஹம்மது நபி (ஸல்) என பிரித்தறிந்து கொள்ளமாட்டார்.

இது பற்றி அனஸ் (ரலி) கூறுகிறார்கள்: ஒரு நாள் தினம்

பள்ளிவாயலினுள் நபி (ஸல்) அவர்களோடு ஒன்றாக அமர்ந்திருந்தோம் அச்சமயம் ஒரு மனிதர் ஒட்டகத்தில் வந்து அதிலிருந்து இறங்கி ஒட்டகத்தை கட்டிவிட்டு அங்கிருந்தவர்களிடம் உங்களில் முஹம்மது (ஸல்) என்பவர் யார்? என்றார் நபி (ஸல்) அவர்களோ தமது தோழர்களுக்கு மத்தியில் சாய்ந்தமர்ந்து கொண்டிருந்தார்கள், அப்போது நாங்கள் சொன்னோம் சாய்ந்தமர்ந்திருக்கும் இதோ இந்த வெள்ளை மனிதர்தான் என்று. (புஹாரி, முஸ்லிம்)

மேலும் நபி (ஸல்) அவர்கள் தனது பணிவின் காரணமாக தேவையுடையவர்கள் பலவீனமானவர்கள் ஏழை எளியவர்களோடு சென்று அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கத் தயங்கவோ பின்வாங்கவோ மாட்டார்கள். இது பற்றி அனஸ் (ரலி) கூறுகிறார்கள்: மதீனாவைச் சேர்ந்த ஒரு பெண்மணி நபி (ஸல்) அவர்களிடம் வந்து இறைவனின் தூதரே! நீங்கள் எனக்கொரு உதவி செய்யவேண்டும் என்று கூறினாள், அதற்குஅப்பெண்மணியை நோக்கி நபி (ஸல்) அவர்கள் மதீனாவின் எந்தத் தெருவில் உங்கள் தேவை இருக்கிறது அறிவியுங்கள்! நான் வந்து அதை நிறைவேற்றித் தருகிறேன் என்று சொல்லிவிட்டு அப்பெண்மணியின் தேவை முடியும் வரை சில தெருக்களிலே கூடவே இருந்தார்கள். (முஸ்லிம்)

## இரக்கம்:

அபூ மஸ்ஊத் அல் அன்ஸாரி (ரலி) அறிவிக்கிறார்கள்: ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து இறைவனின் தூதரே காலை நேரத் தொழுகையை நீட்டித் தொழுவிக்கின்ற ஒரு மனிதருக்காக வேண்டி நான் அக்காலை நேரத்தொழுகைக்கு தாமதமாகிச் செல்கிறேன் என்று கூறினார், அபூ மஸ்ஊத் கூறுகிறார்கள்: அன்றைய தினத்தைப் போல் கடுமையான கோபத்தோடு உபதேசம் செய்யக்கூடியவர்களாக இறைத்தூதர் (ஸல்) அவர்களை நான் கண்டதே இல்லை, பின்னர் நபி (ஸல்) அவர்கள் மக்களே! நிச்சயமாக மக்களை கஷ்டத்திற்கு உள்ளாக்கக் கூடியவர்கள் உங்களில் இருக்கின்றீர்கள், எனவே உங்களில் யாராவது மக்களுக்கு தொழுகை நடத்தினால் அதை சுருக்கிக் கொள்ளட்டும்! ஏனெனில் தொழக்கூடியவர்களுல்

தேவையுடையவர்கள், பலவீனமானவர்கள், நோயாளி போன்றோர் இருப்பர் என்பதாக கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

மேலும் உஸாமா பின் ஜெய்த் (ஸைய்த்) ரலி கூறியதாவது: தம்மகன் மரணத்தருவாயில் இருப்பதால் உடனே வரும்படி நபி (ஸல்) அவர்களின் மகள் ஜைனப் (ரலி) நபி அவர்களுக்கு செய்தி அனுப்பினார் நபி (ஸல்) அவர்கள் தம்மகளுக்கு ஸலாம் கூறி அனுப்பியதோடு எடுத்ததும் கொடுத்ததும் அல்லாஹ்வுக்கே, ஒவ்வொன்றுக்கும் அவனிடம் ஒரு குறிப்பிட்ட தவணையுண்டு எனவே பொறுமையைக் கொண்டு நன்மையை எதிர்பார்ப்பீராக! என்றும் கூறி அனுப்பினார்கள், அப்போது அவர்களின் மகள் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு கண்டிப்பாக வர வேண்டுமென கூறி அனுப்பினார்கள், உடனே நபி (ஸல்) அவர்கள் எழுந்தார்கள் அவர்களுடன் ஸஃது பின் உபாதா, முஆத் பின் ஜபல், உபை பின் கஅபு, ஸைத் இப்னு ஸாபித் ஆகியோர்களும் மற்றும் பலரும் எழுந்தனர் வீட்டுக்குச்சென்ற நபி (ஸல்) அவர்களிடம் சுவாசிக்க முடியாமல் திணறிக்கொண்டிருக்கும் குழந்தையைக் காட்டினார்கள், இற்றுப்போன பழைய தோல்துருத்திபோல் குழந்தையின் மார்பு ஏறி இறங்கியது நபி (ஸல்) அவர்களின் கண்கள் நீர் சொறிந்தன அல்லாஹ்வின் தூதரே என்ன இது (அழுகிறீர்கள்) என ஸஅத் (ரலி) கேட்டார்கள், அதற்கு நபி (ஸல்) அவர்கள் இது அல்லாஹ் தன் அடியார்களின் உள்ளங்களில் ஏற்படுத்திய இரக்க உணர்வாகும், நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களில் இரக்கமுடையவர்களுக்கே இரக்கம் காட்டுகிறான் என்றார்கள். (புஹாரி, முஸ்லிம்)

## சகிப்பும் மன்னித்தலும்:

அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறியதாவது: நான் நபி (ஸல்) அவர்களுடன் நடந்து சென்று கொண்டிருந்தேன் அப்போது அவர்கள் பக்கம் தடித்த நஜ்ரான் (எமன்) நாட்டின் சால்வை ஒன்றை போர்த்தி இருந்தார்கள், அப்போது கிராமவாசி ஒருவர் அவர்களைக் கண்டு அந்த சால்வையை வேகமாக இழுத்தார், எந்த அளவுக்கென்றால் அந்த கிராமவாசி வேகமாக இழுத்ததால் சால்வையின் ஓரப்பகுதி நபி (ஸல்) அவர்களுடைய தோளின் ஒரு மூலையில் காயம் ஏற்படுத்தி

அடையாளம் பதிந்திருப்பதை நான் கண்டேன் பிறகு அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் தாங்களிடமுள்ள அல்லாஹ்வின் செல்வத்திலிருந்து எனக்குக் கொடுக்கும்படி கட்டளையிடுங்கள் என்று கூறினார், உடனே நபி (ஸல்) அவர்கள் அவரைத் திரும்பிப்பார்த்துச் சிரித்து விட்டு பிறகு அவருக்கு கொடுக்கும்படி உத்தரவிட்டார்கள். (புஹாரி, முஸ்லிம்)

## விவேகத்திற்கு உதாரணம்:

ஜைத் இப்னு சக்னா (ச..னா) ரலி அவர்களின் ஹதீஸாகும்: இவர் யூத மதகுருவாக இருந்தவர் இவரிடம் நபி (ஸல்) அவர்கள் புதிதாக இஸ்லாத்தை ஏற்றிருந்த சிலரின் தேவையை நிறைவேற்ற கடன் வாங்கியிருந்தார்கள் ஜைது கூறுகிறார்: கடனை திருப்பித்தருவதற்கான தவணைக்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னர் நபி (ஸல்) அவர்களும் அவரது தோழர்களான அபூ பக்கர், உமர், உஸ்மான் இன்னும் அவரது தோழர்களும் மதீனா வாசி ஒருவரின் மைய்யித்தில் கலந்து கொள்ள வந்திருந்தார்கள் அவரது மைய்யித் தொழுகையை முடிந்தபின் நபி (ஸல்) அவர்கள் ஒரு சுவர் அருகே குனிந்து அதன் மீது அமர்ந்தபோது, நான் அவரது சட்டைக் காலரை பிடித்து கடுகடுத்த முகத்தோடு அவரை நோக்கி பின்வருமாறு கூறலானேன்: முஹம்மதே! என்னுடைய கடனை நீர் நிறைவேற்ற மாட்டீரா? அல்லாஹ்வின் மீது ஆணையாக அப்துல் முத்தலிப் குடும்பத்தினர் உம்மைப்போல் கடனை தாமதப்படுத்தமாட்டார்கள், ஏனெனில் அவர்களோடு நான் கலந்து பழகியிருக்கிறேன் என்று கூறிவிட்டு உமரை பார்த்தேன், அவருடைய முகத்தில் கண்களிரண்டும் கோபத்தால் பிதுங்கி கோல் போல் வட்டமாக ஆகிவிட்ட நிலையின் பின் அவரது பார்வையால் என்னை நோக்கினார், மேலும் கூறினார்: ஏய் அல்லாஹ்வின் விரோதியே! நான் பார்க்கக்கூடிய விதமாக இறைவனின் தூதருக்கு என்ன சொன்னாய்! என்ன செய்தாய்!... அல்லாஹ்வின் மீது ஆணையாக என் வாளால் உன் தலையை சீவியிருப்பேன் என்று கர்ஜிப்பதை நபி (ஸல்) அவர்கள் அமைதியாகவும் அடக்கமாகவும் பார்த்து விட்டு உமரை நோக்கிக் கூறினார்கள்: உமரே! நாம் உம்மிடத்திலிருந்து இதற்கு மாற்றமான பதிலையல்லவா எதிர்பார்த்தோம்.

‘அதாவது சிறந்த முறையில் கடனை திருப்பி ஒப்படைக்க வேண்டுமென்று எனக்கும், கடனைக்கேட்பதில் அழகிய முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அவருக்கும் சொல்வீர்களென்றல்லவா’ என்பதாக கூறிவிட்டு உமரே: இவருடன் சென்று அவருடைய கடனை நிறைவேற்றிவிட்டு அதிகமாக இருபது சாஉ (50 கிலோ) பேரீத்தம்பழம் நீர் அவரை திட்டியதற்காக கொடுத்தனுப்பும் என்று கூறி உமரை என்னுடன் அனுப்பிவைத்தார்கள். ஜைத் கூறுகிறார்: உமர் என்னோடு வந்து என்னுடைய கடனை நிறைவேற்றிவிட்டு 20 சாஉ (50 கிலோ) பேரீத்தம்பழம் அதிகமாகவும் தந்தார், அப்போது நான் உமரிடம்: இதை அதிகமாக ஏன் தருகிறீர்கள் என்று கேட்டேன்: அதற்கு உமர்: உம்மை நான் திட்டியதற்காக நபி (ஸல்) அவர்கள்தான் இதை உமக்கு அதிகப்படியாக கொடுக்கும்படி என்னிடம் கூறினார்கள் என்றேன். அப்போது நான் உமரே! என்னைத் தெரியுமா? என்றேன்: இல்லை. நீர் யார்? என்று கேட்டார், நான்தான் ஜைத் இப்னு சக்னா என்றேன், அதற்கவர் அந்த யூத மதகுருவா? ஆம் நான் அந்த மதகுருவேதான் என்றேன், அப்போது உமர் நீர் இறைத்தூ தரிடம் அவ்வாறு பேசவும் நடந்து கொள்ளவும் காரணமென்ன என்று கேட்டார், அப்போது நான் சொன்னேன், உமரே! தூதுத்துவத்தின் அனைத்து அடையாளங்களையும் அவரைப்பார்த்தபோதே நான் அறிந்து கொண்டேன், ஆனால் இரண்டைத் தவிர அவ்விரண்டையும் பரீட்சித்துப் பார்க்கவில்லை அவையாவன: அவரது ஞானம் (விவேகம்) அறியாமையை முந்திக்கொள்ளும். மேலும் கடுமையான மடத்தனம் கூட அவரை விவேகத்தின் பாலே அதிகரிக்கச்செய்யும் நிச்சயமாக இவ்விரண்டையும் நான் அவரிடம் பரீட்சித்துவிட்டேன்.

எனவே நிச்சயமாக நான் அல்லாஹ்வை (ரப்) பாதுகாவலனாகவும் மேலும் இஸ்லாத்தை மார்க்கமாகவும் மேலும் முஹம்மத் (ஸல்) அவர்களை இறைத்தூதராகவும் பொருந்திக்கொண்டேனென்று உமரே! நான் உம்மிடம் சாட்சி பகர்கின்றேன், மேலும் நான் மதீனாவிலேயே ஒரு பெரும் செல்வந்தன் எனவே எனது செல்வத்திலிருந்து அரைவாசியை முஹம்மத் (ஸல்) அவர்களின் சமூகத்தினருக்கு தர்மம் செய்துவிட்டதாகவும் நான் உம்மிடம் சாட்சி பகர்கின்றேன், என்பதைக் கேட்ட உமர் கூறினார்: அல்லது அவர்களின் சிலருக்கு என்று கூறும்

ஏனெனில் நீர் அவர்களின் சமூகத்தைச் சேர்ந்த அனைவர்களுக்கும் (உதவிட) முடியாமல் போகலாமென்பதாக, பின் அவர் அல்லது அவர்களின் சிலருக்கு என்றார், பின்னர் உமரும் ஜைதும் நபி (ஸல்) அவர்களிடம் திரும்பிச் சென்றதும் வணக்கத்திற்குத் தகுதியான நாயன் அல்லாஹ்வைத்தவிர வேறு யாருமில்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதருமாவார்களென்றும் நான் சாட்சி பகர்கின்றேன் என்று கூறி அவரை (ஈமான்) நம்பிக்கைக் கொண்டு அவரை உண்மைப்படுத்தி மேலும் அதிகமான போர்களில் அவர்களோடு சேர்ந்து போரிட்டு இறுதியாக தபூக் யுத்தத்தில் முன்னேறிச்சென்று எதிரிகளுடன் போராடி இறைவனடி சேர்ந்தார்கள். (இப்னு ஹிப்பான்)

அதே போன்று அவர்களின் மன்னிக்கும் மனப்பான்மைக்கு மிகப்பெரும் உதாரணம் மக்கா வெற்றிக்குப்பின் நபி (ஸல்) அவர்கள் தமக்கு சொல்லெனா துன்பங்களைக் கொடுத்த மக்காவாசிகளையெல்லாம் ஒன்று கூட்டி நான் உங்களுக்கு என்ன செய்யப் போவதாகக் கருதுகிறீர்கள்? என்றார்கள், அவர்கள் நபி (ஸல்) அவர்களைப் பார்த்துக் கூறினார்கள்:சங்கைக்குரிய சகோதரர், சங்கைக்குரிய சகோதரரின் மகன் என்பதாக, பின் நபி (ஸல்) அவர்கள் அங்கு குழுமியிருந்தவர்களைப் பார்த்து 'விடுதலை பெற்றவர்களாக நீங்கள் செல்லுங்கள் என்றார்கள். (பைஹக்கி)

## பொறுமை:

நபி (ஸல்) அவர்கள் பொறுமைக்கு உதாரணமாகத் திகழ்ந்தார்கள், அவர்கள் தமது இஸ்லாமிய ஓர் இறைப்பிரச்சாரத்தை ஆரம்பிப்பதற்கு முன்னரும் தமது சமூகத்தினர் செய்து வந்த மூட செயல்கள், சிலை வணக்கங்கள் போன்றவற்றின் மீதும் அவர் தமது பிரச்சாரத்தை வெளிப்படையாக அம்மக்களுக்கு மத்தியில் செய்ய ஆரம்பித்தபோதும் மக்காவாசிகள் அவர்களுக்கிழைத்த கொடுமைகலிருந்தும் தனது இறைவனிடத்தில் நன்மையை நாடியவர்களாக பொறுமையாக இருந்தார்கள், அதே போல் மதீனாவில் நயவஞ்சகர்கள் இழைத்த கொடுமைகளின் போதும் பொறுமையை கடைப்பிடித்தார்கள், இதே போல் தாம் உயிருடன் இருக்கும் போதே தமது மனைவியான கதீஜா

(ரலி) தமது புதல்வர்கள், தமது சிறிய தந்தை ஹம்ஸா (ரலி) போன்ற தமது நேசத்திற்குரியவர்களை இழந்த போதும் பொறுமையை கடைபிடித்தார்கள்.

அனஸ் இப்னு மாலிக் (ரலி) அறிவிக்கிறார்கள்: நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் அவர்களது மகனான (இப்ராஹீம்) என்பவரின் வளர்ப்புத் தந்தையான அபூ செய்ஃப என்பவரிடம் சென்றபோது நபி (ஸல்) அவர்கள் இப்ராஹீமை எடுத்து முத்தமிட்டு முகர்ந்தார்கள் பின்பொருமுறை நாங்கள் இப்ராஹீமைப்பார்க்க சென்றிருந்த போது இப்ராஹீம் மரணத்தருவாயில் மூச்சு திணறிக்கொண்டிருந்ததைப் பார்த்த நபி (ஸல்) அவர்களின் கண்களிரண்டும் கலங்கிற்று இதனை அவதானித்த அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ப் (ரலி) இறை தூதர் அவர்களே! நீங்களுமா கண்கலங்குகிறீர்கள்? என்றார்கள், அதற்கு நபி (ஸல்) அவர்கள் அவ்பின் மகனே! அது இரக்கத்தினாலாகும் என்று கூறிவிட்டு, பின்பு நிச்சயமாக கண் கண்ணீரைச் சிந்துகிறது, உள்ளம் கவலைப் படுகிறது எங்கள் (ரப்பு) பாதுகாலன் அல்லாஹ் விரும்புவதைத் தவிர வேறொன்றும் கூறமாட்டோம், இப்ராஹீமே! உன் பிரிவால் நாங்கள் நிச்சயமாக கவலையடைகிறோம் என்று கூறலானார்கள். (புஹாரி)

## நேர்மையும் நீதமும்:

அனைத்து விடயங்களிலும் நபி (ஸல்) அவர்கள் நீதமானவர்களாக நேர்மையானவர்களாக இருந்துள்ளார்கள், மேலும் அல்லாஹ்வின் சட்டங்களை செயல்படுத்துவதிலும் நேர்மையாளர்களாக இருந்தார்கள்.

இதுபற்றி ஆயிஷா (ரலி) அவர்கள் கூறும் போது: மஹ்சூமிய்யா என்ற குலத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணியின் திருட்டுச் சம்பவம் குரைஷிகளுக்கு மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது அப்போது குரைஷிகள் இது சம்பந்தமாக நபி (ஸல்) அவர்களிடம் யார் இவளுக்காக பரிந்துரைப்பது என்ற பிரச்சனை எழுந்தபோது இறைத்தூதரின் நேசர் உஸாமாவைத் தவிர வேறு யார்தான் இது சம்பந்தமாக நபி (ஸல்) அவர்களிடம் பேச முற்படுவார்! என்றார்கள், இது பற்றி உஸாமா (ரலி) நபி (ஸல்) அவர்களிடம்

பேசிய போது உஸாமாவே! நீர் அல்லாஹ் விதித்த சட்டங்களில் இருந்து ஒரு சட்டத்தினை நிறைவேற்றாமலிருப்பதற்காக வேண்டி பரிந்துரைக்கிறீரா? என்று கூறிவிட்டு பின்பு எழுந்து பிரசங்கம் செய்து அதிலே கூறினார்கள்: உங்களுக்கு முன்னிருந்தவர்கள் அழிந்து போனதெல்லாம் அவர்களில் பலசாலிகள் (செல்வாக்குள்ளவர்கள்) யாராவது திருடிவிட்டால் எவ்வித தண்டனையும் நிறைவேற்றாது விட்டுவிடுவார்கள், ஆனால் அவர்களில் பலவீனமானவர்கள் (செல்வாக்கற்றவர்கள்) யாராவது திருடிவிட்டால் அவன் மீது தண்டனையை நிறைவேற்றுவார்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக என் மகள் பாத்திமா திருடினாலும் கூட நிச்சயமாக நான் அவளுடைய கையை திருடியதற்குத் தண்டனையாக வெட்டாமல் விடமாட்டேன் என்றார்கள். (புஹாரி, முஸ்லிம்)

மேலும் அவர்களது நீதம் பற்றி கூறுவதாயின் நபி (ஸல்) அவர்கள் தன்னிடமிருந்து பழிதீர்த்துக் கொள்ளும்படி கூறக்கூடியவர்களாக இருந்தார்கள். இது பற்றி உசைத் இப்னு ஹுழைர் (ரலி) கூறினார்கள்: மதீனாவைச் சேர்ந்த ஒரு மனிதர் நகைச்சுவையாக பேசி அங்கிருந்தவர்களை சிரிப்பூட்டிக் கொண்டிருந்தார், அப்போது நபி (ஸல்) அம்மனிதரின் வயிற்றில் தமது கையில் இருந்த ஒரு குச்சியினால் குத்தினார்கள், அப்போது அம்மனிதர் நீங்கள் எனக்கு குத்தியதைப் பொல் நானும் உங்களை அவ்விடத்திலேயே குத்தவேண்டுமென நபி (ஸல்) அவர்களிடம் கேட்டுக் கொண்டார், அதற்கு நபி (ஸல்) சம்மதித்தார்கள், அப்போது அம்மனிதர் நான் வெறுமேலுடன் இருந்ததைபோல் நீங்களும் வெறு மேலுடன் இருக்க வேண்டும் என்றதும், நபி (ஸல்) அவர்கள் தமது சட்டையை உயர்த்தியதும் அம்மனிதர் நபி (ஸல்) அவர்களை பழி தீர்ப்பதற்கு பதிலாக அன்னாரது வயிற்றை கட்டி அணைத்து முத்தமிட்டவாறு இறைவனின் தூதரே! இவ்வாறு முத்தமிடவே நான் விரும்பினேன் என்று கூறினார். (அபூதாவூத்)

## இறையச்சம்:

மனிதர்களிலேயே நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை அஞ்சக்கூடியவர்களாகவும் பயப்படக் கூடியவர்களாகவும் இருந்தார்கள்.

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் என்னிடம் குர்ஆனை ஓதுவீராக! என்று கூறினார்கள்: அப்போது நான்: (நீங்கள் என் ஓதழுக்கு செவிசாய்க்கும் படி) உங்கள் மீது இறக்கப்பட்டதை நான் உங்களுக்கு ஓதுவதா? என்றேன், ஆம் என்றார்கள் எனவே நான் அந்நிஸா சூராவின் பின் வரும் வசனம் வரை ஓதினேன் அவ்வசனமானது, முஹம்மதே! நாம் ஒவ்வொரு சமுதாயத்திலிருந்தும் சாட்சியாளர் ஒருவரை கொண்டுவந்து உம்மையும் இவர்கள் மீது சாட்சியாளராக கொண்டுவரும் வேளையில் இவர்கள் என்ன செய்வார்கள், என்ற வசனத்தை (அந்நிஸா 31) ஓதியபோது, இப்போது போதுமென்று கூறினார்கள், அப்பொழுது நான் அவர்கள் பக்கம் திரும்பிப்பார்த்தேன் கண்களில் கண்ணீர் தேங்கியிருந்தது. (புஹாரி, முஸ்லிம்)

மேலும் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது: நபி (ஸல்) அவர்கள் மழை மேகத்தை வானத்தில் கண்டால் முன்னால் நடப்பார்கள் பிறகு திரும்பி நடப்பார்கள் தமது அறைக்கு உள்ளே போவார்கள் வெளியே வருவார்கள் நிம்மதியற்று ஒரு விதத்தவிப்புடன் காணப்படுவார்கள், அவர்களுடயை முகம் மாறிவிடும் வானம் மழை பொழிந்து விட்டால் அத்தவிப்பான நிலை அவர்களைவிட்டும் நீங்கிவிடும் ஆகவே ஒரு முறை நான் அவர்களுக்கு அந்தத் தவிப்பான நிலை ஏற்படுவதை கவனத்திற்கு கொண்டுவந்தேன், அதற்கு நபி (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளபடி ஆது சமூகத்தார்கள் அந்த வேதனை கொணரும் மேகம் தாங்கள் வசித்த பள்ளத்தாக்குகளை நோக்கி வந்து கொண்டிருப்பதை கண்ட போது தவறாகப் புரிந்து கொண்டு இது நமக்கு மழை பொழிவிக்கும் மேகமாகும் (46:24) என்று கூறினார்கள், அத்தகைய வேதனையைக் கொணரக் கூடிய மேகமாகவும் இது இருக்கலாம் எனக்குத் தெரியாது என்று பதிலளித்தார்கள்.

## போதுமென்ற மனம்:

உமர் இப்னு கத்தாப் (ரலி) கூறுகிறார்கள்: நான் நபி (ஸல்) தங்கியிருக்கும் அறைக்குள் சென்றேன், எந்த விரிப்பும் இல்லாத

ஒரு ஈத்தம் பாயின் மீது படுத்துக் கொண்டிருந்தார்கள் அவர்களின் தலையணையாக சருகுகள் நிறைக்கப்பட்ட தோல்பையை தலைக்குக்கீழ் வைத்திருந்தார்கள். அவர்களுடைய கால்மாட்டில் தோல் பதனிடப் பயன்படுத்தப்படும் இலைகள் குவிக்கப்பட்டு இருந்தன. அவர்களது தலைமாட்டின் மேல் தண்ணீர் வைக்கும் தோல் பாத்திரம் தொங்கவிடப்பட்டிருந்தது. மேலும் அவர்களது பொன்னான மேனியில் அவ்வீச்சம் பாயின் அடையாளங்கள் பதிந்திருந்ததை கண்டதும் நான் அழுதுவிட்டேன், அப்பொழுது என்னைப்பார்த்து ஏன் அழுகிறீர்? என்றார்கள், இறைவனின் தூதரே! ரோம், பாரசீக மன்னர்களெல்லாம் எப்படி எப்படியெல்லாமோ இருக்கிறார்கள். இறைவனின் தூதரான நீங்கள் ஏன் இப்படி என்றதும் உமரே! அவர்களுக்கு உலக சுகங்களும் நமக்கு மறுமையில் (சுவர்க்கமும்) இருப்பதை நீர் பொருந்திக் கொள்ளவில்லையா? என்றார்கள். (புஹாரி, முஸ்லிம்)

## எதிரிகள் உட்பட அனைத்து மனிதர்களுக்கும் நன்மையே நாடுதல்:

நபி (ஸல்) அவர்களின் மனைவியருள் ஒருவரான ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: உஹத் யுத்தமன்று நீங்கள் சந்தித்த துயரைவிடவும் மிகக்கடுமையான துயரை நீங்கள் சந்தித்ததுண்டா? என்று நான் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டேன், அதற்கு நபி (ஸல்) அவர்கள் உமது சமூகத்தினரிடமிருந்து உஹத் தினத்தைவிட அகபா (அதாவது தாயிப் நகரில் போய் அழைப்புப்பணி செய்தபோது அங்கிருந்து துரத்தப்பட்டு மக்காவுக்குள் நுழைய முடியாமலும் திரும்ப தாயிபுக்குப் போக முடியாமலும் சிக்கித்தவித்துக் கொண்டிருந்த வேளையில் திரும்ப மக்காவுக்குள் நுழைய அப்து கிலால் என்பவரிடம் தனக்கு பாதுகாப்புத்தந்து தன்னை பொறுப்பேற்க்குமாறு நான் வேண்டியபோது அவர் மறுத்து விடவே, நான் கவலை தோய்ந்தவனாக நடந்து சென்று கொண்டிருந்தேன். கருன் அஸ் சஆலிப் என்ற மலையடிவாரத்தில் போய்தான் தெளிவடைந்தேன், அப்போது என் தலையை உயர்த்திப் பார்த்தபோது ஒரு மேகக் கூட்டம் எனக்கு நிழல் தந்து கொண்டிருந்தது அதன் மீது ஜிப்ரீல் (அலை)

இருந்தார்கள், மேலும் என்னை அழைத்துக் கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் உமது சமூகத்தினர் உமக்கு கூறிய பேச்சையும் உம்மை மறுத்துக்கூறியவைகளையும் கேட்டான், எனவே அவர்களுக்கெதிராக நீர் நாடியதை ஏவுவதற்காக மலைகளுக்கு பொறுப்பான மலக்கையும் உம்மிடம் அனுப்பியுள்ளான் என்றார்கள், அப்போது மலைகளுக்குப் பொறுப்பான மலக்கு என்னை அழைத்து ஸலாம் சொல்லிவிட்டு பின்பு கூறினார்: முஹம்மதே! நீர் நாடியதை ஏவும் நீர் நாடினால் இவ்விரண்டு மலைகளையும் உயர்த்தி அவர்கள் மீது போட்டு அழித்துவிடுவேன் என்றார், அப்பொழுது நபி (ஸல்) அவர்கள்: இவர்களின் பின்தோன்றல்களில் (தலைமுறைகளில்) இருந்தாவது அல்லாஹ் ஒருவனை மாத்திரம் வணங்கி அவனுக்கு எந்த ஒன்றையும் இணையாக்காதவர்கள் தோன்ற வேண்டுமென நான் மேலெண்ணம் கொள்கிறேன் என்று பதிலளித்தார்கள். (புஹாரி, முஸ்லிம்)

அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) கூறுகிறார்கள்: அப்துல்லாஹ் இப்னு உபை இப்னு சலூல் மரணித்தபோது அவரது மகன் அப்துல்லாஹ் நபி (ஸல்) அவர்களிடம் வந்து நபியவர்களின் மேலாடையை தனது தந்தைக்கு கபனிடத் தருமாறு கேட்டார்கள், நபி (ஸல) அவர்கள் அதனை கொடுத்ததும், தனது தந்தைக்கு தொழுகை நடத்துமாறும் வேண்டினார்கள், நபி (ஸல்) தொழுகை நடத்துவதற்காக எழுந்த போது உமர் (ரலி) அவர்கள் எழுந்து நபி (ஸல்) அவர்களின் ஆடையை பிடித்து தடுத்து நிறுத்திக் கூறினார்கள்: இறைவனின் தூதரே! அவனுக்காக தொழுகை நடாத்தப் போகிறீர்களா? அல்லாஹ் அவன் மீது தொழுகை நடத்துவதை தடுத்துள்ளான் என்றதும், நபி (ஸல்) அவர்கள் எனக்கு தேர்வு செய்யும் உரிமையை தந்துள்ளான் என்று கூறினார்கள்.

நபியே! நீர் அவர்களுக்காக மன்னிப்புத் தேடினாலும் அல்லது மன்னிப்புத் தேடாவிட்டாலும் மேலும் அவர்களுக்காக எழுபது முறை மன்னிப்புத் தேடினாலும் அல்லாஹ் மன்னிக்கவே மாட்டான் என்ற திருமறை வசனத்தை ஓதிவிட்டு, நான் 70 தடவையை விட அதிகமாக மன்னிப்புக்கோர்வேன் என்று கூறினார்கள், அப்பொழுது உமர் கூறினார்கள்: நிச்சயமாக அவன் முனாபிக் (நயவஞ்சகன்)

என்பதாக பின் நபி (ஸல்) தொழுகை நடத்தி முடிந்ததும், அல்லாஹ் பின் வரும் வசனத்தை இறக்கினான். நயவஞ்சகர்களான அவர்களில் யார் இறந்தாலும் அவர்கள் மீது நீர் என்றும் தொழுகை நடத்த வேண்டாம், மேலும் பாவமன்னிப்புத் தேடுவதற்காக அவர்களின் கபுறுகளினிடத்திலும் நிற்கவும் வேண்டாம் என்பதாக. (புஹாரி, முஸ்லிம்)

# நபி (ஸல்) அவர்களின் சில ஒழுக்கங்கள்:

முஹம்மது (ஸல்) அவர்கள் தனது தோழர்களோடு நெருங்கிப்பழகக்கூடியவர்களாகவும், அவர்களின் அனைத்து விடயங்களிலும் கலந்துகொள்ளக்கூடியவர்களாகவும் இருந்தார்கள். அவர்களது தனிப்பட்ட, கூட்டு வாழ்க்கையை நாம் சம்பூரணமாக தெரிந்து கொண்டால் அது நமது வாழக்கைக்கு உதவியாக அமையும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் நமக்கு முன்மாதிரியாவார்கள், எனவே நமது அனைத்து விடயங்களிலும் அவர்களை முன்மாதிரியாக எடுத்துக் கொள்வது அவசியமாகும்.

இதுபற்றி ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) கூறினார்கள்: நான் இஸ்லாத்தைத் தழுவியதிலிருந்து நபி (ஸல்) அவர்கள் என்னை (அவர்களை) விட்டும் தடுத்ததும் கிடையாது, என்னைக் கண்டபோதெல்லாம் தன் முகத்தில் புன்முறுவல் பூப்பார்கள். அவர்களிடம் நான் குதிரையில் உறுதியாக இருக்க முடியவில்லையென முறையிட்டபோது அவர்களது கையால் எனது நெஞ்சின் மீது தட்டிவிட்டுக் கூறினார்கள்: யா அல்லாஹ்! அவரை உறுதியாக்கிவை மேலும் நேர்வழி காட்டியாகவும் நேர்வழிபெற்றவராகவும் ஆக்கியருள்வாயாக என்பதாக. (புஹாரி, முஸ்லிம்)

மேலும் நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களுடன் நகைச்சுவையாக, கேளிக்கையாக, பகடியுமாக நடந்து கொள்வார்கள். இதுபற்றி அனஸ் இப்னு மாலிக் (ரலி) கூறுகிறார்கள்: நபி (ஸல்) மனிதர்களில் மிக அழகிய குணமுடையவர்கள், எனக்கு அபூ உமைர் என்ற ஒரு சிறிய சகோதரர் இருந்தார் அவரிடம் ஒரு சிறிய பறவை இருந்தது அதனோடு அவர் விளையாடிக்கொண்டிருந்தார், எனவே நபி (ஸல்)

அவர்கள் அவரை காணும் போதெல்லாம் அபா உமைரே! பறவை என்ன செய்தது என்று நகைச்சுவையாகக் கேட்பார்கள். (புஹாரி)

மேலும் நபி ஸல் அவர்களது நகைச்சுவை பேச்சோடு மாத்திரம் நின்றுவிடவில்லை, மாற்றமாக செயலிலும் அவர் தமது தோழர்களோடு நகைச்சுவையாக நடந்துள்ளார்கள். இது பற்றி அனஸ் பின் மாலிக் (ரலி) கூறும் போது நபி (ஸல்) அவர்களுக்கு ஸாஹிர் இப்னு ஹராம் என்ற கிராமவாசியான அவர் அன்பளிப்புகள் வழங்கக்கூடியவராக இருந்தார், மேலும் நபி (ஸல்) அவர்களும் அவரிடம் செல்வதாக இருந்தால் அன்பளிப்புகளை தயார் செய்து விட்டு நிச்சயமாக ஸாஹிர் என்பவர் எமது கிராமவாசி, நாம் அவரிடம் சமூகமளிக்கவிருக்கிறோம் என்று சொல்லியவர்களாக அவரிடம் சென்ற போது அவர் தமது பொருட்களை சந்தையில் விற்றுக் கொண்டிருந்தார், அப்போது அவர் அறியாத விதத்தில் நபி (ஸல்) அவர்கள் பின்னால் சென்று அவரது கண்களை பொத்திப் பிடித்துக் கொண்டார்கள், அப்போது அவர் யார் இது ? என்னை விடும்! என்று கூறியவராக இவர்கள் பக்கம் திரும்பியதும் இவ்வாறு செய்து கொண்டிருப்பது நபி (ஸல்) அவர்கள் தான் என்பதை அறிந்ததும், அவரது முதுகை அவர்களது நெஞ்சில்வைத்து சாய்ந்து கொண்டார், அப்போது நபி (ஸல்) இந்த அடிமையை யார் வாங்கப் போவது என்றதும் இறைவனின் தூதரே! என்னை அற்பமானவனாகக் காண்கிறீரா! என்று ஸாஹிர் கேட்டார், அதற்கு நபி (ஸல்) நீரே இறைவனிடத்தில் மிகப் பெருமதியானவர் என்றார்கள். (இப்னு ஹிப்பான்)

வஹீ மூலம் அறிவிக்கப்படாத அனைத்து விடயங்களிலும் தமது தோழர்களிடம் ஆலோசனை செய்து அவர்களது கருத்தை ஏற்கக் கூடியவர்களாக இருந்துள்ளார்கள். இது பற்றி அபூ ஹுரைரா (ரலி) கூறும் போது: நான் நபி (ஸல்) அவர்களை விட அதிகம் தமது தோழர்களுடன் ஆலோசனை செய்யும் ஒரு மனிதரை கண்டதில்லை என்பதாக. (திர்மிதி)

நோயாளிகளை சென்று பார்ப்பது (காபிரோ- முஸ்லிமோ) நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது தோழர்களைப்பற்றி நலம் விசாரிக்கக் கூடியவர்களாக இருந்து வந்துள்ளார்கள், அவர்களில்

யாருக்காவது சுகயீனம் என்பதை அறிந்தால் தாமும் தம்முடன் இருப்பவர்களுமாக விரைந்து சென்று நலம் விசாரிப்பவர்களாக இருந்தார்கள், அந்நோயாளி முஸ்லிமாக இருப்பினும், கா∴பிராக இருப்பினும் சரியே!

இது பற்றி அனஸ் இப்னு மாலிக் (ரலி) கூறுகிறார்கள்: யூத இளைஞன் ஒருவன் நபி (ஸல்) அவர்களுக்கு பணிவிடை செய்துவந்தான், அவன் நோய்வாய்ப்பட்ட போது நபி (ஸல்) அவர்கள் அவனை நலம் விசாரிப்பதற்காக சென்று அவனது தலைமாட்டில் அமர்ந்து இஸ்லாத்தை தழுவிவிடு என்று கூறினார்கள், அப்போது அந்த இளைஞன் தனது தந்தையை நொக்கினான். அதற்கு அவனது தந்தை அபுல் காசிமுக்கு கீழப்படி என்றதும், அந்த இளைஞன் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டான், அப்போது நபி (ஸல்) அவர்கள் நரக நெருப்பை விட்டும் அவனை காப்பாற்றிய அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும் என்று கூறிய வண்ணம் அங்கிருந்து வெளிவந்தார்கள். (புஹாரி)

## உபகாரம் செய்தவருக்கு நன்றி செலுத்துவதும், பிரதி உபகாரம் செய்வதும்:

நபி (ஸல்) கூறினார்கள்: அல்லாஹ்வுக்காக என்று உங்களிடம் யாராவது பாதுகாப்புத் தேடினால் அவருக்குப் பாதுகாப்பளிப்பீராக! அல்லாஹ்வுக்காக உதவி செய்யுங்களென்று யாராவது உதவி கேட்டால் அவருக்கு உதவுவீராக! யாராவது உங்களை அழைத்தால் அவரது அழைப்புக்கு விடை கொடுப்பீராக! யாராவது உங்களுக்கு உபகாரம் செய்தால் அவருக்கு பிரதி உபகாரம் செய்துவிடுங்கள், பிரதி உபகாரம் செய்ய வசதியில்லை என்றால், அவருக்கு நீங்கள் பிரதி உபகாரம் செய்து விட்ட திருப்தியை அடையும் வரைக்கும் அவர் முன்னிலையில் அவருக்காக பிரார்த்தனை செய்துவிடுங்கள். (அபூதாவுத்)

ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் ஹதியா (பரிசுகளை) ஏற்றுக்கொள்பவர்களாகவும் பகரமாக தாமும் வழங்கங்கூடியவர்களாகவும் இருந்தார்கள் என்பதாக. (புஹாரி)

## நபி (ஸல்) அழகான, வாசனையான அனைத்தையும் விரும்புவார்கள்:

இது பற்றி அனஸ் இப்னு மாலிக் (ரலி) கூறுகிறார்கள்: நான் நபி (ஸல்) அவர்களின் உள்ளங்கையை விட மிருதுவான பட்டையோ பூ வேலைப்பாடுகள் போடப்பட்ட பட்டையோ தொட்டதில்லை, மேலும் நான் நபி (ஸல்) அவர்களின் நறுமணத்தையும் வாசனையையும் விட மேலான ஒரு நறுமணத்தையோ வாசனையையோ நுகர்ந்ததுமில்லை என்பதாக. (புஹாரி, முஸ்லிம்)

## நேர்மையான நல்ல விடயங்கள் அனைத்திற்கும் நபி (ஸல்) பரிந்துரை செய்வதை விரும்புவார்கள்:

இது பற்றி இப்னு அப்பாஸ் (ரலி) கூறினார்கள்: பரீரா என்ற பெண்மணியின் கணவர் முஹீஸ் என்பவர் அடிமையாக இருந்த காரணத்தாலோ என்னவோ அப்பெண்மணி அவரை பிரிந்து விட்டாள், அவர் அவளுக்குப்பின்னால் அழுதழுது தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு அவளையே சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருப்பதை நான் என்கண்களால் இப்போதும் பார்ப்பதை போல் இருக்கிறதென்று இப்னு அப்பாஸ் (ரலி) கூறிவிட்டு, நபி (ஸல்) அவர்கள் அப்பாஸிடம் கூறினார்கள்: அப்பாஸே முஹீஸ் பரீரா மீது வைத்துள்ள அன்பிலும் பரீரா முஹீஸ் மீது கொண்டுள்ள அன்பிலும் நீ ஆச்சரியப்படவில்லையா? என்று கேட்டு விட்டு பரீராவிடம் நீ அவரை திரும்ப மீட்டிக் கொள்ளலாமே என்றதும் அப்பெண்மணி இது உங்கள் கட்டளையா! என்று வினவினாள், அதற்கு நபி (ஸல்) இல்லை நான் பரிந்துரை செய்கிறேன் என்றதும் பரீரா: அவர் எனக்கு வேண்டாம் என்றார்கள். (புஹாரி)

## தமது வேலைகளை தாமே செய்துகொள்ளல்:

நபி (ஸல்) அவர்கள் வீட்டிலிருக்கும் போது என்ன செய்வார்களென்று ஆயிஷா (ரலி) நாயகியிடம் வினவப்பட்ட போது அவர்கள் கூறினார்கள்: அவர் ஏனைய மனிதர்களைப்போல் ஒரு சாதாரண மனிதராகவே இருப்பார் தமது ஆடைகளை தைப்பார்கள், ஆட்டைப்பிடித்து பால்கறப்பார்கள், தமது தனிப்பட்ட வேலைகளை செய்து கொள்வார்கள் என்பதாக. (இப்னு ஹிப்பான்)

அது மட்டுமல்ல தமது வேலையோடு பிறர் வேலையிலும் உதவி பண்ணுபவராக இருந்துள்ளார்கள்: நபி (ஸல்) அவர்கள் வீட்டில் இருக்கும்போது என்ன செய்வார்களென்று ஆயிஷா (ரலி) நாயகியிடம் வினவப்பட்டபோது, நபி (ஸல்) அவர்கள் தமது மனைவிமார்களுக்கு பணிவிடை செய்து கொண்டிருப்பார்கள், ஆனால் தொழுகைக்கான அழைப்பைக் கேட்டால் வெளியேறிவிடுவார்கள் என்பதாக. (புஹாரி)



# முஹம்மத் (ஸல்) அவர்கள் பற்றி நடுநிலைவாதிகளின் சான்றுகள்

அவ்தா (போல்ட்) என்ற ஜெர்மனிய கவிஞர் கூறுகிறார்: இம்மனித சமுதாயம் முழுவதற்கும் ஒரு உதாரணப்புருஷராகத் திகழும் ஒருவரை வரலாறு முழுக்கத் தேடிப்பார்த்தேன், அப்படிப்பட்ட ஒருவராக முஹம்மத் (ஸல்) அவர்களைக் கண்டு கொண்டேன் என்பதாக.

**தீஸ்மூர்** என்ற பேராசிரியர் தனது தி டெவலப்பிங் ஹியூமேன் என்ற நூலில் கூறுகிறார்: நிச்சயமாக அல்குர்ஆன் ஓர் இறைவேதம்தான் என்பதை நான் ஒப்புக்கொள்ள கடினப்படவில்லை. ஏனெனில் சிசு சம்பந்தமான அல்குர்ஆனுடைய கூற்றை ஏழாம் நூற்றாண்டில் அறிவியல் கண்டுபிடிப்பின் அடிப்படையில் ஒருவர் நிறுவியிருக்கமுடியாது, எனவே நான் இதிலிருந்து விளங்குவது யாதெனில் சிசு சம்பந்தமான அக்கூற்று நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு (வஹி) வேத வெளிப்பாட்டின் மூலம் அறிவிக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதே.

**வுல் திவ்ரான்த்** என்ற நூலாசிரியர் தனது நாகரீகத்தின் கதை என்ற நூலில் வால்யூம் 11 ல் கூறுகிறார்: மானிட சமுதாயத்திலேயே மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்திய ஆட்சியாளர் யார்? என்று முடிவு செய்வதாக இருந்தால் நாம் கூறுவோம் நிச்சயமாக முஸ்லிம்களுடைய (முஹம்மத் என்ற) இறைத்தூதரே ஆட்சியாளர்களிலேயே வரலாறு படைத்தவரென்று. ஏனெனில் அவர் தமது சமூகத்தார் மத்தியில் பரவிக்கிடந்த பிடிவாதப் போக்கையும் கண்மூடித்தனமான பழக்க வழக்கங்களையும் உடைத்தெறிந்து அவரது நாட்டில் பின்பற்றப்பட்டு வந்த யூத கிருஸ்தவ மார்க்கங்களுக்குப் பகரமாக உறுதியான, எளிதான, தெளிவான, இன்றைய நாள் வரை நிலைத்து நிற்கக்கூடிய, மிகவும் சக்திவாய்ந்த ஒரு மார்க்கத்தை நிலை நாட்டினார் என்பதாக.

**ஜார்ஜ் தீ தோலிஸ்** என்பவர் தனது, வாழ்க்கை என்ற நூலில் கூறுகிறார்: நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அவர்களின் நபித்துவத்தில் சந்தேகம் கொள்வதானது அனைத்துப் படைப்பினங்களையும் உள்ளடக்கும் இறைவனின் வல்லமையின் மீது சந்தேகம் கொள்வதற்கு சமமாகும் என்பதாக.

**பேரறிஞர் வேல்ஸ்** என்பவர் உண்மையான இறைத்தூ தர் என்ற தமது நூலில் குறிப்பிடுகிறார்: முஹம்மத் இறைத்தூதர் என்பதற்கு கெட்டியான ஆதாரம் யாதெனில் முதன்முதல் அவரை நம்பியவர்கள் அவரது மனைவியும் அவருக்கு நெருக்கமானவர்களுமாக இருந்ததுதான்ஞூ ஏனெனில் அவர்கள் அவரது தனிப்பட்ட சொந்த வாழ்க்கையை அறிந்தவர்களாக இருந்தார்கள், அவரது வாய்மை பற்றி சந்தேகித்திருந்தால் அவரை நம்பிக்கை கொண்டிருக்க மாட்டார்கள் என்பதாக.

**ஹீல்** என்ற கிழக்கத்தியவாதி அரேபிய நாகரீகம் என்ற தமது நூலில் குறிப்பிடுகின்றார்: இஸ்லாத்தைப் போன்று மிக வேகமாக பரவிய, உலகத்தை மாற்றிய, ஒரு மார்க்கத்தை மனித வரலாற்றிலேயே நாம் காணவில்லை. முஹம்மத் உண்மையிலேயே இவ்வுலகிற்கு ஒரு சமுதாயத்தை வெளிப்படுத்தினார், பூமியிலே அல்லாஹ்வை வணங்குவதற்கு ஏதுவாக்கினார், சமத்துவத்திற்கும் நேர்மைக்கும் அடிப்படையிட்டார், குழப்பம் உண்டுபண்ணுவதைத் தவிர வேறெதனையுமே அறியாதிருந்த மக்களுக்கு மத்தியில் கட்டுப்பாட்டையும், ஒழுக்கத்தையும், கண்ணியத்தையும், ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டினார் என்பதாக.

**ஜான் லீக்** என்ற ஸ்பெயின் நாட்டு அறிஞர் அரபிகள் என்ற தனது நூலில் குறிப்பிடுகிறார்: (நபியே! முஹம்மதே!) உம்மை உலகத்தார்க்கு ஓர் அருட் கொடையாக நாம் அனுப்பியுள்ளோம், என்று அவரது வாழ்க்கையை அல்லாஹ் வர்ணித்ததை விட மிக அழகாக வர்ணிக்கவே முடியாது என்பதாகவும், மேலும் முஹம்மத் ஓர் உண்மையான அருட் கொடையாகவே இருந்தார், மேலும் நான் அவர்மீது ஆர்வத்துடனும் பிரமிப்புடனும் கருணை கொண்டு பிரார்த்தனை புரிகின்றேன் என்பதாக.

**பெர்னாட் ஷா** என்ற ஜெர்மனியர் இஸ்லாம் நூறு ஆண்டுகளுக்குப்பின் என்ற தமது நூலில் குறிப்பிடுகிறார்: நிச்சயமாக உலகம் முழுவதும் ஒரு நாள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும், அது இஸ்லாமென்ற சொந்தப் பெயரில் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் மாற்றுப் பெயரிலாவது இஸ்லாத்தை ஏற்றே தீரும், மேலும் மேற்குலகம் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் ஒரு நாள் மிக சீக்கிரமே வரும், இஸ்லாம் பற்றிய பொய்கள் நிறைந்த புத்தகங்களையே வாசித்த வண்ணம் நிச்சயமாக மேற்குலகம் பல நூற்றாண்டுகளை கடத்திவிட்டது.



# நபி (ஸல்) அவர்களின் மனைவியர்கள்

நபி (ஸல்) அவர்கள் தனது முதல் மனைவி அன்னை கதீஜா (ரலி) அவர்களின் மரணத்திற்குப்பின் (வஃபாத்) 10 பெண்களைத் திருமணம் செய்து கொண்டார்கள். அன்னை ஆயிஷா (ரலி) அவர்களைத் தவிர மற்றைய அனைவருமே வயதான, கணவரை இழந்த விதவைகளே. அன்னை ஆயிஷா (ரலி) அவர்களை மாத்திரமே கன்னியாக இளவயதினராக திருமணம் முடித்தார்கள். அவர்களின் மனைவியருள் ஆறு பேர்கள் குறைஷி குலத்தவர்கள், ஒருவர் யூத இனத்தவர், ஏனையவர்கள் பலதரப்பட்ட அரேபிய குலத்தைச் சேர்ந்தவர்கள், மாரியதுல் கிப்திய்யா என்பவர் தமது (வலக்கரம்) சொந்தமாக்கிக் கொண்ட பெண்ணாவார்கள், இவர்களுக்குப் பிறந்தவர்களே இப்றாஹீம் என்பவர். இப்பெண்மணியை இஸ்கந்திரியா (அலெக்ஸான்டிரியா) மன்னர் முகவ்கிஸ் என்பவர் நபி (ஸல்) அவர்களுக்கு வெகுமதியாக கொடுத்தனுப்பியிருந்தார்.

இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக நீங்கள் மிஸ்ரை வெற்றி கொள்வீர்கள் அந்நாட்டில் கீராத் என்று பெயர் சொல்லப்படும் ஒரு பிரதேசம் உண்டு. எனவே அப்பிரதேசத்தை வெற்றி கொண்டால் அங்குள்ளவர்களோடு நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். ஏனெனில் அவர்கள் மீது பாதுகாப்பும், சொந்த பந்தமும் (உங்களுக்கு) உண்டு என்றார்கள் (முஸ்லிம்). மேலும் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் நீங்கள் கிப்த் தேசத்தை வெற்றி கொண்டால் அங்குள்ளவர்களோடு நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். ஏனெனில் அவர்கள்மீது பாதுகாப்பும், பந்தமும் உங்களுக்கு உண்டு என்றார்கள். (அப்துல் ரஜ்ஜாக்)

## குறிப்பு:-

சுஃரி என்ற அறிஞர் கூறுகிறார்: பந்தம் என்பது ஹாஜரா அம்மையார் மூலமும், பாதுகாவல் இப்ராஹீம் என்ற நபி (ஸல்) அவர்களின் மகனின் தாயாரை கவனத்தில் கொண்டுமாகும் என்கிறார்.

நபி (ஸல்) அவர்கள் இவ்வெண்ணிக்கையிலான பெண்களை திருமணம் செய்து கொண்டமைக்கு பல காரணங்கள் உண்டு:

### 01 மார்க்கரீதியான ஒரு சட்டத்தை அமுல் படுத்துதல்:

நபி (ஸல்) அவர்கள் ஜைனப் (ரலி) அவர்களை திருமணம் முடித்ததைப் போல. ஏனெனில் அறியாமைக்காலத்திலே (ஜாஹிலிய்யா) அரேபியர்களிடம் ஒரு பழக்கம் இருந்து வந்தது. அதாவது வளர்ப்பு மகனின் மனைவியை தமது சொந்த மகனின் மனைவிபோல் கருதி வந்தனர், எனவே தமது வளர்ப்பு மகன் மனைவியை விடுவித்தால், அப்பெண்ணை தான் தந்தையென அழைத்து வந்த வளர்ப்புத்தந்தை திருமணம் முடிப்பதை ஹராமாக கருதிவந்தனர்.

எனவேதான் இம்மாதிரியான கருத்தை இல்லாதொழிக்கவே நபி (ஸல்) அவர்கள் தமது வளர்ப்பு மகனான ஜைது என்பவரின் மனைவியான ஜெய்னப் (ரலி) அவர்களை அவர் விடுவித்தபோது நபி (ஸல்) திருமணம் செய்து கொண்டார்கள்.

இதைப்பற்றி அல்லாஹ் கூறுகின்றான்: ஜைது என்பவர் ஜைனபைத் திருமணம் செய்து தாம்பத்திய வாழ்க்கையை அவளிடமிருந்து நிறைவேற்றி விட்டபோது, நாம் அவளை உமக்குத் திருமணம் செய்து வைத்தோம். ஏனெனில் விசுவாசிகளால் வளர்க்கப்பட்டவர்கள் தங்கள் தேவையை (அப்பெண்களான) அவர்களிடம் பூர்த்தி செய்து கொண்டு (அவர்களை தலாக்) கூறிவிட்டால் (அவர்களை வளர்த்த) விசுவாசிகள் (அவ்வாறு தலாக்) கூறப்பட்ட அப்பெண்களை திருமணம் செய்து கொள்வதில் யாதொரு குற்றமிருக்கக் கூடாது என்பதற்காக (உமக்கு உமது வளர்ப்பு மகனால் விவாகரத்து செய்யப்பட்ட ஜைனபை திருமணம் செய்து வைத்தோம். மேலும் அல்லாஹ்வின் கட்டளை (இவ்வாறு) நடைபெற்றுத் தீரவேண்டியதாக இருந்தது. (அல் அஹ்ஜாப் 37)

**02 தமது (தஃவா) அழைப்புப் பணியின் நன்மையை கருத்திற்கொண்டமை, இவ்வாறு பல திருமணம் செய்து கொண்டதின் மூலம் உள ஒற்றுமையையும், கோத்திரங்களின் அன்பையும் ஈர்ப்பதும் நோக்கமாகும்.**

எனவே இவைகளை கருத்தில் கொண்டே நபி (ஸல்) அவர்கள் குறைஷி குலத்தைச் சேர்ந்த மிகப் பெரும் கோத்திரங்களிலும், சக்திவாய்ந்த அரேபியக் கோத்திரங்களிலும் திருமணம் செய்துகொண்டார்கள். மேலும் தமது தோழர்களுக்கும் இதனைக் கடைபிடிக்கும்படி கூறினார்கள்.

அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் (ரலி) என்ற தமது தோழரை தவ்மதில் ஜன்தல் என்ற கோத்திரத்தாரிடம் அழைப்புப்பணிக்காக அனுப்பிவைக்கும் போது, அவர்கள் உனது அழைப்பை ஏற்றுக்கொண்டால் அவர்களின் தலைவரது மகளை திருமணம் முடித்துக் கொள்! என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (தபரி).

இது பற்றி (cl.cahan) குறிப்பிடும் போது: நபி முஹம்மது அவர்களின் வாழ்க்கையின் சில பகுதிகள், நமது சமகால சிந்தனைத் தாக்கத்திற்கமைய அவர்கள் பற்றிய தவறான எண்ணத்தை ஏற்படுத்துகிறது, அதாவது: அன்னை கதீஜா (ரலி) என்ற அவரது மனைவி இறந்த பின்னர் அவர் செய்து கொண்ட கிட்டத்தட்ட ஒன்பது திருமணங்களும் முழுக்க முழுக்க தமது இச்சையைத் தீர்த்துக் கொள்வதற்கான உலக நோக்கில்தான் செய்து கொண்டாரென்று எண்ண வைத்தது. ஆனால் அதன் உண்மை நிலையாதெனில் அனேகமான இந்த திருமண பந்தங்கள் ஒரு திட்டத்தின் அடிப்படையில் செய்து கொள்ளப்பட்டதாகும். அதுவே அந்த திருமண பந்தங்கள் மூலம் அதிகாரத்திலும் ஆட்சியிலும் இருக்கம் சிலரின் நட்பை சம்பாதித்துக் கொள்ளும் நோக்கமாகும்.

மேலும் அரேபியர்களின் சிந்தனை இயல்பிலேயே இப்படியான உறவுகளை மதித்து, உதவும் பண்பினை கொண்டே இருந்தது.

## 03 சமூகம்:

அதாவது நபி (ஸல்) அவர்களுடைய தோழர்கள் இஸ்லாத்தை பிற மக்களுக்கு எத்திவைக்கின்ற, பரப்புகின்ற முயற்சியில் ஈடுபட்ட வேளையில் அவர்கள் தமது மனைவி மக்களை விட்டும் மரணித்த சமயம், அத்தகையவர்களின் மனைவியரை திருமணம் செய்து கொண்டமை. அப்பெண்கள் எல்லோருமே வயதுகூடியர்களாகவே இருந்தனர். அப்பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கவும், அவர்களையும் மரணித்த அவர்களது கணவன்மார்களை கண்ணியப்படுத்தவும், அவர்கள் மீது இரக்கம் கொண்டுமே இப்படியான திருமணங்களை செய்து கொண்டார்கள்.

(L. Veccia Vagheri) என்ற இத்தாலிய எழுத்தாளர் தமது இஸ்லாத்தை பாதுகாத்தல் என்ற நூலில் குறிப்பிடுகிறார்: நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அவர்கள் ஏனைய பருவங்களை விட வாலிபப் பருவத்தில் பெண்களை அனுபவிக்க வேண்டுமென்ற மோகம் அதிகமாக இருக்கக் கூடிய இளமைப்பருவம் நெடுகிலும், மேலும் அவர் வாழ்ந்த அந்த அரேபிய சமூகத்தில் அன்று திருமணமென்பது இலக்கப்பட்ட சமூக அமைப்பாக இருந்தும் கூட அல்லது அதை எட்டிக்கொண்டிருந்தும் கூட, மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணம் புரிவதே அவர் வாழ்ந்த சமூகத்தின் அடிப்படை வழக்கமாக இருந்தும் கூட, இன்னும் சொல்வதாயின் பெண்களை விவாகரத்து செய்து விட்டு வேறு பெண்களை திருமணம் முடிப்பதென்பது மிக இலகுவாக இருந்தும் கூட, அவர்கள் அன்னை கதீஜா (ரலி) என்ற ஒரு பெண்ணை மாத்திரமே திருமணம் செய்து கொண்டிருந்தார்கள். தம்மைவிட தமது மனைவி கதீஜா (ரலி) வயதில் கூடியவர்களாகவே இருந்தார்கள், 25 வருடகாலமாக ஒரு அன்பான தூய்மையான அவர்களது கணவராகத் திகழ்ந்தார்கள். அன்னை கதீஜா (ரலி) என்ற தமது மனைவி இவரது ஐம்பதாவது வயதில் மரணித்த பின்னரே பல திருமணங்களை சிற்சில காரணங்களுக்காக புரிந்து கொண்டார்கள்.

இத்திருமணங்கள், சமூக, அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை, அதாவது இம்மணங்களின் மூலம் இறையச்சமுள்ள

அப்பெண்களை சங்கைப்படுத்திடவும், மேலும் தமது கொள்கையை இடையூறின்றி பரப்பிட சில குடும்பங்கள், கோத்திரங்களோடு திருமண பந்தங்களை ஏற்படுத்தியும் கொண்டார்கள்.

ஆனால், மேற்கூறிய எவ்வித நோக்கமுமின்றி அன்னை ஆயிஷ ாவை (ரலி) மாத்திரமே அவர்கள் கன்னியராக திருமணம் செய்து கொண்டார்கள், எனவே அவர்கள் திருமணம் முடித்த ஏனைய பெண்களோ கன்னிகளும் கிடையாது, குமரிகளும் கிடையாது, பேரழகிகளும் கிடையாது. எனவே இவர் பெண் மோகம் கொண்ட ஒரு மனிதராக இருக்க முடியுமா?.

நிச்சயமாக அவர் ஒரு மனிதரே! அவர் தெய்வம் கிடையாது. மேலும் சொல்வதாயின் பிள்ளைகள் இருக்க வேண்டுமென்ற ஆர்வம் கூட அவர்களை பல திருமணங்களை செய்யத் தூண்டியிருக்கலாம். மேலும் அவர்களுக்கு பொருளாதார வசதியின்மை இருந்தும், தமது பெரிய குடும்பத்தின் பொறுப்புகளை அதன் வளர்ச்சிக்காக தமது தோள்மீது சுமந்து கொண்டார்கள். மேலும் தமது மனைவியர் அனைவரிடத்திலும் பாரபட்சமின்றி சரிசமமாக நடந்து கொண்டார்கள். எந்த சந்தர்ப்பத்திலும் அவர்களுக்கு இடையில் ஏற்றத்தாழ்வு காட்டியதில்லை.

மேலும் ஏனைய தமது முந்தைய நபிமார்கள் எப்படி தமது மனைவிமார்களோடு நல்ல முறையில் நடந்து கொண்டார்களோ அதே போல் தாமும் அவர்கள் வழியில் செயல்பட்டு வந்தார்கள், எனவே அவர்கள் பற்றிய வாழ்க்கையை நாம் சரியாக தெரிந்து கொள்ளவில்லை என்பதே தவிர. எப்போது அவர்களது வாழ்க்கையை சரிவர தெரிந்து கொள்கிறோமோ அப்போது அவர்களது குடும்ப வாழ்க்கை சம்பந்தமாகவும் சரிவர அறிந்து கொள்ளலாம்.

(thomas carlyle) என்ற ஆங்கில எழுத்தாளர் குறிப்பிடும் போது: நியாயமின்றி, அநியாயமாக குற்றம் சுமத்தப்பட்ட போதும், நிச்சயமாக முஹம்மத் பெண் மோகம் கொண்டவராக இருக்கவில்லை. அவர்களை மோகம் கொண்டவர் என்றும், அவர்களுக்கு தன் இச்சையை தீர்ப்பதை தவிர வேறு நோக்கம் கிடையாது என்றும் எண்ணும்

போது தான் நாம் மிகப் பெரும் அளவில் தவறிழைக்கிறோம். அவர் அப்படிப்பட்டவரில்லை, அவர்கள் அப்பண்புகளை விட்டும் மிகத்தூ ரமானவர்கள்.

## நபி (ஸல்) அவர்கள் இறைத்தூதரே என்பதற்கான குர்ஆன், சுன்னாவிலிருந்து சில ஆதாரங்கள்:

### அல்குர்ஆனிலிருந்து:

அல்லாஹ் கூறுகிறான்: முஹம்மத் (ஸல்) அவர்கள் உங்களின் ஆண்களில் எவருக்கும் தந்தையல்லர், மாறாக இறைவனின் தூதரும், நபிமார்களின் இறுதியானவருமாவார்கள் (அல் அஹ்ஸாப் 40).

மேலும், நபி ஈஸா (அலை) அவர்கள் வாயிலாக இஞ்ஜீல் வேதத்தில் அல்லாஹ் முஹம்மத் (ஸல்) அவர்களின் நபித்துவத்தைக் கொண்டு நன்மாராயம் கூறியுள்ளான். அல்லாஹ் கூறுகிறான்: நபியே நினைவு கூறுவீராக மர்யமின் மகன் ஈஸா (அலை) அவர்கள், இஸ்ரவேலர்களே! நான் உங்கள் இறைதூதராவேன் உங்களிடமுள்ள தவ்ராத் வேதத்தை உண்மைப் படுத்தக்கூடியவனாகவும், மேலும் எனக்குப்பின் வரவிருக்கும் அஹ்மத் என்ற நபியைப்பற்றி நன்மாராயம் கூறக்கூடியவனாகவும் நான் வந்துள்ளேன் என்று கூறியதை நினைவு கூறுவீராக. (அஸ்ஸாஃப் 6)

மேலும் அல்லாஹ் கூறுகிறான்: அவர்கள் எத்தகையோரென்றால், தங்களிடமுள்ள தவ்ராத்திலும், இஞ்ஜீலிலும் அவரைப்பற்றி எழுதப்பட்டவராக காண்கிறார்களே, அத்தகைய (எழுதப்படிக்கத் தெரியாத) உம்மி நபியான இத்தூதரை பின்பற்றுகிறார்கள் (இத்தூதரோ) அவர்களை நன்மையான காரியங்களைச் செய்யுமாறு ஏவி, பாவமான காரியங்களிலிருந்து அவர்களை விலக்குவார், நல்லவைகளையே அவர்களுக்கு உண்ண அவர் ஆகுமாக்கியும் வைப்பார். கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்துவிடுவார். அவர்களுடைய பளுவையும், அவர்கள் மீதிருந்த அத்தகைய கடினமானவைகளையும் (இரட்சகனின் அனுமதி கொண்டு) அவர்களை விட்டும் நீக்கிவிடுவார், ஆகவே அவரை உண்மையாகவே விசுவாசித்து இன்னும் அவரை கண்ணியம் செய்து.

அவருக்கு உதவியும் புரிந்து அவருக்கு இறக்கி வைக்கப்பட்ட ஒளிமிக்க இவ்வேதத்தையும் பின்பற்றுகிறார்களே அத்தகையோர் அவர்கள் தாம் வெற்றியாளர்களாவர். (அல் அஃராப் 157)

## சுன்னா: நபிவாக்கிலிருந்து:

நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனக்கும், எனக்கு முந்திய நபிமார்களுக்கும் உதாரணம் ஓர் அழகிய வீட்டை கட்டிய ஒருவனின் உதாரணம் போல, அவன் அவ்வீட்டை மெருகுபடுத்தி பூரணமாக்கினான். ஆனால் ஓர் செங்கற் கல்லின் இடைவெளி மாத்திரம் விட்டிருந்தான், பின்னர் அவ்வீட்டை மக்கள் வலம் வந்து ஆச்சரியப்பட்டனர். மேலும் கூறினார்கள், இந்த இடத்திலும் ஒரு செங்கற் கல்லை வைத்துப் பூரணமாக்கியிருக்க கூடாதா? என்றனர், நான்தான் அந்த செங்கல், நானே நபிமார்களின் இறுதியானவர் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)


ادخلوها بسلام آمنين
قباء
QUBA
GATE

# முந்தைய இறைவேதங்களில் முஹம்மத் நபி (ஸல்) பற்றி

அதா இப்னு யெசார் (ரலி) கூறினார்கள்: நான் அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஆஸ் (ரலி) அவர்களிடம் தவ்ராத் வேதத்திலே நபி (ஸல்) அவர்களைப்பற்றிய வர்ணனையை எனக்கு அறிவிக்கும் படி வினவினேன். அதற்கவர்கள் ஆம் என்று கூறிவிட்டு, நிச்சயமாக (புர்கானிலே) வர்ணிக்கப் பட்டடுள்ள சில வர்ணனைகளை கொண்டே தவ்ராத்திலும் அவர்கள் வர்ணிக்கப்பட்டுள்ளார்கள். நபியே! (முஹம்மதே) நிச்சயமாக நாம் உம்மைச் சாட்சியாளராகவும், நன்மாராயம் கூறக்கூடியவராகவும், எச்சரிக்கை செய்பவராகவும், எழுதப்படிக்கத் தெரியாத (அரபியர்களுக்கு) காப்பாளராகவும் அனுப்பியுள்ளோம். நீர் என்னுடைய அடியார், மேலும் என்னுடைய தூதர், நான் உனக்கு (அல் முதவக்கில்) அல்லாஹ்வை சார்ந்திருப்பவர் என்று பெயரிட்டேன். கோபமோ, இரக்கமற்றவரோ, கடைத்தெருக்களில் சுற்றித்திரிபவரோ, கெடுதியை கெடுதலைக் கொண்டு தடுப்பவரோ அல்லர், மாற்றமாக தவறுகளை மன்னித்து விடுபவர். அவரைக் கொண்டு இஸ்லாம் மார்க்கத்தை நிலைநாட்டும்வரையிலும். மேலும் அவர்கள் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று சொல்லும் வரைக்கும், அவரைக் கொண்டு உண்மையை விட்டும் குருடான கண்களை, ஊமையான வாய்களை, செவிடான காதுகளை, திறக்கச் செய்யும் வரையிலும், அவரது உயிரை நான் கைப்பற்ற மாட்டேன். (புஹாரி)

பைபிளின் பழைய ஏற்பாட்டிலும்- புதிய ஏற்பாட்டிலும் இயேசு கூறுகின்ற எதிர் காலத் தூதுவர் பற்றிய தீர்க்க தரிசன வசனங்கள் உள்ளன.

குறிப்பாக இறைத் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றிய பல்வேறு முன்னறிவிப்புகள் (தீர்க்கதரிசன உரைகள்) பழைய ஏற்பாட்டில் உள்ளன. அவரைத்தவிர வேறு எவரையும் குறிக்கவில்லை என்பது போன்ற வசனங்கள் பழைய ஏற்பாட்டில் இருப்பதை இங்கே காண்போம்.

இந்த தீர்க்க தரிசன உரைகள் இறைவனால் மோஸேவுக்கு அருளப்படுகின்றது. மோஸேயை போலவே ஒரு மார்க்க நிறுவனரை (தலைவரை)நம்பிக்கையாளரின் சமூகத்திற்கு உரிய அழகிய எடுத்துக் காட்டை இஸ்ரவேலர்களின் சகோதர சமுதாயத்திலிருந்து எழுப்பச் செய்வேன் என இறைவன் கூறுகிறான: (பைபிள்)

உன்னைப் போலொரு தீர்க்க தரிசியை நான் அவர்களுக்காக உங்களது சகோதரரிலிருந்து எழுப்பப் பண்ணி எம் வார்தைகளை அவர் வாயில் அருளுவேன். நான் அவருககு கற்பித்ததையெல்லாம் அவர் சொல்வார். எம் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்கு செவி கொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன். (பைபிள் 18  20)

இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறோடு நற்தொடர்பு உள்ளவர்கள் (அந்த வசனங்கள்) அந்த இறைத்தூதரைத் தவிர வேறு எவருக்கும் பொருத்தமாக இருக்காது என்பதை எளிதாக உணர்வார்கள்.

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்தான் மோஸேயைப் போல் சாதாரணமாகப் பெற்றோருக்குப் பிறந்து திருமணம்முடித்து நம்பிக்கையாளர்களின் சமூகத்தை அமைத்து, மிகப் பெரிய அளவில் சட்டங்களை நிறுவி இயற்கையான மரணத்தை அடைந்தார். இயேசுவுக்கு இது பொருந்தாது புதிய ஏற்பாட்டுப் புத்தகத்தைப் கவனமாகப் படித்தாலும் இயேசுவும் இது போன்ற ஒரு திருத்தூதர் பற்றி முன்னறிவிப்புச் செய்வதைக் கவனிக்கலாம்.

நான் பிதாவை வேண்டிக் கொள்வேன் அவர் என்றைக்கும் உங்களுடன் கூட இருக்கும் படி சத்திய ஆவியாகிய வேறு ஒரு தேற்றவாளனை அவர் உங்களுக்குத் தந்தருள்வார்.

பரிசுத்த ஆவி பற்றியும் அதன் பணிகள் பற்றியும் யோவான், குறிப்பாக விவரித்துள்ளதையும் கவனிப்போம்.

சத்திய ஆவியாகிய அவர் வரும் போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாகப் பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் சொல்லி வரப் போகிறவைகளையும் அறிவிப்பார். அவர் என்னுடையதை எடுத்து உங்களுக்கு அறிவிப்பதால் என்னை மகிமைப்படுத்துவார். (யோவான்:13- 14)

இந்த முன்னறிவிப்பின் விபரங்கள் பரிசுத்த ஆவி என்ற (அப்போதிருந்த பெயரைச் சுட்டிக்காட்டுவதல்ல) வரப் போகின்றவரைப் பற்றிய குறிப்பே!

நான் உங்களுக்கு உண்மையைச் சொல்கிறேன். நான் போவது உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். நான் போகாதிருந்தால் தேற்றவாளர் உங்களிடத்திலே வாரார். (யோவான்: 16-7)

ஏனெனில் பரிசுத்த ஆவி என்பது இயேசுவின் காலத்திலும் அதற்கு முன்னும் இருந்தது என்பது பைபிளைப் படித்தால் புரியும். யோவான் பிறப்பதற்கு முன்னரே பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருந்தார் என்றும் இயேசுவும் ஞானஸ்தானத்தின் போது) புறா உருவத்தில் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டார் என்பதையும் பைபிளில் படிக்கிறோம். ஆனால் தேற்றவாளர் என்பதற்கு உரிய குணக்கூறுகள் என்பதை தீர்க்கதரிசனங்களில் இருந்து நாம் காணலாம்.

01 அவர் (தேற்றவாளர்) இயேசு இவ்வுலகத்தை விட்டும் போகாமல்(அவர்) வாரார்.

02 அவர் நம்பிக்கையாளர்களிடம் நிரந்தரமாகக் குடியிருப்பார்.

03 இயேசுவை அவர் பெருமைப் படுத்துவார்

04 இறைவனிடம் இருந்து கேட்ட செய்திகளையே அவர் பேசுவார்.

இந்த குணமேன்மைகள் இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு மிகப் பொருத்தமாக இருக்கும் என்பதை கீழ்க் காணும் சிறு குறிப்புகளில் இருந்து புரிந்து கொள்ளலாம்.

01 இயேசுவுக்குப் பின்னால் வந்த ஒரே இறைத் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்தான். இயேசுவுக்கு 6 நூற்றாண்டுகளுக்குப் பின்னர் அவர் வருகின்றார். இயேசுவின் இறைப்பணி இஸ்ரவேல் சந்ததிகளின் காணாமல் போன ஆடு என்ற எல்லையோடு நின்று விடுகின்றது. ஆனால் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் செய்தி உலகளாவியது.

02 இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் செய்தியைத்தான் இறைவன் உலக முழுமைக்குமான செய்தி நிரந்தரமான செய்தி எனக் கூறுகிறான்.

03 முஹம்மத் நபி (ஸல்) அவர்களைப் போல் இயேசுவைப் பெருமைப் படுத்திப் பேசியவர்கள் எவருமில்லை.

04 நான்காவதாக (தேற்றவாளர் பற்றிய)குண மேன்மைகள் இறைத்தூதர் முஹம்மத் நபிக்கே மிகச் சுத்தமாகப் பொருந்தும்.

சுயமாகத் தானே அவர் பேச மாட்டார் என்ற பைபிளின் வசனத்தை கூர்மையாகப் பார்த்தால் தேற்றவாளர் என்ற பாத்திரத்தின் குண மேன்மைகள் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் குண மேன்மைகளோடு மிகச் சரியாக ஒத்துப்போவதைக் காணலாம்.

இந்தத் தீர்க்கதரிசனங்களோடு மற்ற பிற தீர்க்க தரிசனங்களையும் வைத்துப் பார்த்தால் மறுக்க முடியாத ஒப்புவமை நபி (ஸல்) அவர்களுக்கே பொருந்தும்.

# நபி (ஸல்) அவர்களது நபித்துவத்தையும், தூதுத்துவத்தையும்

## உண்மைப்படுத்தக்கூடிய பகுத்தறிவு ரீதியான சில ஆதாரங்கள்:

01 நபி (ஸல்) அவர்கள் எதையும் படிக்கத் தெரியாத (உம்மி) சமுதாயத்தில், அவர்களும் ஒரு எழுதப் படிக்கத் தெரியாதவரா (உம்மி) கவே இருந்தார்கள். அச்சமூகத்தில் சிலரே எழுதவும் வாசிக்கவும் தெரிந்திருந்தனர். ஏனெனில் அவர்கள் மீது இறக்கியருளப்படக் கூடிய வஹீ (இறைச்செய்தி) யில் யாரும் சந்தேகம் கொள்ளவோ, இவர்களால் எழுதப்பட்டது என்று தவறாக நினைத்துவிடவோ கூடாது என்பதற்காகவே அல்லாஹ் அவர்களை அவ்வாறு ஆக்கியிருந்தான்.

இது பற்றி அல்லாஹ் கூறும் போது: நபியே இதற்கு முன்னர் எந்த வேதத்தையும் நீர் ஓதுபவராக இருக்கவுமில்லை, உமது வலக்கையால் நீர் அதனை எழுதுபவராக இருக்கவுமில்லை (அவ்வாறு இருந்திருப்பீரானால்) அப்பொழுது இப்பொய்யர்கள் (இவ்வேதம்) அல்லாஹ்வினால் அருளப்பட்டதல்ல என்று திடமாக சந்தேகம் கொண்டிருப்பார்கள். (அல் அன்கபூத் 48)

மொழியாற்றலால் எம்மை விஞ்ச யாராலும் முடியாது என்ற மமதையுடன் இருந்த அரேபிய சமூகத்தாரிடம் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த அல்குர்ஆன் என்ற வேதம் அந்த அரபியர்களுக்கு சவாலாக அவர்களால் முறியடிக்கமுடியாத அதைப் போன்ற ஒன்றை கொண்டு வர முடியாத அற்புதமாகத் திகழ்ந்தது. அது இன்று வரை, உலகம் அழியுமட்டும் முறியடிக்கமுடியாத ஒரு அற்புதமே!

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அற்புதங்கள் வழங்கப்படாமல் எந்த ஒரு நபியும் அனுப்பப்படவில்லை, அதை பார்த்து மக்கள் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்பிக்கைக் கொண்டார்கள். அதே போன்று எனக்கு வழங்கப்பட்ட அற்புதம் (வஹீ) இறைவேதம் (அல்குர்ஆன்) ஆகும். எல்லா நபிமார்களை விடவும் என்னைப் பின்பற்றியவர்களே அதிகமாக கியாமத் நாளில் இருக்க வேண்டுமென நான் ஆசைப்படுகிறேன், என்பதாக. (புஹாரி, முஸ்லிம்)

நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல் நபிகள் நாயகம் (ஸல்) வாழ்ந்த அந்த சமூகத்தவர்கள் சொல்வன்மை மிக்க மொழித்திறன் பெற்றவர்களாக இருந்தனர். அப்படிப்பட்டவர்களிடம் அல்குர்ஆன் பின்வருமாறு சவால் விட்டது: இது போன்ற முழுமையான ஒன்றை கொண்டுவாருங்கள் என்று, அவர்களால் முடியவில்லை- அல்லாஹ் கூறுகிறான்: (மேலும்) நாம் நம் அடியார் மீது இறக்கிவைத்த (இவ்வேதத்தில்) நீங்கள் சந்தேகப்பட்டால் இதுபோன்ற ஓர் அத்தியாயத்தையாவது நீங்கள் கொண்டுவாருங்கள், அல்லாஹ்வைத் தவிர உங்களுக்கு உதவி செய்பவர்களையெல்லாம் அழைத்துக் கொள்ளுங்கள், நீங்கள் உண்மையாளர்களாக இருப்பின். (அல் பகறா 23)

மேலும் அல்லாஹ் மனித, ஜின் இருபாலர்களிடத்திலும் சவால் விடுகிறான்: இந்த குர்ஆனைப் போன்று கொண்டு வருவதற்கு மனிதர்களும், ஜின்களும் ஒன்று சேர்ந்தாலும் இதனைப் போன்று அவர்கள் கொண்டுவரமாட்டார்கள். அவர்களில் சிலர் சிலருக்கு உதவியாளராக இருந்தாலும் சரியே! என்று (நபியே நீர் கூறுவீராக. (பனீ இஸ்ராயீல் 88)

02 தமக்கும் தமது சமதாயத்திற்கு மத்தியிலும் ஏற்பட்ட மோதல்கள், முரண்பாடுகளுக்கு மத்தியிலும் எல்லாவிதமான கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டு தொடர்ந்தும் தமது அழைப்புப் பணியில் சற்றும் சளைக்காமல் ஈடுபட்டுவந்தார்கள், எந்த அளவுக்கெனில் அவர்களை கொன்றுவிடுவதன் மூலம் அவர்களது அழைப்புப்பணிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட திட்டம் தீட்டினர், இருந்தும் அவர்கள் தமது புதிய மார்க்கத்தின் பக்கம் அழைப்பதில், அல்லாஹ்வின் மார்க்கத்தை

பரப்புவதில் தொடர்ந்தும் ஈடுபட்டுவந்தார்கள்.

தனது சமுதாயத்தவர்கள் இழைத்த துன்பங்கள், துயரங்கள், சோதனைகள், வேதனைகள் அனைத்தையும் பொறுத்துக் கொண்டார்கள். பொய்யான இட்டுக்கட்டப்பட்ட ஒரு பணியின் பக்கம் அழைப்பவராக இருந்தால்- அல்லாஹ் பாதுகாப்பானாக- தமது சமூகம் தம்மை கொன்றுவிடும், தாம் அழிந்து விடுவோம், இதற்காக அவர்களது சமூகம் வரிந்து கட்டிக்கொண்டு ஒட்டுமொத்தமாக அவர்களை எதிர்க்கத் தயாராகிக் கொண்டிருப்பதை அறிந்த மாத்திரத்திலேயே அவ்வழைப்பை அவர்கள் விட்டிருப்பார்கள்.

இது பற்றி (Dr. M.H. DURRANI) குறிப்பிடும்போது: நிச்சயமாக இந்த நம்பிக்கை, தொடர் முயற்சி, மனோ வலிமை, உறுதி எப்படிப்பட்டதெனில் இவைகளைக் கொண்டுதான் முஹம்மத் தமது இயக்கத்தை அதன் வெற்றிவரை கொண்டு செல்லக் காரணமாக அமைந்தது. அப்பண்புகள் தாம் அவர்களது அழைப்பு உண்மையென்பதற்கு மிகப்பெரும் ஆதாரங்களாகும். மாற்றமாக அவர்களது உள்ளத்தில் தமது அழைப்பு பற்றி கடுகளவு சந்தேகமோ, தடுமாற்றமோ இருந்திருக்குமேயானால், தொடர்ந்து இருபது வருடங்களாக ஓயாமல் வீசிக்கொண்டிருந்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் நிச்சயமாக அவர்களால் உறுதியாக இருந்து எதிர்நீச்சல் போட்டிருக்க முடியவே முடியாது.

நோக்கத்தின் பூரணமான உண்மையிலும், குணங்களில் சிறந்தவராகவும், ஆத்மாவில் உயர்ந்தவராகவும் இருந்தார்கள் என்பதற்கு இதற்குப் பின்னரும் ஓர் ஆதாரம் தேவையா? எனவே, இத்தகைய காரணங்கள் அனைத்துமே எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி இந்த மனிதர் நிச்சயமாக உண்மையில் இறைத்தூதர்தான் என்ற முடிவுக்கு இட்டுச் செல்கின்றது.

இவர்தான் எம் பெருமானார் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களாவார்கள். அரிய பண்புகளை தன்னகத்தே கொண்ட ஒரு பொக்கிஷமாகவும், நன்மைக்கும், சிறப்புகளுக்கும் சம்பூரணமான ஒரு முன்னுதாரணமாகவும், உண்மைக்கும், தூய்மைக்கும் ஒரு அடையாளச்சின்னமாகவும் இருந்தார்கள். நிச்சயமாக அவர்களது

வாழ்வும், சிந்தனைகளும், வாய்மையும், நேர்மையும், ஈகையும், கொள்கையும், சாதனைகளும் அவர்கள் ஓர் இறைத்தூதர் என்பதற்கு தனித்துவமான ஈடுயிணையற்ற ஆதாரங்களாகும். எவனொருவன் அவர்களது வாழ்க்கையை அறிவுப்பூர்வமாக படிக்கின்றானோ, நிச்சயமாக அவர்கள் இறைவனின் தூதர் என்றும், மனித குலத்திற்கு அவர்கள் கொண்டுவந்த அல்குர்ஆன் உண்மையாகவே இறைவேதம்தான் என்றும் சான்று பகர்வான். உண்மையைத் தேடி அதை அடைய வேண்டுமென்ற நோக்கில் நடுநிலையோடு சிந்திக்கின்ற அனைத்து சிந்தனையார்களும் அவசியம் இந்த முடிவையே அடைவார்கள்.

03 இயல்பிலேயே அறியப்பட்ட ஒரு விடயம் யாதெனில், ஒவ்வொரு மனிதனும் இவ்வுலக வாழ்க்கையின் இன்பங்களான, சொத்து, செல்வங்கள், மனைவி, மக்கள், உணவு, உடை, பானங்கள் வாகனங்கள் அனைத்தின் மீதும் விருப்பம் கொண்டவர்கள்.

இது பற்றி அல்லாஹ் கூறுகிறான் (பெண்கள், ஆண்மக்கள், பொன், வெள்ளிகளினால் சேர்த்து வைக்கப்பட்ட பெருங்குவியல்கள், அடையாளமிடப்பட்ட குதிரைகள், ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய கால் நடைகள், வேளாண்மை ஆகிய (மனதுக்கு) ஆசையூட்டப்பட்டவற்றை நேசிப்பது மனிதர்களுக்கு அழகாகப்பட்டுள்ளது. இவை யாவும் நிலையற்ற இவ்வுலக வாழ்க்கையின் அற்ப இன்பங்களே, அல்லாஹ்வோ அவனிடத்தில் நிலையான அழகிய திரும்பிச் செல்லுமிடம் உண்டு (ஆல இம்ரான் 14).

எனவே ஒவ்வொரு மனிதனும் இவ்வின்பங்களை அடைந்து கொள்ள பல வழிகளில் முயற்சிகள் மேற்கொள்கின்றனர். எனினும் மக்கள் அவைகளை சம்பாதித்துக் கொள்ள வேறுபட்ட வழிகளை கையாளுகின்றனர். சிலர் நேர்மையான முறையில் சம்பாதியத்தில் ஈடுபடுகின்றனர். வேறு சிலரோ மார்க்கத்திற்கு முரணான முறையில் பொருளாதாரத்தை ஈட்டிக்கொள்ள முனைகின்றனர், இதனை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அவர்கள், தமது அழைப்புப்பணியை ஆரம்பித்தபோது அவர்களிடம் இவ்வழைப்பை விட்டுவிட வேண்டுமென

வேண்டி இஸ்லாத்தின் எதிரிகள் பேரம் பேசலானார்கள். பலவிதமான தெரிவுகளை நபி (ஸல்) அவர்கள் முன் எடுத்துவைத்தார்கள். உலக இன்பங்களைக் கொண்டு ஆர்வமூட்டியும், பலவிதமான இன்பங்கள், சுகண்டிகளைக்கொண்டும் மயக்கவும் முயன்றனர். மேலும் அவர்களது அனைத்துவிதமான ஆசைகளையும், கோரிக்கைகளையும் நிறைவேற்றித்தருவதாக வாக்களித்தனர். நபியவர்கள் தலைமைத்துவத்தை வேண்டியிருந்தால் அவரை தலைவராக்கியிருப்பார்கள். அவர்கள் பெண்களை திருமணம் செய்ய விரும்பியிருந்தால், மக்காவிலேயே அழகான மங்கையை திருமணம் முடித்துக் கொடுத்திருப்பார்கள். அவர்கள் செல்வத்தை விரும்பியிருந்தால் அதனையும் இந்த அழைப்புப் பணியை விட்டுவிடுவதற்காக சேமித்துக் கொடுத்திருப்பார்கள் அந்த இஸ்லாத்தின் எதிரிகள். ஆனால் நபியவர்களோ இறைவனின் வழிகாட்டுதலின் மூலம் ஊற்றெடுக்கும் உறுதியான எண்ணத்தோடு அவர்களை நோக்கிக் கூறினார்கள்: இந்த அழைப்புப்பணியை விட்டுவிடுவதற்காக அவர்கள் சூரியனை தனது வலக்கரத்திலும், சந்திரனை தனது இடக்கரத்திலும் வைப்பதாகக் கூறினாலும் கூட இப்பணி முழுமையடையும் வரை அல்லது நான் அதற்காக உயிரை இழக்க நேரிட்டாலும் இப்பணியை நான் விட்டுவிடமாட்டேன் என்றார்கள்.

எனவே நபி (ஸல்) அவர்கள் ஒரு பொய்யான அழைப்பின் பக்கம் அழைக்கக்கூடியவராக இருந்திருப்பார்களேயானால் (அல்லாஹ் பாதுகாப்பானாக) அவர்களின் இப்பேரத்தை ஏற்று இச்சந்தர்ப்பத்தை பயன் படுத்தியிருப்பார்கள், ஏனெனில் அவர்கள்முன் வைக்கப்பட்ட தெரிவுகள் உலக ஆதாயங்களை நோக்கமாகக் கொண்டு வாழ்பவர்களின் உயர்ந்த இலட்சியங்களாகும்.

டாக்டர் துர்ரானி தொடர்ந்தும் இது பற்றி குறிப்பிடும் போது: நபி (ஸல்) அவர்கள் மக்காவில் 13 வருடங்களும் மதீனாவில் 10 வருடங்களுமாக இடைவிடாது தொடர் கஷ்டங்களை அனுபவித்து வந்தபோதும், ஒரு மயிரிழை அளவு கூட அவர்கள் தன் நிலையை விட்டும் கீழிறங்கவில்லை. அவர்கள் உறுதியாகவும், தான் கொண்ட கொள்கையிலே நம்பிக்கையோடும், நேக்கத்தை நிறைவு செய்வதில்

அசைக்க முடியாதவராகவும் இருந்தார்கள். அவர்கள் கொண்டு வந்த இறைமார்க்கத்தையும், அதற்கான அழைப்பையும் விட்டுவிடக்கோரி அவர்களின் காலடியில் செல்வங்களை குவிப்பதாகக் கூறியபோதும். அவர்களை தலைவராக அங்கீகரிப்பதாக முழங்கியபோதும், அவர்கள் அந்த ஆசை வார்த்தைகளுக்கு அடிமைப்படாது, ஏன் அவைகளுக்குப் பதிலான கடினம் நிறைந்த அழைப்புப்பணியில் தொடர்ந்தும் ஈடுபட்டார்கள்? ஏன் நிம்மதி, சந்தோஷம், ஆட்சி, அதிகாரம், பொருளாதாரம் போன்றவற்றிக்கு இம்மியளவும் ஆசைப்படவில்லை? இவைகளுக்கு விடைகாண வேண்டுமெனில் ஒருவன் ஆழமாக இதுபற்றி சிந்திக்க வேண்டும்.

04 யாரெல்லாம் பதவியில் தலைமைத்துவத்தில் இருக்கிறார்களோ அவர்களின் ஆளுகைக்குக் கீழுள்ள அனைத்து வளங்களையும், மக்கள் பலத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள், தாம் விரும்பிய விதத்தில் அவைகளை தமது தேவைகளுக்கு பயன்படுத்த அதிகாரம் பெற்றிருப்பார்கள் என்பது உலகறிந்த உண்மையாகும். ஆனால் முஹம்மத் (ஸல்) அவர்களோ அத்தகைய ஆட்சி, அதிகாரத்தில் இருந்தும் நிச்சயமாக உலக வாழ்க்கை நிலையற்றது, அழிந்துவிடக்கூடியது என்பதை அறிந்திருந்தார்கள்.

இது பற்றி அப்துல்லாஹ் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் ஈச்சம் பாயில் படுத்திருந்ததால் அவர்களது மேனியில் அதன் அடையாளங்கள் அப்படியே பதிந்திருந்ததை கண்ட நான் நபி (ஸல்) அவர்களைப்பார்த்து இறைவனின் தூதரே! எனது தாயும், தந்தையும் அர்ப்பணமாகட்டும். நீங்கள் எங்களுக்கு அனுமதியளித்தால் உங்களின் மேனி பாதிக்காமலிருக்க அப்பாயின் மீது ஒரு விரிப்பை (பஞ்சணையை) விரித்துத் தருவோம் என்றேன், அதற்கு நபி (ஸல்) இந்த உலகுக்கும் எனக்கும் மத்தியில் உள்ள தொடர்பு இளைப்பாருவதற்காக ஒரு மரத்தின் நிழலில் சற்று அமர்ந்து விட்டு பின் தனது பயணத்தைத் தொடரும் ஒரு பிரயாணியை- வழிப் போக்கனை - போன்றதாகும் எனக்கூறினார்கள். (திர்மிதி).

மேலும் நபி (ஸல்) அவர்களைப் பற்றி நுஃமான் இப்னு பஷீர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: உங்கள் நபி (ஸல்) அவர்களை

நான் கண்டேன், அவர்கள் தரத்தில் குறைந்த (பெருமதியற்ற) ஈச்சம் பழங்களைக் கூட தமது வயிற்றை நிறப்புவதற்கு பெற்றுக் கொள்ளாதவராகவே (எளிமையான) முறையில் வாழ்ந்தார்கள். (முஸ்லிம்)

மேலும் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினர்கள், நபி (ஸல்) அவர்களின் உயிர் கைப்பற்றப்படும் வரை மூன்று நாட்கள் தொடர்ந்து வயிராற சாப்பிட்டதே இல்லை. (புஹாரி, முஸ்லிம்)

இத்தனைக்கும் அரேபிய தீபகற்பம் முழுவதும் அவர்களது ஆளுகைக்குக் கீழிருந்தது. முஸ்லிம்களுக்கு கிடைத்த பயன்களுக்கெல்லாம் அவர்களே காரணமாக இருந்தும் சில சமயங்களில் தமக்குப் போதுமான உணவை அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை.

இது பற்றி அவர்களது மனைவி அன்னை ஆயிஷா (ரலி) கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் தமது யுத்தக் கவசத்தை அடமானமாக ஒரு யூதரிடம் வைத்து உணவுப்பொருட்களை தவணையிட்டு வாங்கினார்கள். (புஹாரி)

நபி (ஸல்) அவர்கள் தாம் விரும்புகின்றவற்றை பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தார்கள் என்பதல்ல இதன் அர்த்தம் மாற்றமாக அவர்களுக்குமுன் பள்ளிவாசலில் உணவுப்பொருட்கள் ஒவ்வொரு நாளும் வந்துசேர்ந்த வண்ணமிருக்கும். நபி (ஸல்) அவர்கள் அப்பொருட்களை ஏழை, எளியவர்களுக்கு பகிர்ந்து அளிக்காமல் அவ்விடத்தை விட்டும் நகரமாட்டார்கள். மேலும் அவர்களது தோழர்களில் செல்வச் செழிப்பும், பொருளாதார வசதியும் கொண்டவர்கள் அன்னாருக்காக வேண்டியமட்டும் கொடுத்துதவ ஒருவருக்கொருவர் போட்டிபோட்டுக்கொண்டு தயாராக இருந்தும் கூட இவ்வுலக வாழ்க்கையின் யதார்த்தத்தை நபி (ஸல்) நன்றாக அறிந்திருந்ததால் அவைகளை ஏற்க மறுத்தார்கள் மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக மறுமையோடு ஒப்பிடும்போது இவ்வுலகத்தின் பெருமதி ஒருவர் தமது ஆட்காட்டி விரலை கடலினுள் நுழைத்து

வெளியே எடுத்தால் அக்கடலின் நீர் அவரது கை விரலில் எவ்வளவு ஒட்டி வந்ததென்பதை பார்க்கட்டும், அது போன்றதே இவ்வுலகம் என்றார்கள். (முஸ்லிம்)

மேலும், **(Lady E. Cobold)** என்பவர் தமது ஹஜ்ஜு க்காக மக்கா **(1934 – London)** என்ற தமது நூலில் குறிப்பிடுகிறார்: முஹம்மத் என்பவர் அரேபிய தீபகற்பத்தின் ஆட்சி மற்றும் ஆன்மீகத்தலைவராக இருந்தும் கூட அவர்கள் தமக்கொரு பட்டப் பெயர் சூட்டிக் கொள்வது பற்றி சிந்திக்கவில்லை. மேலும் தாம் வெற்றி கொண்ட பகுதிகளில் முதலீடுகள் செய்வதில் ஈடுபடவில்லை. மாற்றமாக அவர்கள் போதுமென்ற எண்ணத்திலேயே தொடர்ந்தும் இருந்து வந்தார்கள். ஏனெனில் அவர்கள் இறைத்தூதராகவும், முஸ்லிம்களின் சேவகராகவும் இருந்து வாழ்ந்து வந்தார்கள்.

அவர்கள் தமது வீட்டு வேலைகளை தாமே செய்தும், தமது பாதணிகளை தாமே சரி செய்துகொள்ளக் கூடியவராகவும், தயாள குணம் கொண்டவராகவும் பிறர் நன்மை பேணக்கூடியவராகவும் இருந்து வந்தார்கள். அநேகமான நேரங்களில் தமக்கே போதுமான வசதிகள் இல்லாத போதும் ஏழை, எளியவர்கள் தம்மை நாடி வந்து ஏதாவது கேட்பார்களாயின் தம்மிடமிருந்ததைக் கொடுத்துதவுவார்கள்.

05 தாமும், தம்மைச் சேர்ந்தவர்களும் நிரபராதி என்று நிரூபித்து உண்மை என்னவென்று தெளிவுபடுத்த வேண்டிய சில கவலையான, மோசமான நிகழ்வுகள் கூட நபி (ஸல்) அவர்களுக்கு நிகழ்ந்ததும் உண்டு, அப்போதெல்லாம் இறைவனிடமிருந்து வஹீ வந்து அது பற்றிய தெளிவு தம்மீது இறக்கப்படாமலிருக்கும் போதெல்லாம் அவ்விடயங்கள் சம்பந்தமாக எந்த ஒரு முடிவும் எடுக்க முடியாது போகும். எனவே வஹீ வரும் வரை கவலையோடும், ஆத்திரத்தோடும் காத்திருப்பார்கள்.

இத்தகைய விடயங்களில் ஒன்றுதான் நபி (ஸல்) அவர்களை மானபங்கப்படுத்திட அவர்கள் மனைவி அன்னை ஆயிஷா (ரலி) இன் மீது ஒருவரை சம்பந்தப்படுத்தி அவதூறு கூறினர் அல்லாஹ்வின் எதிரிகள். எனவே நபி (ஸல்) அவர்கள் தமது மனைவியின் மீது சுமத்தப்பட்ட

அவச்சொல்லிலிருந்து அவரை தூய்மைப்படுத்தி நிரபராதியென்று வஹீ இறைச்செய்தி வரும்வரை அவர்களின் எதிரிகளின் கிண்டல், கேலிக்கு மத்தியில் ஒரு மாதம் வரை பொறுத்திருந்தார்கள். ஆனால் அவர்கள் பொய்யராக இருந்திருப்பாரேயானால் இப்பிரச்னைக்கு அங்ஙணமே ஏதோ ஒரு முடிவை கூறியிருப்பார்கள், ஆனால் அவர்களோ இறைவனின் தூதர், தன் மனோ இச்சைப்படி எதனையும் பேசமாட்டார்கள்.

06 நபி (ஸல்) அவர்கள் தாமும் ஒரு சாதாரன மனிதர்தான் என்பதை மீறிய ஒரு மேலான அந்தஸ்த்தை விரும்பியதில்லை, எனவே அவர்கள் என்றுமே தம்மை மற்றவர்கள் மகத்துவப்படுத்துவதை போன்ற செயல்களைக் கண்டால் பொருந்துக்கொள்ள மாட்டார்கள்.

இது பற்றி அனஸ் (ரலி) கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்களை விட நேசத்திற்குரிய ஒரு மனிதர் அவர்களது தோழர்களுக்கு இருந்ததில்லை, இருந்தும் அவர்கள் வருகை தந்தால் அமர்ந்திருப்பவர்கள் யாரும் அவர்களுக்காக எழுந்து நிற்கமாட்டார்கள், ஏனெனில் அவர்கள் அவ்வாறு செய்வதை வெறுக்கக்கூடியவர்களாக இருந்தார்கள். (திர்மிதி)

**W. Irving** என்பவர் நபி (ஸல்) அவர்களைப்பற்றி குறிப்பிடும்போது: பல இராணுவ வெற்றிகளை நபி முஹம்மத் (ஸல்) கண்டபோதும் அவ்வெற்றிகளெல்லாம் அவர்களை ஆணவம், அகம்பாவம் கொண்டு நடப்பவராக ஆக்கிவிடவில்லை. ஏனெனில் அவர்கள் இஸ்லாத்திற்காக வேண்டி போராடக்கூடியவராக இருந்தார்களே தவிர தமது சொந்த நலனைக் கருத்திற்கொண்டு போராடவில்லை. அவர்களது புகழ் வானைத் தொட்டு நின்ற வேளையிலுல் கூட அவர்கள் மிகவும் பணிவான ஒரு சாதாரண மனிதரைப் போன்றே இருந்தார்கள்.

ஒரு பிரமாண்டமான இஸ்லாமிய ஆட்சியை நிறுவிய நிலையிலும் அவர்கள் ஒரு அவைக்குள் நுழையும் போது அவர்களுக்காக அங்கு அமந்திருப்பவர்கள் மரியாதை செய்வதற்காக வேண்டி எழுந்து நிற்பதையோ, அல்லது அளவு கடந்து வரவேற்பதையோ அவர்கள் வெறுக்கக் கூடியவராக இருந்தார்கள். இவர் ஒரு நேர்மையான ஆட்சியாளராக இருந்தார்கள். மேலும் ஆட்சிப் பதவியை தமக்குப்பின்

தமது வாரிசுகளுக்குச் சேரவேண்டும் என்று ஒருபோதும் எண்ணியதுமில்லை அதுபற்றிச் சிந்தித்ததுமில்லை.

07 நபி (ஸல்) அவர்களின் சில தவறான பிழையான செயல்களை கண்டித்தும், பழித்தும் அல்குர்ஆனில் சில வசனங்கள் இறக்கப்படல்:

எடுத்துக்காட்டாக: அல்லாஹ் கூறுகிறான்: நபியே! உம்முடைய மனைவியின் பொருத்தத்தை நீர் தேடியவராக அல்லாஹ் உமக்கு ஆகுமாக்கி வைத்ததை நீர் ஏன் சத்தியம் செய்து ஹராம் என்று விலக்கிக்கொண்டீர்? மேலும் அல்லாஹ் மிக்க மன்னிக்கின்றவன். மிகக்கிருபையுடையவன். (அத்தஹ்ரீம் 1)

இத்திருமறை வசனம் இறங்கக் காரணம் நபி (ஸல்) அவர்கள் சில மனைவி மார்களின் வேண்டுகோளுக்கு இணங்க தேன் சாப்பிடுவதை தமக்கு ஹராமாக்கிக் கொண்டார்கள். உடனே நபியவர்களின் இச் செயலைக் கண்டித்து அல்லாஹ் வஹி இறக்கினான்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் தபூக் யுத்தத்தில் கலந்து கொள்ளாமல் இருந்த நயவஞ்சகர்களின் சாக்குபோக்குகளை ஏன், எதற்கு என்று தீர விசாரித்து யார் பொய்யர் யார் உண்மையாளர் என்பதை தீர்மானிக்காமல் விரைவாக அவர்களது காரணங்களை ஏற்றுக் கொண்டதையிட்டு நபி(ஸல்) அவர்களை அல்லாஹ் பின் வருமாறு கண்டிக்கிறான்: அல்லாஹ் உம்மை மன்னித்தருள்வானாக போருக்காக வராமல் தங்கிவிட்ட அவர்களில் உண்மை சொல்பவர்கள் யார் என்பது உமக்குத் தெளிவாகி பொய்யர்களை நீர் அறியும் வரை ஏன் அவர்களுக்கு நீர் அனுமதியளித்தீர்? (அத்தவ்பா 43)

மேலும் அல்லாஹ் கூறுகிறான்: எந்த நபிக்கும் இரத்தத்தை பூமியில் ஓட்டாத வரையில் போர்க்கைதிகள் அவருக்கு இருப்பது தகுமானதல்ல, நீங்கள் இவ்வுலகப் பொருளை நாடுகிறீர்கள் அல்லாஹ்வோ உங்களுடைய மறுமை வாழ்வை நாடுகிறான், இன்னும் அல்லாஹ் மிகைத்தவன், தீர்க்கமான அறிவுடையவன் அல்லாஹ்விடமிருந்து ஓர் எழுத்து முந்திவிடாதிருப்பின், நீங்கள் பத்ருப்போரின் போது ஈட்டுப்பணத்தை எடுத்துக்கொண்டதில் மகத்தானதொரு வேதனை உங்களைப் பிடித்திருக்கும். (அல் அன்ஃபால்: 67-68)

அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்: அல்லாஹ் இறக்கியவற்றிலிருந்து ஏதாவது ஒன்றை மக்களுக்கு கூறாமல் மறைப்பதாக இருந்தால் நபி (ஸல்) அவர்கள் இத்திருமறை வசனத்தை மறைத்திருப்பார்கள், அதாவது அல்லாஹ் கூறுகிறான்: நபியைப் பார்த்து: அல்லாஹ் வெளியாக்க இருந்ததை நீர் உம்மனதில் மறைத்திருந்தீர், மேலும் மனிதர்களுக்கு நீர் பயப்படுகிறீர், இன்னும் அல்லாஹ் அவன்தான் நீர் பயப்படுவதற்கு மிக உரியவன,' மனிதர்கள் அல்ல. (புஹாரி, முஸ்லிம்)

மேலும் அல்லாஹ் கூறுகிறான்: தன் நபியைப்பார்த்து நபி (ஸல்) அவர்கள் உஹத் யுத்தத்தில் தமது தலைவெட்டுப்பட்டு, பல் உடைக்கப்பட்டபோது தங்கள் நபியுடைய தலையை உடைத்த கூட்டத்தினர் எப்படி வெற்றிபெறப் போகிறார்கள்? என்று கூறிய போது, நபியே! இக்காரியத்தில் நாம் கட்டளையிட்டதைத் தவிர உமக்கு யாதொரு அதிகாரமுமில்லை (ஆல இம்ரான் 128). என்ற வசனம் அல்லாஹ்விடமிருந்து இறங்கியது.

மேலும்: நபி (ஸல்) அவர்கள் குரைஷிகளைச் சேர்ந்த பெரும் தலைவர்களை நோக்கி அழைப்புப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அவ்விடத்திற்கு மார்க்கப் போதனை பெற்றுக் கொள்ள வேண்டி குருடரான அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் என்ற ஸஹாபி வந்தார்கள், நபி (ஸல்) அவர்கள் அவரின் ஸலாமுக்கு பதிலுரைக்காமல் முகத்தை கடுமையாக்கிக் கொண்டு அவரைவிட்டும் முகத்தை திருப்பிக் கொண்டார்கள், இச்செயலைக் கண்டித்து அல்லாஹ் நபி (ஸல்) அவர்களைப்பார்த்து பின் வருமாறு கூறினான்: நமது நபியாகிய அவர் கடுகடுத்தார், மேலும் புறக்கணித்தார்- தன்னிடம் பார்வையில்லாதவர் வந்ததற்காக (நபியே)! உம்மிடம் வந்த அவர் பரிசுத்தவானாக ஆகிவிடக்கூடும் என்பதை உமக்கு எது அறிவித்தது.? (சூரா அபஸ 1-3).

எனவே நபி (ஸல்) அவர்கள் ஒரு பொய்யராக இருந்திருப்பார்களேயானால் நாம் மேற்குறிப்பிட்ட நபி (ஸல்) அவர்களை கண்டித்து அல்லாஹ் இறக்கிய திருமறை வசனங்கள் அல்குர்ஆனில் இடம் பெற்றிருக்காது தமக்குப் பாதகமாக இறக்கப்பட்ட அவ்வசனங்களை அவர் மறைத்திருக்கலாம்.

**Lightner** என்பவர் தனது இஸ்லாமிய மார்க்கம் என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: நபி முஹம்மத் செல்வாக்குமிக்க ஒரு தலைவரிடம் பேசிக்கொண்டிருந்தவேளை ஓர் எளியவர் அவரிடம் சமூகமளித்த போது தமது முகத்தைக் கடுகடுத்து திருப்பிக் கொண்டமைக்காக அல்லாஹ் கடுமையாக அவரை கண்டித்து வஹீ இறக்கினான், அவ்வஹீ அப்படியே அல்குர்ஆனில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. கிருஸ்துவ மடையர்களிள் சிலர் அவர்கள் பேரில் கூறுவது உண்மையாக இருப்பின் அந்த இறைச்செய்திகள் அல்குர்ஆனில் இடம் பெற்றிருக்காது.

08 நபி (ஸல்) அவர்களின் தூதுத்துவம் உண்மையானது என்பதற்கு மிகத்தெளிவான ஆதாரங்களில் ஒன்றுதான், நபிகளது சிறிய தந்தையான அபூ லஹப் நரகவாதி, அவன் நரகத்தைச் சென்றடைவான் என்று தீர்ப்பிட்டு இறங்கிய அல்மசத் அத்தியாயமாகும். இச்சூரா அவர்களது அழைப்புப்பணியின் தொடக்கத்தில் இறக்கப்பட்டதாகும். அவர் ஓர் பொய்ப் பிரச்சாரகராக இருந்திருந்தால் இது போன்று உறுதியான சட்டத்தை தீர்மானமாக சொல்லியிருக்க முடியாது. ஏனெனில் அவர்களது சிறிய தந்தை ஒரு வேளை அவர்களை ஏற்றுக்கொள்வார் என்று எண்ணியிருக்கலாம்.

இது பற்றி **(Gary Miller)** என்பவர் வியப்புக்குரிய அல்குர்ஆன் என்ற நூலில் குறிப்பிடும்போது: அபூ லஹப் என்ற இந்த மனிதன் இஸ்லாத்தை மிகக் கடுமையாக வெறுக்கக்கூடியவனாக இருந்தான், எந்த அளவுக்கெனில் நபி முஹம்மத் (ஸல்) சொல்லக்கூடிய வார்த்தைகளை எவ்விதப் பிரயோசனமுமற்றதாக ஆக்கி செயலிழக்கச் செய்வதற்காக வேண்டி அவர்கள் எங்கெல்லாம் சென்று பிரச்சாரம் செய்வார்களோ அங்கெல்லாம் அவர்களைப் பின்தொடர்ந்து செல்லக் கூடியவனாக இருந்தான். நபி (ஸல்) அவர்கள் யாராவது அறிமுகமற்ற புதுமனிதர்களோடு பேசிக்கொண்டிருந்தால் அவர்கள் தமது பேச்சை முடிக்கும்வரை காத்திருந்து அப்புதிய மனிதர்களிடம் சென்று முஹம்மத் என்ன கூறினார்? அவர் உங்களுக்கு ஒன்றைப்பார்த்து அது வெள்ளை என்றால் கருப்பாகும், கருப்பு என்றால் வெள்ளையாகும். அவர் இரவென்றால் பகலாகும், பகலென்றால் இரவாகும் என்று கூறுவான். இதன் நோக்கம் அவன் நபி (ஸல்) அவர்கள் எதைக் கூறினாலும் அதற்கு

மாற்றமாகவே மக்களிடம் போய் சொல்லி, மக்களை வெறுப்பேற்றி அவர்கள் மீது சந்தேகிக்க வைப்பதாகும். அபூலஹப் இறப்பதற்கு 10 வருடங்களுக்கு முன் (அல்மசத்) என்ற அத்தியாயம் இறங்கியது. இச்சூரா தீர்மானமாக கூறுகிறது. நிச்சயமாக அபூ லஹப் நரகில் நுழைவானென்றும், அவன் இஸ்லாத்தில் நுழைய மாட்டானென்றும் எனவே இடைப்பட்ட அந்த பத்து வருட காலத்துக்குள் முஹம்மத் நபியை, அவர்களது அழைப்புப் பணியைப் பொய்யாக்கி அவன் மக்கள் முன் வந்து மக்களே! முஹம்மத் கூறுகிறார்: நான் இஸ்லாத்தை ஏற்க மாட்டேனாம், அதனால் நான் நரகில் நுழைவேன் என்கிறார். ஆனால் நான் இப்போது பகிரங்கமாக அறிவிக்கிறேன் நான் இஸ்லாத்தில் நுழைந்து முஸ்லிமாக விரும்புகிறேன்! இப்போது கூறுங்கள்: முஹம்மத் சொல்லக்கூடிய விடயங்களில் உண்மையாளரா? அல்லது இல்லையா? அவருக்கு வரக்கூடிய (வஹீ) இறைச்செய்தி, இறைச்செய்திதானா? என்று சொல்லியிருக்கலாம், ஆனால் அபூலஹப் இதைச் செய்யவே இல்லை, அவனுடைய அனைத்துச் செயல்களும் நபி (ஸல்) அவர்களுக்கு மாற்றம் செய்வதாகவே இருந்தது, இருந்தும் இவ்விடயத்தில் மாத்திரம் இறைவன் தீர்ப்புக்கு மாற்றமாக செயல்பட முடியவில்லை.

நபி (ஸல்) அவர்கள் அபூலஹபைப் பார்த்து நீ என்னை வெறுக்கின்றாய், மேலும் என்னை என் பணியைச் செய்யவிடாது தடுக்க விரும்புகிறாய், சரி நன்று, என் பேச்சை முறியடிக்க உனக்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது முடியுமென்றால் செய்து காட்டு பார்க்கலாம் என்று கூறுவதைப்போல் இச்சம்பவம் இருக்கிறது. எனினும் அவன் பத்து வருடகால இடைவெளியிருந்தும் முஸ்லிமாக மாறவுமில்லை, இஸ்லாமியனைப்போல் காட்டிக்கொள்ளவுமில்லை.

மிக எளிதாக ஒரு நொடிப்பொழுதில் இஸ்லாத்தை அழித்தொழித்திட அவனிடம் பத்து வருடகால சந்தர்ப்பம் இருந்தது, ஆனாலும் நிச்சயமாக அந்த வேதவாக்கு முஹம்மத் (ஸல்) அவர்களின் நாவிலிருந்து வெளிவந்ததல்லவே, ஏனெனில் மறைவானவற்றை எவன் அறிந்தவனாக இருக்கின்றானோ அவனது வாக்காகும். நிச்சயமாக அவனே அபூலஹப் முஸ்லிமாக மாட்டான் என்பதை அறிவான். ஆந்த

அத்தியாயம் குறிப்பிட்டபடி அபூலஹப் அதே நிலையில்தான் தொடர்ந்தும் இருப்பானென்பதை இது அல்லாஹ்வுடைய வஹீ அறிவிப்பாக இல்லாதிருந்தால் முஹம்மத் (ஸல்) எப்படி அறிந்திருப்பார்கள்!?

மேலும் பத்து வருடகாலமாக எப்படி தம்மிடமுள்ள விடயம் உண்மையானது என்பதில் இது அல்லாஹ்வுடைய வஹீ (அறிவிப்பு) இல்லாதிருந்தால் அவரால் உறுதியாக இருந்திருக்க முடியும் !?

ஒருவன் இப்பயங்கரமான சவாலை விடுவதாக இருந்தால் அதற்கு ஒரே காரணம்தான் இருந்திருக்க முடியும், அதுவே இது அல்லாஹ்விடமிருந்து வந்துள்ள வஹீ (அறிவிப்பு) என்பதைத் தவிர வேறில்லை.

அபூலஹபின் இரு கைகள் நாசமடைக! அவனும் நாசமடைவானாக! அவனுடைய செல்வமும், அவன் சம்பாதித்தவையும் அவனுக்குப் பயனளிக்கவில்லை. மறுமையில் கொழுந்துவிட்டெரியும் நெருப்பில் அவன் பிரவேசிப்பான், விறகு சுமப்பவளான அவனுடைய மனைவியும் (அந்நரகில் நுழைவாள்) அவளுடைய கழுத்தில் முறுக்கேறிய ஈச்சங்கயிறுதான் (இறுக்கும்), (அதனால் அவளும் அழிவாள்).

09 அல்குர்ஆனுடைய வசனங்களில் ஓர் வசனத்திலே முஹம்மத் என்பதற்கு பதிலான அஹ்மத் என்ற பெயர் இடம்பெற்றுள்ளது, அவ்வசனமானது: மேலும் மர்யமின் புதல்வர் ஈஸா: இஸ்ராயீலின் மக்களே! எனக்கு முன்னுள்ள தவ்ராத்தை உண்மைப்படுத்தியவனாகவும், எனக்குப் பின்னர் அஹ்மத் எனும் பெயருள்ள ஒரு தூதர் வருவார் என நன்மாராயம் கூறுபவனாகவும், நிச்சயமாக உங்கள்பால் (அனுப்பப்பட்ட) அல்லாஹ்வின் தூதராகவும் நான் இருக்கிறேன், என்று கூறியதை (நபியே நீர் நினைவு கூறுவீராக) பின்னர் (அவர் கூறியவாறு தெளிவான அத்தாட்சிகளுடன் அவர்களிடம் (அத்தூதராகிய)அவர் வந்தபோது இது தெளிவான சூனியம் என்று அவர்கள் கூறினார்கள். (அஸ்ஸஃப் 6)

எனவே அவர் ஓர் பொய்ப்பிரச்சாரம் செய்பவராக இருந்திருந்தால் (அல்லாஹ் பாதுகாப்பானாக) இப்பெயர் இடம் பெற்ற வசனம் அல்குர்ஆனில் குறிப்பிடப்படாமல் போயிருக்கும்.

10 இஸ்லாத்திற்கும், இஸ்லாமிய அழைப்பிற்கும் எதிராக, உடல்ரீதியான மற்றும் பொருளாதார ரீதியான முயற்சிகள் தொடர்ந்து செய்யப்பட்டு வந்த போதிலும, மேலும் அதைக் கொச்சைப்படுத்தியும், அதைவிட்டும் மக்களைத் திசை திருப்புவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருந்தபோதும், இஸ்லாமிய மார்க்கம் இன்றுவரை நிலைபெற்ற வண்ணமேயுள்ளது. மேலும் நாளுக்குநாள் அதில் நுழைபவர்கள் அதிகரித்து, அன்னிய மதத்தவர்களுக்கு தாக்கம் கொடுத்தவண்ணமே உள்ளனர். இது ஏனெனில் அல்லாஹ் இம்மார்க்கத்தை பாதுகாப்பதாக உறுதியளித்துள்ளான். அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக நாம்தான் (திக்ரு என்னும் இவ்) வேதத்தை (உம்மீது) இறக்கிவைத்தோம், நிச்சயமாக நாமே அதனை பாதுகாப்பவர்கள். (அல் ஹிஜ்ர் 9)

முஹம்மத் (ஸல்) அவர்களைப்பற்றி (**Th. Carlyle**) என்ற ஆங்கிலேய எழுத்தாளர் குறிப்பிடும் போது: நிச்சயமாக பொய்யான ஒரு மனிதன் வியக்கத்தக்க ஒரு மார்க்கத்தை உருவாக்க முடியும் என்பதை நீங்கள் எங்காவது கண்டதுண்டா?

ஒரு கெட்டியான வீடொன்றை கட்டக்கூடியவன் அக்கட்டடத்திற்குத் தேவையான கல், மண் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் பற்றிய முழுமையான அறிவில்லாமல் (திட்டமில்லாமல்) அவனால் ஒரு வீட்டைக் கட்டமுடியாது. அது பற்றிய எந்த அனுபவமுமில்லாமல் அவன் கட்டுவானேயானால் அது வீடாக இருக்க முடியாது. அது ஒரு வெறும் கூடாக, மேலும் அது விரைவில் இடிந்து போகும் ஒரு இடமாகத்தான் இருக்குமே தவிர, 12 நூற்றாண்டு காலமாக 200 மில்லியன் மக்கள் குடியிருக்கத்தக்க பலம் பொருந்திய ஒரு கட்டிடமாக இருக்குமென்பதற்கு பதிலாக அது எப்போதோ இடிந்துடைந்து மண்ணோடு மண்ணாகிப்போயிருக்கும்.

எனவே, உறுதியாக நான் அறிவேன் நிச்சயமாக ஒவ்வொரு மனிதனும் அவனது அனைத்து விடயங்களிலும் இயல்பான ஒழுங்கிற்கேற்பவே செயல்பட வேண்டும், இல்லையேல் அவனது சஹாக்கள் விடை தர மறுத்துவிடுவார்கள். உண்மையைப் போன்று அலங்கரித்துச்

சொன்னாலும் அக்காபிர்கள் (இறை மறுப்பாளர்கள்) பரப்பக்கூடிய ஒரு விடயம் பொய்யாகும். மேலும் ஒட்டு மொத்த சமூகங்களையும், ஜனங்களையும் இப்படியான பொய் பிரச்சாரங்களைக் கொண்டு வழிகெடுப்பது மிகப் பெரும் அநீதியாகும்.

எனவே அல்குர்ஆனை அல்லாஹ் பாதுகாத்து வைத்துள்ளதைப் போல், மேலும் புத்தகவடிவிலும் கோடிக்கணக்கான முஸ்லிம்களின் நெஞ்சங்களிலும் தலைமுறை தலைமுறையாக பாதுகாக்கப்பட்டு வருகின்றது. ஏனெனில் அல்குர்ஆனை மனனமிடுவதும், அதனை கற்பதும், பிறருக்கு கற்றுக்கொடுப்பதும் அதை நாள்தோறும் ஓதிவருவதும், முஸ்லிம்கள் ஆர்வம் காட்டக்கூடியதொருவிடயமாகும். மேலும் நபி (ஸல்) அவர்கள் தெளிவுபடுத்திய சிறப்பை அடைந்து கொள்ள ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொள்ளும் விடயங்களில் நின்றும் உள்ளவையாகும். நபி (ஸல்) அவர்கள் இது பற்றி குறிப்பிடும் போது: அல்குர்ஆனைக் கற்று அதனைப் பிறருக்கும் கற்றுக்கொடுக்கக் கூடியவரே உங்களில் சிறந்தவராவார். (புஹாரி)

மேலும், அல்குர்ஆனில் கூட்டல், குறைத்தல் அல்லது சில எழுத்துக்களை மாற்றம் செய்தல் போன்ற சில முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்த போதும் இவ்வனைத்து முயற்சிகளும் தோல்வியிலேயே முடிவுற்றன, காரணம் என்னவெனில் விரைவாக அடையாளம் காணப்பட்டு விடுவதும், எளிதில் அறியப்பட்டு விடுவதும் அல்குர்ஆனிய வசனங்களுக்கு இருக்கும் தனித்தன்மையாகும்.

இதுபோன்றே இஸ்லாமிய மார்க்கத்தின் இரண்டாவது அடிப்படையான சுன்னா - (நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் - நேர்மையான, நம்பிக்கையாளர்களால் பாதுகாக்கப்பட்டுள்ளது. அத்தகைய ஹதீஸ் கலை அறிஞர்கள் நபி (ஸல்) அவர்களுடைய ஹதீஸ்களை (பொன்மொழிகளை) உன்னிப்பாக கவனித்து எது மிகச்சரியானது, எது பலவீனமானது, எது இட்டுக்கட்டப்பட்டது என்பன போன்ற விடயங்களை உறுதிசெய்து நமக்குத் தந்துள்ளனர்.

எனவே எவரொருவர் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ள ஹதீஸ் நூற்களை புரட்டிப்பார்க்கின்றாரோ நிச்சயமாக

அவர் நபி (ஸல்) அவர்களின் பொன்மொழிகளை பாதுகாக்க எந்த அளவு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் என்பதின் உண்மை நிலையை அறிந்து கொள்வார். மேலும் நபி (ஸல்) அவர்களைத் தொட்டும் சொல்லப்பட்ட செய்திகள் சரியானவைதானா என்ற சந்தேகமும் அவரை விட்டும் நீங்கிவிடும்.

மேலும் (Mcikael Hart) என்பவர் தனது வரலாறு படைத்த நூறு மனிதர்கள் என்ற தனது நூலில் முஹம்மத் (ஸல்) அவர்களை பற்றி குறிப்பிடும்போது: நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அவர்கள் உலகிலேயே மிக மகத்தானதொரு மார்க்கத்தை அமைத்து, அதனை உலகெங்கும் பரப்பினார்கள், மேலும் போற்றத்தக்க உலக ஆட்சியாளர்களுக்கெல்லாம் ஒரு தலைமை ஆட்சியாளராக ஆகினார்கள். மேலும் அவர்கள் மரணித்து 13 நூற்றாண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இன்றுவரை அதனுடைய தாக்கம் சக்தி வாய்ந்ததாகவே இருந்து கொண்டிருக்கிறது. (இன்ஷா அல்லாஹ் இனியும் இருக்கும்).

11 நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டுவந்த அடிப்படைகள் உண்மையானவை மேலும் அவைகள் சரியானவை. மேலும் எல்லா காலகட்டத்திற்கும், எல்லா இடங்களுக்கும் அவைகள் பொருத்தமானவைகள். அவ்வடிப்படைகளை செயல்படுத்தும் போது வெளிப்படும் நல்ல முடிவுகள் அவர்கள் கொண்டுவந்தது அல்லாஹ்வின் வஹீ (அறிவிப்பில்) இருந்தும் உள்ளதாகும் என்பதற்கு சான்றாக இருக்கின்றது. ஏனெனில் நிச்சயமாக இவர்களுக்கு முன்னர் அதிகமான நபிமார்களும், ரஸூல்மார்களும் அனுப்பப்பட்டுள்ள போது முஹம்மத் (ஸல்) அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட இறைத்தூதராக இருப்பதற்கு என்ன தடை இருக்கிறது? புத்திரீதியாக (அறிவுரீதியாக)வோ, மார்க்க ரீதியாகவோ எந்தத்தடையுமில்லை என்பது பதிலாக இருப்பின், ஏன் மனித சமுதாயம் முழுவதற்குமான அவருடைய நபித்துவத்தை, தூதுத்துவத்தை மறுக்கின்றீர்கள், அதே சமயம் அவர்களுக்கு முன்னர் உள்ள நபிமார்களை அங்கீகரிக்கவும் செய்கிறீர்கள்.

12 வணக்கவழிபாடுகள், அரசியல், பொருளாதாரம், திருமணம், யுத்தம், கொடுக்கல் வாங்கல்கள் போன்ற மற்றும் ஏனைய துறைகளிலும் நபி (ஸல்) அவர்கள் வாயிலாக இஸ்லாம் கொண்டு

வந்துள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குகள் போன்று மனித சமுதாயம் முழுவதும் ஒன்று சேர்ந்து கொண்டு வர முயன்றாலும் இதுபோன்ற ஒழுங்குகள் மற்றும் சட்டங்களை அவர்களால் உருவாக்க முடியாது. இப்படி இருக்கும்பொது எழுதப் படிக்கத் தெரியாத ஒரு மனிதரால் உலக விடங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்த சம்பூரணமான ஒழுங்குகளை, சட்டதிட்டங்களை உருவாக்கியிருக்க முடியுமென கற்பனையில் கூட எண்ணிப்பார்க்க முடியுமா?.

எனவே இந்த ஒரு விடயமே போதாதா? அவர்களுடைய நபித்துவமும் தூதுத்துவமும் உண்மை என்பதற்கும், மேலும் அவர்கள் தம் சுய விருப்பப்படி எதனையும் பேசமாட்டார்கள் என்பதற்கும்.

13 தமது இளமைக்காலம் கழிந்த பின்னர் நிம்மதியை, சந்தோஷத்தை, ஓய்வை விரும்பும் அந்த முதுமையின் துவக்கத்திலேயே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அழைப்புப் பணியை நாற்பதாவது வயதை அடைந்த பின்னரே ஆரம்பித்தார்கள். (அல்லாஹ்வின் நாட்டப்படி).

14 **Carlyle** என்பவர் கதாநாயகர்கள் என்ற தனது நூலில் குறிப்பிடும்போது, நிச்சயமாக முஹம்மத் (ஸல்) என்பவர் தமது தூதுத்துவத்தில் உண்மையாளராக இருக்கவில்லை என்பது ஒரு பொய்யான குற்றச்சாட்டாகும். ஏனெனில் அவர்கள் தமது துடிப்புமிக்க இளமையையும், வாலிபப் பருவத்தையும் அமைதியான முறையில் தமது மனைவி கதீஜா (ரலி) யோடு கழித்து வந்தார்கள். அக்கால கட்டத்தில் அவர்கள் மக்களுக்கு மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தி அதன் மூலம் பிரபல்யத்தையோ, செல்வாக்கையோ, அதிகாரத்தையோ, அந்தஸ்த்தையோ அடைய முன்வரவில்லை. எனவே அவர்களது மனதுக்குள் உறங்கிக் கிடந்த எரிமலை எப்போது வெளிக்கிளம்பத் துவங்கியதெனில் அவர்கள் தமது இளமை பருவத்தைக் கடந்து முதுமையின் துவக்கத்தை அடைந்த போதுதான் அவர்கள் ஒரு தெளிவான மாபெரும் (பாரிய) ஒரு விடயத்தை நாடக்கூடியவராக இருந்தார்கள் எனக்குறிப்பிட்டுள்ளார்.

**R. Landau** என்பவர் இஸ்லாமும் அரேபியரும் என்ற தமது

நூலில் குறிப்பிடுகிறார்: முஹம்மத் (ஸல்) நபியவர்கள் மேற்கொண்ட பணி மிகக் கடினமானதாக இருந்தது. சில மேற்கத்திய வாதிகள் குறிப்பிடுவது போல் அது வெறும் வாதத்தையும் தன்னலத்தையும் அடிப்படையாகக் கொண்டு, அவர்களது சுய முயற்சியின் மூலம் தமது பணியை உறுதிப்படுத்துவதில் வெற்றியை நாடுமளவுக்கு எளிதாக இருக்கவில்லை. மாறாக இப்பணியை நிறைவேற்றுவதில் நபி (ஸல்) அவர்களின் மனத்தூய்மையும் அவர்கள் மீது இறக்கப்பட்ட வஹீயின் மீது அவர்களது தோழர்கள் கொண்ட பூரண நம்பிக்கையும், இன்னும் இதுபோன்ற விடயங்களும் முஹம்மத் திட்டமிட்டு மக்களை ஏமாற்றினார்கள் என்று சந்தேகிக்க இடம் தர மறுக்கின்றது. ஏனெனில் திட்டமிட்டு ஏமாற்றி பொய்யாக உருவாக்கப்பட்ட மார்க்கம் நீண்ட நாட்கள் நிலைபெற்றதாக வரலாறு (வரலாற்று சாத்தியமற்றது) என்றுமே கண்டதில்லை. ஆனால் இந்த இஸ்லாமிய மார்க்கம் 13 நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கின்றது என்பது மட்டுமின்றி இன்று வரை நாளுக்கு நாள் (மெருகேறிய புதுப்பொழிவுடன்) இஸ்லாத்தில் மக்கள் நுழைந்த வண்ணமே உள்ளனர். ஒரு சூழ்ச்சிக்காரனோ, தந்திரக்காரனோ உலக வல்லரசுகளில் ஒரு வல்லரசை உருவாக்கினான் என்றோ அல்லது போற்றத்தக்க ஒரு நாகரீகத்தை உண்டாக்கிச் சென்றான் என்றோ வரலாற்றுப் பக்கங்கள் ஒரு உதாரண புருஷனை எமக்குத் தந்ததில்லை.



# நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்று சாட்சியம் பகர்வதின் கருத்து:

01 நபி (ஸல்) அவர்களின் தூதுத்துவம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினருக்கு அல்லது ஒரு குறிப்பிட்ட நாட்டவருக்கு அல்லது குறிப்பிட்ட காலத்தவருக்கு மாத்திரம் சொந்தமானது என்று நம்பாமல் அத்தூதுத்துவம் கியாமநாள் வரை உள்ள அனைத்து மக்களுக்கும் அனைத்து நாட்டவருக்கும், எல்லா காலத்தவருக்கும் பொதுவானது என்று உண்மையாக நம்புவது.

இது பற்றி அல்லாஹ் குறிப்பிடுகின்றான்: தன் அடியார் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது அசத்தியத்திலிருந்து சத்தியத்தை பிரித்தறிவிக்கும் ஃபுர்கானை அது அகிலத்தார்க்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யக்கூடியதாக ஆவதற்காக இறக்கி வைத்தானே அத்தகையோன் மிக்க பாக்கியமுடையவன். (அல்ஃபுர்கான் 1)

02 அல்லாஹ்விடமிருந்துள்ள செய்திகளை மனிதர்களுக்கு எத்திவைப்பதில் மிகப் பிரயத்தனமானவர்கள் நபி (ஸல்) அவர்கள் என்று உறுதியாக நம்புவது. இது பற்றி அல்லாஹ் கூறும்போது: அவர் தம் மன இச்சையின்படி (எதையும்) பேசுவதுமில்லை இது அறிவிக்கப்படும் (வஹீ) அறிவிப்பே தவிர வேறு ஒன்றுமில்லை (அந்நஜ்மு 3-4).

இதுவல்லாத ஏனைய அவர்களது விடயங்களில் அவர்கள் ஒரு சாதாரண மனிதராகவே செயல்படுவார்கள் அவர்களுக்கு முன் சமர்பிக்கப்படும் சில பிரச்னைகளுக்கு அவர் தாமாக ஆராய்ந்து தீர்ப்பு வழங்குபவர்களாக இருந்துள்ளார்கள்.

இது பற்றி அவர்கள் குறிப்பிடும்போது: நிச்சயமாக நீங்கள் என்னிடத்தில் முறையீடுகள் செய்கின்றீர்கள் அது விடயத்தில் உங்களில் சிலர் சிலரைவிட வாதத் திறமையைக் கொண்டு நிரூபிக்கும் தன்மையை பெற்றிருக்கலாம், எனவே நான் அவரிடமிருந்து எதைக் கேட்டேனோ அதனை அடிப்படையாக வைத்தே அவருக்குத் தீர்ப்பு வழங்குவேன். எனவே யாரொருவருக்கு அவனது சகோதரனுக்கெதிராக அவரது சொத்திலிருந்து எடுத்துக் கொடுத்தேனோ அதை அவர் எடுக்க வேண்டாம் ஏனெனில் நான் அவருக்கு எடுத்துக் கொடுத்ததெல்லாம் நரக நெருப்பின் ஒரு துண்டாகும். (புஹாரி, முஸ்லிம்)

03 நபி (ஸல்) அவர்களது நபித்துவ வருகை முழு மனித சமுதாயத்தினருக்கும் அருளாகும் என்று நம்புவது: இது பற்றி அல்லாஹ் குறிப்பிடும்போது: நபியே உம்மை மனித சமுதாயம் முழுவதிற்கும் அருளாகவே அன்றி நாம் அனுப்பவில்லை. (அல் அன்பியா 107)

அல்லாஹ் கூறியது முற்றிலும் உண்மையே! ஏனெனில் இச்சொல் ஏந்தி நிற்கின்ற அனைத்து அர்த்தங்களின்படியும் அவர்கள் ஒரு அருளாகவே இருந்தார்கள். ஏனெனில் நிச்சயமாக அவர்கள் மனிதனுக்கு மனிதன் கீழ்ப்படிவதிலிருந்து அவனை வெளியாக்கி, மனிதனுடைய இறைவனை கீழ்ப்படியச் செய்தார்கள். மேலும் மதங்களின் அழிவிலிருந்து காப்பாற்றி நேர்மையான இஸ்லாத்தின் பால் வழிகாட்டினார்கள். நெருக்கடியான உலகவாழ்க்கையை விட்டும், விசாலமான மறுமையின் பக்கம் அழைப்புவிடுத்தார்கள்.

04 மேலும் நபி முஹம்மத் (ஸல்) அவர்களே நபிமார்களில் இறுதியானவர்கள் என்றும், சிறந்தவர்கள் என்றும் அவர்களுக்குப்பின்னால் எந்த ஒரு நபியோ, ரஸூலோ வரமாட்டார்களென்றும் உறுதியாக நம்பவேண்டும். அல்லாஹ் கூறுகிறான்: உங்களின் ஆண்களின் எவருக்கும் முஹம்மத் தந்தையாக இருக்கவில்லை, இருந்தும் அவர் அல்லாஹ்வின் தூதரும், நபிமார்களின் இறுதியானவருமாவார். (அல் அஹ்ஸாப் 40)

இது பற்றி நபி (ஸல்) அவர்கள் கீழ்வருமாறு குறிப்பிட்டார்கள்: நான் ஏனைய நபிமார்களை விடவும் ஆறு விடயங்களைக்

கொண்டு சிறப்பிக்கப்பட்டுள்ளேன். குறைந்த சொல்லில் நிறைந்த அர்த்தம் இருக்கும்-இரத்தினச்சுருக்கமான சொல்வளம் கொடுக்கப்பட்டுள்ளேன். எதிரிகள் என்னைப் பற்றி கேள்விப்பட்டு அஞ்சும்படி நான் உதவி செய்யப்பட்டுள்ளேன். யுத்தத்தில் பெறப்படும் கனீமத் (எதிரிகள்விட்டுச்செல்லும்) பொருட்கள் எனக்கு ஹலாலாக்கப்பட்டுள்ளது. பூமி முழுவதும் எனக்கு தொழுமிடமாகவும் சுத்தம்செய்யும் இடமாகவும் ஆக்கப்பட்டுள்ளது. படைப்பினம் அனைத்திற்கும் தூதராக அனுப்பப்பட்டுள்ளேன், என்னைக் கொண்டு நபிமார்களுக்கு முத்திரையிடப்பட்டுள்ளது. (முஸ்லிம்)

05 நிச்சயமாக இஸ்லாமிய மார்க்கம் அவர்களைக் கொண்டு பரிபூரணப்படுத்தப்பட்டு நிவர்த்தி செய்யப்பட்டுவிட்டது என்று உறுதியாக நம்புவது: எனவே யாருக்கும் இதில் கூட்டவோ, குறைக்கவோ அதிகாரம் கிடையாது. அல்லாஹ் கூறுகிறான்: இன்றைய தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை நான் பரிபூரணப்படுத்திவிட்டேன், என்னுடைய அருட்கொடையை உங்களின் மீது முழுமையாக்கி விட்டேன், இன்னும் உங்களுக்காக இஸ்லாத்தை மார்க்கமாக நான் பொருந்திக்கொண்டேன். (அல் மாயிதா: 3)

அரசியல், பொருளாதாரம், சமூகம், பண்பாடு என்று வாழ்க்கையின் அனைத்துத்துறைகளுக்குமாக இஸ்லாத்தின் பூரணத்துவத்தை குறிப்பிடுவதாகும். இஸ்லாம் என்பது மார்க்கமும் அதன்படியான ஆட்சியுமாகும்.

இதுபற்றி (Kwelem) என்ற ஆங்கில சிந்தனையாளர் இஸ்லாமியக் கொள்கை என்ற தமது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். அல்குர்ஆன் சட்டங்கள், கடமை, ஒழுங்கு முறைகள், மார்க்க விடயங்கள் மாத்திரம் உள்ளடக்கிய ஒரு புத்தகம் கிடையாது, மாறாக அது இஸ்லாமிய உலகிற்கான ஒரு பொதுவான சட்டக்கோவையும், யாப்புமாகும். மேலும் அது நகர, பொருளாதார, குற்றம், தீர்ப்பு, தண்டனை போன்ற விடயங்களுக்கெல்லாம் ஒரு பூரணத்துவமான சட்டயாப்பும். பின்பு அது ஒரு மார்க்கச்சட்டக்கோவையுமாகும், சட்டக்கோவையை அடிப்படையாகக்கொண்டே மார்க்க விடயம் முதல் உலக வாழ்க்கையின் அனைத்து விடயத்தின் மீதும்

செயல்படுத்தப்படுகின்றது. உயிரை காப்பது தொடக்கம், உடல்களின் ஆரோக்கியம் வரை, தனது கண்காணிப்புக்கு கீழ் உள்ளவர் தொடக்கம் மற்றைய அனைத்து மனிதர்கள் மீதுமான உரிமைகளை பாதுகாப்பது வரை, தன்னலம் பேணல் முதல் பிறர் நலம் பேணல் வரை, நன்மை முதல் தவறுகள் வரை, இவ்வுலகில் தண்டனை நிறைவேற்றுவது முதல் மறுமையில் தண்டனை வழங்கப்படுவது வரை, இப்படி அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய ஒரு சம்பூரண யாப்பாகும். இதனடிப்படையில் பார்க்கின்றபோது அல்குர்ஆன் இஞ்ஜீலை விட்டும் மாற்றமானதாகும்.. ஏனெனில் அவ்விஞ்ஜீலில் மார்க்கத்தின் அடிப்படைகள் எதுவுமே கூறப்படவில்லை, அது மாத்திரமின்றி பெரும்பாலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதெல்லாம் கட்டுக்கதைகளும், பொய்களும்தான். அது பயனற்றது, மேலும் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாதது.

06 அவர்கள் தம்மீது அல்லாஹ்வால் சுமத்தப்பட்ட தூதுத்துவப் பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்றினார்கள் என்றும், இறைத்தூதை எத்திவைத்தார்கள் என்றும், தமது சமூகத்தினருக்கு போதனை செய்தார்களென்றும் உறுதியாக நம்புவது. மேலும் அவர்கள் எந்த ஒரு நன்மையையும் ஏவாமல் இருந்ததில்லை அதுபோல் எந்த ஒரு தீமையையும் தடுக்காமல் இருந்ததில்லை. இது சம்பந்தமாக நபி (ஸல்) அவர்கள் இறுதி ஹஜ்ஜின்போது ஆயிரக்கணக்கான தனது தோழர்களுக்கு உரை நிகழ்த்திய சமயத்தில், மக்களே! நான் அனைத்து விடயங்களையும் எத்தி வைத்துவிட்டேனா? என்று கேட்டபோது அவர்கள் கூறினார்கள், ஆம்! என்பதாக பின் நபி (ஸல்) அவர்கள் இறைவா! நீயே இதற்கு சாட்சியாக இருப்பாயாக என்று கூறினார்கள். (முஸ்லிம்)

07 முஹம்மத் (ஸல்) நபியாக அனுப்பப்பட்ட பிறகு அவர்களுக்கு அல்லாஹ்வால் இறக்கப்பட்ட மார்க்க சட்டதிட்டங்கள்தான் அவனிடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், அங்கீகரிக்கப்பட்டதுமாகும் என்று நம்பவேண்டும். எனவே நபி (ஸல்) அவர்கள் மூலமாக அல்லாஹ் வழங்கிய மார்க்க சட்டதிட்டங்களுக்கு மாற்றமாக வேறு மார்க்க சட்ட திட்டங்களின் அடிப்படையில் எவனொருவன்

அல்லாஹ்வை வணங்குகிறானோ அது அவனிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலும் நபி (ஸல்) அவர்களுக்கு பிறகுள்ள மனித சமுதாயத்தினர் அவர்களுக்கு வழங்கப்பட்ட இம்மார்க்க சட்டதிட்டங்களுக்கு இணங்கவே நாளை மறுமையில் விசாரிக்கப்பட்டு கூலியும் வழங்கப்படுவார்கள்.

இதுபற்றி அல்லாஹ் கூறுகிறான்: இன்னும் இஸ்லாம் அல்லாததை மார்க்கமாக எவராவது தேடினால், அப்பொழுது அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்படவே மாட்டாது. மேலும் மறுமையில் அவர் நஷ்டமடைந்தோரில் இருப்பார். (ஆல இம்ரான் 85)

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: முஹம்மதின் உயிர் எவன் கைவசமிருக்கிறதோ அவன் மீது சத்தியமாக இந்த உம்மத்தைச் சேர்ந்த எந்த ஒரு யூதனோ, கிருஸ்துவனோ என்னைப்பற்றி கேள்விப்பட்டு எதைக் கொண்டு நான் அனுப்பப்பட்டுள்ளேனோ (அல்குர்ஆன்) அதை ஈமான் (நம்பிக்கை) கொள்ளவில்லையோ அவன் நரகவாதியாகவே இருப்பான். (முஸ்லிம்)

08 நபி முஹம்மது (ஸல்) அவர்களுக்கு வழிப்பட்டு நடத்தல்: அல்லாஹ் கூறுகிறான், மேலும் எவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கீழ்ப்படிந்து நடக்கின்றார்களோ அவர்கள் நபிமார்கள், சத்தியவான்கள், ஜிஹாதில் உயிர் நீத்த (ஷஹீதுகள்) நல்லடியார்கள் ஆகியோர்களில் எவர்கள் மீது அல்லாஹ் அருள் செய்திருக்கின்றானோ அத்தகையோர்களுடன் (சுவனத்தில்) இருப்பார்கள். மேலும் தோழமைக்கும் இவர்கள் அழகானவர்கள். (அந்நிஸா 69)

அவர்களுக்கு வழிப்படுவதென்பதன் கருத்து யாதெனில் அவர்கள் எதை ஏவினார்களோ அதை எடுத்தும், எதை தவிர்ந்து நடக்கும்படி கூறியிருந்தார்களோ அதை தவிர்ந்தும் நடப்பதாகும். அல்லாஹ் கூறுகிறான்: மேலும் நம்முடைய தூதர் உங்களுக்கு எதைக் கொடுத்தாரோ அதை நீங்கள் (மனமொப்பி) எடுத்துக்கொள்ளுங்கள் அவர்கள் எதனை விட்டும் உங்களைத் தடுத்தாரோ அதிலிருந்து நீங்கள் விலகிக்கொள்ளுங்கள். (அல்ஹஷ்ர் 7)

மேலும் நபி (ஸல்) அவர்களுக்கு மாறுசெய்வதால் ஏற்படக்கூடிய

விளைவுகளைப்பற்றி அல்லாஹ் குறிப்பிடும்போது: இன்னும் எவர் (இவ்விசயங்களில்) அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் மாறு செய்து (அல்லாஹ்வாகிய) அவன் (ஏற்படுத்திய) வரம்புகளை மீறி விடுகின்றாரோ அவரை (அல்லாஹ்வாகிய) அவன் நரகத்தில் புகுத்திவிடுவான். அதில் அவர் நிரந்தரமாகத்தங்கியிருப்பார். இன்னும் அவருக்கு இழிவுபடுத்தும் வேதனையும் (அதில்) உண்டு. (அந்நிஸா 14)

09 நபி (ஸல்) அவர்களின் தீர்ப்பு மற்றும் சட்டதிட்டங்களை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதோடு அவர்கள் மார்க்கமாக்கிய மற்றும் அவர்களின் வழிமுறைகளை உதாசீனம் செய்யாதிருத்தல்: இது பற்றி அல்லாஹ் கூறுகிறான்: ஆனால் உமதிரட்சகன் மீது சத்தியமாக. அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவில் உம்மை நீதிபதியாக ஆக்கி, நீர் செய்யும் தீர்ப்பைத் தங்கள் மனங்களில் எத்தகைய அதிருப்தியுமின்றி முற்றிலும் ஏற்றுக்கொள்ளாத வரையில் அவர்கள் விசுவாசிகளாக மாட்டார்கள். (அந்நிஸா 65)

இதுபோலவே நபி (ஸல்) அவர்களின் மார்க்க சட்டதிட்டங்கள், வழிமுறைகள் எல்லாவற்றையும் ஏனைய மார்க்கச்சட்ட திட்டங்கள், வழிமுறைகள், ஒழுங்குகள், தீர்ப்புகள் அனைத்தையும் விட முற்படுத்தி முன்னுரிமை வழங்கவேண்டும். இதுபற்றி அல்லாஹ் குறிப்பிடுகின்றான்:அறியாமை காலத்துத் தீர்ப்பையா அவர்கள் தேடுகின்றனர்? உறுதியாக நம்பிக்கை கொண்ட சமூகத்தார்க்குத் தீர்ப்பளிப்பதில் அல்லாஹ்வை விடவும் மிக்க அழகானவர் யார்? (அல் மாயிதா 50)

10 நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரங்களை பின்பற்றி நடப்பது: இது பற்றி அல்லாஹ் கூறுகிறான்: நபியே மனிதர்களிடம் நீர் கூறுவீராக நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னை நீங்கள் பின்பற்றுங்கள் (அவ்வாறு) நீங்கள் செய்தால் உங்களை அல்லாஹ் நேசிப்பான், உங்கள் பாவங்களையும் உங்களுக்காக அவன் மன்னித்து விடுவான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவன், மிக்க கிருபையுடையவன் (அல் மாயிதா 31).

மேலும் அன்னாரது அடிச்சுவடுகளை பின்பற்றி அவர்கள் காட்டிய வழிமுறையின்படி வாழ்ந்து, முடிந்தவரை அனைத்து விடயங்களிலும் அவர்களை முன்மாதிரியாகக்கொண்டு நடக்கவேண்டும்.

இது பற்றி அல்லாஹ் கூறும்போது: உங்களில் அல்லாஹ்வையும், மறுமைநாளையும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வை அதிகமதிகமாக நினைவு கூர்பவராக இருப்பவருக்கு, அல்லாஹ்வின் தூதரிடத்தில் திட்டமாக உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது (அல் அஹ்ஜாப் 21).

எனவே நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி வாழ வேண்டுமெனில் அன்னாரது வாழ்க்கை வரலாற்றை படிப்பது அவசியமாகும். ஏனெனில் அப்போதுதான் முழுமையான முறையில் அவர்களை பின்பற்றலாம். இதுபற்றி அலி (ரலி) அவர்களின் பேரனின் பேரன் (ஜைனுல் ஆப்தீன்) என்பவர் கூறும்போது. நாங்கள் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை, அல்குர்ஆன் சூராவை (அத்தியாயத்தை)க் கற்றுக் கொடுப்பதைப் போல கற்றுக் கொடுப்பவர்களாக இருந்தோம். (நூல் அல் பிதாயாவன்னிஹாயா 3-242)

11 நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் எந்த அந்தஸ்த்தை கொடுத்தானோ அதே அந்தஸ்த்தை நாமும் வழங்கவேண்டும். அதை விட்டுவிட்டு அவர்களுக்கு அளவு கடந்த (வரம்பு மீறிய) அந்தஸ்த்தை வழங்குவதோ அல்லது அவர்களை குறைத்து மதிப்பிடுவதோ கூடாது.

இது பற்றி நபி (ஸல்) அவர்களே கூறினார்கள்: மர்யமின் மகன் ஈஸாவை கிருஸ்தவர்கள் அளவு கடந்து புகழ்ந்ததைப் போல் (அல்லாஹ்வின் அந்தஸ்த்திற்கு உயர்த்தியதைப் போல்) என்னையும் புகழாதீர்கள் ஏனெனில் நான் அவனது அடிமையே! எனவே நீங்கள் கூறுங்கள்: அவர் அல்லாஹ்வின் அடியாரும், திருத்தூதருமாவார்கள் என்று. (புஹாரி)

12 நபி (ஸல்) அவர்கள் மீது சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக என்று அவர்களுக்காக பிரார்த்தித்தல். அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக அல்லாஹ்வும், அவனுடைய மலக்குகளும் நபியின் மீது ஸலவாத்து (அருள்வேண்டி பிரார்த்தனை) செய்கிறார்கள், ஆகவே விசுவாசிகளே! நீங்களும் அவர் மீது ஸலவாத்துச்

சொல்லுங்கள், ஸலாமும் கூறுங்கள் (அல் அஹ்ஜாப் 56) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், உலோபி யாரெனில் எவன் முன் என் பெயர் கூறப்பட்டு என் மீது ஸலவாத்துச் சொல்லவில்லையோ அவனே! (திர்மிதி).

13 எல்லோர்களை விடவும் நபி (ஸல்) அவர்களை நேசிப்பது அவர்களை மேன்மைப்படுத்துவது. ஏனெனில் இம்மை மறுமையின் வெற்றிகள் சந்தோஷங்கள் அனைத்திற்கும் காரணமான இந்த உண்மையான மார்க்கத்தின் பக்கம் மக்களை வழிகாட்டிய சிறப்பு அல்லாஹ்வுக்குப் பிறகு எம்பெருமானாரையேச் சாரும்.

இது பற்றி அல்லாஹ் கூறுகிறான்: நபியே விசுவாசிகளிடம் நீர் கூறுவீராக: உங்களுடைய தந்தைகளும், உங்களுடைய ஆண்மக்களும், உங்களுடைய சகோதரர்களும் நீங்கள் எதனை சம்பாதித்து வைத்திருக்கின்றீர்களோ அந்தச் செல்வங்களும், நீங்கள் எதனுடைய நஷ்டத்தைப் பயப்படுகிறீர்களோ அத்தகைய வியாபாரமும், நீங்கள் எதனைத் திருப்திப்படுகிறீர்களோ அத்தகைய (உங்கள்) குடியிருப்பிடங்களும், அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், அவனுடைய பாதையில் போர் செய்வதையும் விட உங்களுக்கு மிக்க விருப்பமானவைகளாக இருந்தால். அப்போது நீங்கள் (தண்டனையைப்பற்றிய) அல்லாஹ்வுடைய கட்டளை வரும் வரையில் எதிர்பார்த்திருங்கள் மேலும் பாவிகளான அக்கூட்டத்தினரை, அல்லாஹ் நேர் வழியில் செலுத்தவும் மாட்டான். (அத்தவ்பா 24)

மேலும் அவர்களை நேசிப்பதால் என்ன நன்மைகள் இருக்கின்றதென்பதை விளக்கியும் உள்ளனர். மறுமை எப்போது நிகழும் என்று கேட்ட ஒரு மனிதரிடம் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அம்மறுமைக்காக நீ என்ன (நன்மைகள்) தயார் படுத்தி வைத்துள்ளாய்? என்ற போது அம்மனிதர் அமைதிகாப்பவரைப்போல் இருந்து விட்டு, இறைவனின் தூ தரே! பெரிதாக நோன்பு, தொழுகை, தர்மம் (ஜக்காத்) போன்றவைகளை ஏற்பாடு செய்யவில்லை, இருந்தும் நான் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் நேசிக்கின்றேன் என்று கூறினார். நபி (ஸல்) அவர்கள் அவரை நோக்கி: நீர் யாரை நேசித்தீரோ மறுமையில் அவர்களுடன் இருப்பாய் என்றுகூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவரிடத்தில் மூன்று பண்புகள் இருக்கின்றதோ அவர் அவைகள் மூலம் ஈமானின் இனிமையை பெற்றுக் கொள்வார். (அ)-அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் எல்லோரைவிடவும் மிக நேசத்துக்குரியவர்களாக அவனுக்கு இருக்க வேண்டும். (ஆ)-அவன் ஒருவனை நேசிப்பது அல்லாஹ்வுக்காக வேண்டியே மட்டும் இருக்கவேண்டும். (இ)-அவன் நெருப்புக்குண்டத்தில் எறியப்படுவதை வெறுப்பதைப் போல் (குப்ரை) இறை நிராகரிப்பை விட்டும் அல்லாஹ் அவனை காத்த பிறகு அதன் பக்கம் மீண்டும் செல்வதை வெறுக்கவேண்டும். (புஹாரி, முஸ்லிம்)

எனவே நபி (ஸல்) அவர்களை நேசிப்பதின் அடையாளமே அவர்கள் யாரையெல்லாம் நேசித்தார்களோ, மேலும் யாரையெல்லாம் நேசிக்கும்படி கூறினார்களோ (உதாரணம்) அன்னாரது குடும்பத்தினர், மனைவியர், (முஃமீன்களின் தாய்மார்கள்) அன்னாரது தோழர்கள் போன்றோர்களை நேசிப்பதும், மேலும் யாரையெல்லாம் வெறுத்தார்களோ, வெறுக்கும்படி கூறினார்களோ அவர்களை வெறுத்து நடப்பதுமாகும்.

ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் ஒருவரை நேசித்தால் அல்லாஹ்வுக்காகவே நேசிப்பார்கள், கோபித்தால் அல்லாஹ்வுக்காகவே கோபிப்பார்கள்.

14 அன்னாரது மார்க்கத்தின் பக்கம் மக்களை அழைப்பது, அதைப் பரப்பும் முயற்சிகளில் ஈடுபடுவது, யாரையெல்லாம் சென்றடையவில்லையோ அவர்களிடம் அதை எத்திவைப்பது. மேலும் அறியாதவர்களுக்கும், பொடுபோக்காக விட்டிருப்பவர்களுக்கும், அதை பின்பற்றி வாழ்க்கையில் எடுத்து நடப்பவர்களுக்கும் தம்மாலான உதவிகளை செய்வதின் மூலமும், விவேகத்தோடும், சிறந்த போதனையின் மூலமும் நபி (ஸல்) அவர்களின் சுன்னாவை (வாழ்க்கையை) உயிர் பெறச்செய்வது.

இது பற்றி அல்லாஹ் கூறுகிறான்: நபியே! நீர் மனிதர்களை விவேகத்தைக் கொண்டும் மற்றும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டும், உமதிரட்சகனின் வழியின் பக்கம் அழைப்பீராக! (அந்நஹ்ல் 125).

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என்னைப்பற்றி ஒரு விடயம் தெரிந்தாலும் அதை மற்றவர்களுக்கு எத்திவையுங்கள். (புஹாரி)

15 நபி (ஸல்) அவர்களையும் அவர்களின் சுன்னாவையும் பாதுகாப்பது: அதாவது அவர்கள் பேரில் கூறப்படும் அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் மறுப்பதின் மூலமும், அவர்களை பற்றிய உண்மையை அறியாதவர்களுக்கு அவர்கள் பற்றி தெளிவுபடுத்துவதின் மூலமும், மேலும் அதே போல் அன்னாரது (சுன்னாவை) - சொல், செயல், அங்கீகாரங்களைப் - பற்றி இஸ்லாத்தின் எதிரிகள் கட்டவிழ்த்து விட்டிருக்கும் ஐயப்பாடுகளை விட்டும் தெளிவுபடுத்தி பாதுகாப்பது கடமையாகும்.

16 நபி (ஸல்) அவர்களின் சுன்னாவை பற்றிப்பிடித்து வாழ்வது: ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், எனது வழிமுறையையும், நேர்வழி நடந்த ஆட்சியாளர்களின் வழிமுறையையும் கடைவாய்ப் பற்களால் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். மேலும் மார்க்கத்தில் புதுமைகளை பற்றி உங்களுக்கு நான் எச்சரிக்கிறேன். ஏனெனில் மார்க்கத்தில் அனைத்து புதுமைகளும் நூதனங்களாகும், அனைத்து நூதனங்களும் வழிகேடுகளே. (அஹ்மத்)

# முடிவுரை

நாம் இக்கட்டுரையை லா மார்தீன் என்ற பிரெஞ்சுக் கவிஞரின் வார்த்தைகளைக் கொண்டு முத்தாய்ப்பாக்குவோம் (முடிப்போம்). அவர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வல்லமையைப் பற்றி கூறும் போது: முன்னர் ஒரு காலகட்டத்திலும் ஒரு மனிதரிடமிருந்து அவர் விரும்பியோ, விரும்பாமலோ இப்படியான ஓர் உயர்ந்த பணி நிகழவில்லை. ஏனெனில் அப்பணி மனித சக்தியை தாண்டிய ஒன்றாக இருந்தது. அப்பணியைக் கொண்டு மனிதனுக்கும், இறைவனுக்கும் மத்தியில் தடையாக இருந்த வழிகேடுகளைத் தீர்த்துக்கட்டி அல்லாஹ்வை மனிதனுடனும், மனிதனை அல்லாஹ்வுடனும் தொடர்பு படுத்தினார்கள். மேலும் அதைக் கொண்டே வணங்குவதற்குத் தகுதியானவன் இறைவன் மாத்திரமே என்ற சிந்தனைக்கு நேர்வழியை, புனிதத்துவத்தை மீட்டித்தந்தார்கள். அச்சமுதாயம் அப்போது பல தெய்வ வழிபாட்டில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது.

எளிய சாதனங்களை குறைந்த வசதிவாயப்புகளை வைத்துக்கொண்டு, மனித சக்திகளை வென்றிட ஒருவர் முன் வந்தார் என்பது இதற்கு முன்னர் வரலாற்றில் என்றுமே நிகழ்ந்ததில்லை. அதாவது அவர்கள் இப்பிரமாண்டமான பணியை செயல்படுத்திட தன்னையே முழுவதும் சார்ந்திருந்தார்கள். மேலும்பரந்துவிரிந்த அப்பாலைவனத்திலே அவருக்கு இப்பணியில் உதவிட, அவர்களை ஈமான் கொண்ட விரல்விட்டு எண்ணக் கூடிய சிலரைத்தவிர வேறு யாரும் இருக்கவில்லை. இறுதியாக இதுபோன்ற பிரமாண்டமான முடிவே இல்லாத புரட்சியை, உலகம் முழுக்க ஒரே தருணத்தில் ஒரு மனிதர் செய்ய சக்தி பெற்றார் என்ற நிகழ்வு இதுவரை இவருக்கு முன்னோ, பின்னோ நிகழ்ந்ததில்லை. ஏனெனில் இஸ்லாம் மலர்ந்து இரண்டே நூற்றாண்டுகளில் முன்னரே ஈமான் (இறை நம்பிக்கை),

ஆயுதம் மூலமாக அரேபிய தீபகற்பம் முழுவதையும் தன் ஆளுகைக்கு கீழ் கொண்டு வந்தது. பின் அல்லாஹ்வின் பெயரால் போர் மேற்கொண்டு, பாரீஸ், ரோம், குராசான், ஈராக், மேற்கிந்தியா, மத்திய கடல் தீவுகள், ஸ்பெய்ன், பிரான்சு நாட்டின் சில பகுதிகள் வரை பரந்து விரிந்த ஒரு நிலப்பரப்பை தன் ஆளுகைக்குக் கீழ் கொண்டு வந்தது.

மனித விவேகத்திற்கான மூன்று அளவு கோள்களான(மகத்தான நோக்கம், பலவீனமான காரணிகள், வியக்கத்தக்க ஆக்கம்) இவைகளை நாங்கள் கவனத்தில் கொண்டால், புதிய வரலாற்றிலே முஹம்மத் (ஸல்) அவர்களுடன் எந்த ஒரு மகத்தான மனிதரையும் தொடர்பு படுத்திப் பார்க்க யார் தான் முன்வருவார்? இத்தகைய தலைவர்கள் ஆயுதங்களை, சட்டங்களை வல்லரசுகளை மாத்திரம்தான் உருவாக்கினார்கள். அவர்கள் வெறும் இலவ்கீக உருவகங்களை மாத்திரம்தான் உண்டாக்கினார்கள். பெரும்பாலான நேரங்களில் அவர்கள் கண்முன்னாலேயே அவைகள் அனைத்தும் அழிந்தும் போயின.

ஆனால் முஹம்மத் (ஸல்) என்ற அந்த மனிதரோ படைகளை, மதங்களை, மார்க்கங்களை, வல்லரசுகளை, கோத்திரங்களை, சிற்றரசுகளை மாத்திரம் உசுப்பிவிடவில்லை, மாற்றமாக இவைகளுடன் கூடவே அக்காலகட்டத்தில் உலகின் முக்கால்வாசிப் பகுதிகளில் வசித்துக் கொண்டிருந்த கோடிக்கணக்கான மக்களையும் உசுப்பிவிட்டிருந்தார்கள். மேலும் ஒவ்வொரு வசனங்களும், ஒரு சட்டமாக இருக்கும் அல்குர்ஆனின் நேர் வழியின் மீது கொள்கைகள், கோட்பாடுகள், மதங்கள், மதகுருமார்கள், புனிதஸ்தலங்கள் அனைத்தையும் உசுப்பிவிட்டார்கள். ஒரு உயிரோட்டமுள்ள சமுதாயத்தை உருவாக்கினார்கள். அச்சமுதாயம் இனம், நிறம், மொழி என்ற வேறுபாடின்றி இரண்டரக் கலந்திருந்தது. ஒரே இறைவனை வணங்கி, அவனுக்கு எந்த ஒன்றையும் இணையாக்குவதை வெறுக்கக்கூடிய ஒரு தனித்துவத்தையும் எங்களிலே விட்டுச் சென்றார்கள். விண்ணையும், மண்ணையும் மாசுபடுத்திவிடக்கூடிய பொய்யான உருவ வழிபாடுகள், இறைவனுக்கு ஏதாவதொன்றை

பகரமாக வைத்து வணங்குதல் போன்றவற்றை மிகக்கடுமையாக எதிர்த்து நின்றார்களென்பதைக் கொண்டே முஹம்மத் (ஸல்) அவர்களை முஃமீன்கள் இனம் கண்டார்கள். உலகின் முக்கால் வாசிக்கும் அதிகமானவர்கள் அவரது மார்க்கத்தில் நுழைவதற்கு காரணமாக இருந்தது அவரது அற்புதமே. அல்ல! அல்ல! மிகச்சரியாக சொல்வதாக இருந்தால் அவரது விவேகத்தின் அற்புதமே.

அன்றைய காலமக்கள் பெரும் அற்புதமாக கருதிவந்த சிலை வணக்க வழிபாடுகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் இவைகளுக்கு மத்தியில் அவர் அழைப்பு விடுத்த ஓர் இறைக்கொள்கையானது, அதை மொழிந்த மாத்திரத்திலேயே விக்ரக சிலை வணக்கஸ்தலங்கள் அனைத்தும் அழிந்து போயின. நிச்சயமாக உலகில் அவர்களது வாழ்க்கையும், அது பற்றிய ஆழமான சிந்தனைகளும், வழிகேட்டிற்கும், பொய்ப் பித்தலாட்டங்களுக்கும் எதிரான அவர்களது வீரத்தனமான போராட்டமும், புரட்சியும், சிலைவணங்கிகளின் சவால்களுக்கு அவர் முகம் கொடுத்தும், மக்காவில் தொடர்ந்து 13 வருடகால இன்னல்கள், துன்பங்களின் போது அவர்களது உறுதியான சகிப்புத்தன்மையும், தமது பணியைத் தொடர்ந்து செய்து கொண்டே, தமது சமுதாயத்தவரின் அநீதிகளையும், அவர்களது பழிவேற்கைகளை அவர் பொருத்துக் கொண்டதும், அறியாமைக்கால பழக்க வழக்கம், மோசமான குணங்களுக்கு எதிரான அவர்களது அறப்போராட்டமும். மேலும் தமது பணியில் தாம் வெற்றி பெறுவோம் என்ற அவரது மன அமைதியும், வெற்றியின் போது அவரது பணிவுத்தன்மையும், பெயரையோ, புகழையோ நாடாமல் தமது ஒருமித்த சிந்தனைமீதுள்ள ஒரே நோக்கமும், இடைவிடாத அவர்களது (இறைதியானம்) தொழுகையும், இறைவனிடம் அவர்களது யாசிப்பும், அவர்களது மரணமும், அவர்களது மரணத்திற்குப் பின்னால் அடையப்பட்ட மாபெரும் வெற்றிகளும் ஆக மொத்தத்தில் நாம் ஒரு பொய்யரை பின்பற்றவில்லை. நாங்கள் அசைக்க முடியாத உறுதியான ஈமானின் மீது இருக்கின்றோம் என்பதற்கும் சான்றுகளாக திகழ்கின்றது.

மேலும் அவர்கள் தமது ஆற்றல்களையெல்லாம் மார்க்கத்தை நிலை பெறச்செய்வதற்காக பயன்படுத்தினார்கள். அவர்களது

கொள்கையை இரண்டு அடிப்படைகளின் மீது கட்டியெழுப்பினார்கள். ஒன்று நிச்சயமாக அல்லாஹ் ஒருவன் என்பதிலும், மற்றது அவனை கண்களால் இவ்வுலகில் காணமுடியாது என்பதிலுமாகும். எனவே முதல் அடிப்படையின் மூலமாக அல்லாஹ் என்பவன் யார்? என்பதை நாங்கள் அறிந்தோம், இரண்டாவது அடிப்படையோ மறைவானதைக் கொண்டு அறிவை தொடர்பு படுத்துகிறது. நிச்சயமாக அவர் ஓர் தத்துவஞானி. பிரச்சாகர், சட்டமியற்றுபவர், போர்வீரர், வெற்றியாளர், சிந்தனையாளர், இறைத்தூதர், பகுத்தறிவு மார்க்கத்தை நிறுவியவர். மேலும் எந்தவித சிலையோ, உருவமோ இல்லாமல் வணக்கம் செலுத்தக் கற்றுத்தந்தவர், 20 வல்லரசுகளின் நிகரற்ற தலைவர், அதனோடு சேர்த்து எல்லையே இல்லா ஆன்மீக வல்லரசின் தலைவரும் கூட. இவர்கள் தான் அந்த முஹம்மது (ஸல்) அவர்கள், எனவே மனிதனின் மகத்துவத்திற்கான அனைத்து அளவு கோள்களையும் வைத்து நாம் ஒருவரை நோக்கினால் முஹம்மது (ஸல்) அவர்களை விட மகத்தான ஒருவர் இருக்கமுடியுமா என்பதை நம்மை நாமே கேட்டுக்கொள்வோம்.

இறைவனின் தூதரே! எனது தாயும், தந்தையும் அர்ப்பணமாகட்டும். இச்சிறு நூலின் மூலமாக உங்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை முழுமையாக செய்து விடவில்லை என்பதனை முழு மனதுடன் நான் ஏற்றுக் கொள்கிறேன். எனவே இங்கு எவரது வருகையால் முன்பு இணைவைப்பாளர்கள் ஒளிபெற்றார்களோ, மேலும் எல்லாக் காலத்திலும் யாரெல்லாம் மனிதர்களை அடிமைப்படுத்தி தனது மனோ இச்சைக்கும், மிருகத்தனமான வெறிக்கும் அடிமைப்பட்டுக் கொண்டுமிருக்கின்றார்களோ அத்தகையவர்களும், எவரது வருகை மூலம் ஒளி பெறுவார்களோ, அத்தகைய நபியைப் பற்றி இறைத்தூ தரைப் பற்றி எழுதப்பட்டதெல்லாம் வெறும் சில வார்த்தைகளும் குறிப்பீடுகளும் மாத்திரமே.

மேலும் நான் இறைவனிடம் வேண்டுவதெல்லாம், இச்சிறு நூல் அம்மாமனிதர் பற்றிய தவறான கருத்துக்களை அவரை விட்டும் அகற்றுவதற்கும் எல்லாவிதமான நன்மைகளையும் ஏவி, எல்லாவிதமான தீமைகளை விட்டும் எச்சரித்த அம்மகத்தான மனிதரைப்பற்றி இன்னுமின்னும்,

அதிகமதிகம் அறிய ஓர் திறவு கோலாக இருக்க வேண்டும் என்பதே. மேலும் அவர்களுடைய சொல்லும், செயலும் இறைவனின் பொருத்தத்தையும், சுவர்க்கத்தையும் அடைந்து கொள்வதற்கான ஒழுங்குகளும், சட்டதிட்டங்களுமாக கணிக்கப்படுகின்றது. மேலும் எமது மூதாதையரின் அறிவற்ற கூற்றுகளை கண்மூடித்தனமாக பின்பற்றுவதை விட்டுவிட்டு அறிவோடும், சிந்தனையோடும் நாம் பின்பற்றக்கூடிய, எடுத்து நடக்கக்கூடிய விடயங்களை அடைந்துக் கொள்ள இன்று முதல் செயல் படுவோமாக.

முற்றும்





مركز أصول
Osoul Center
www.osoulcenter.com

IslamHouse.com

eDialogue
Interested in ISLAM?
Join For a Free Private Live Chat
edialogue org

For more details visit
www.GuideToIslam.com
GUIDE TO ISLAM
contact us :Books@guidetoislam.com

لدعم المركز
مصرف الراجحي
Al Rajhi Bank
SA148000 0296608010005372
احد برامج المكتب التعاوني للدعوة وتوعية الجاليات بالربوة

osoulcenter
+966504442532
www.osoulcenter.com

عرض تعريفي عن مركز أصول
ومجالاته ووحداته.. مشاهدة ممتعة لك

ISO 9001
حاصل على شهادة الاعتماد من الأيزو
حاصل على جائزة التميز في العمل الخيري

# நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்)

Downlad the book

www.guidetoIslam.com

مركز أصول
Osoul Center
www.osoulcenter.com

1 234567 890128 >